அக்டோபர் 2025

திராவிட வாசிப்பு

வாசிப்பும் மீள்வாசிப்பும்

வணக்கம்.

2019 ஆகஸ்ட் மாதத்தில் இருந்து திராவிட வாசிப்பு மின்னிதழ் வெளியாகிறது. எத்தனையோ சிறப்பிதழ்களை வெளியிட்டு இருக்கிறோம். ஆனால், ஒரு குறிப்பிட்ட பிரச்சனையை மையமாக வைத்து ஒரு சிறப்பிதழ் வெளியிடுவது இதுவே முதன்முறை. 27 செப்டம்பர் 2025 அன்று கரூரில், புதிய அரசியல் கட்சியான தமிழக வெற்றிக்கழகத்தின் கூட்டம் ஒன்றில், Stampede என்று சொல்லப்படும் கூட்ட நெரிசல் ஏற்பட்டு பத்து குழந்தைகள் உட்பட 41 உயிர்கள் பலியானது. இந்த சம்பவம் தமிழ்நாட்டை உலுக்கியது. அதன் அதிர்வுகள் இந்திய அளவிலும், உலக அளவிலும் எதிரொலித்தன. கரூர் கூட்டத்திற்கு முன்னாலும், கரூர் பெறுதுயரத்திற்கு பின்னாலும், தமிழ்நாட்டில் நடைபெறும் அரசியல், சமூக சூழ்நிலைகள் பல கேள்விகளை, சந்தேகங்களை, கரிசனத்தை உருவாக்கி இருக்கின்றது. குறிப்பாக GenZ என்று சொல்லப்படும் இளம் தலைமுறையின் மனப்போக்கை, அவர்களின் சினிமா மோகத்தை, அரசியல் குறித்த அவர்களது புரிதல் என பல விஷயங்கள் விவாதத்திற்கு உள்ளாகி இருக்கின்றன.

தமிழ்நாடு இந்திய அளவில் தனித்துவமான மாநிலம். அரசியல் ரீதியாக தமிழ்நாடு முற்போக்கானது, ஜாதி, மத அரசியலை மையப்படுத்தி இங்கே யாரும் ஜெயிக்க முடியாது என்று கூறிக்கொண்டாலும், முற்றிலும் அரசியலற்ற ஒரு தலைமுறை, அவர்களை வழிநடத்த கூடாது, அரசியல்மயப்படக்கூடாது என்றே தொடங்கப்பட்ட ஒரு கட்சி என்பது தமிழ்நாட்டுக்கு புதிது. அவர்களை புறம்தள்ளி, ஒதுக்கி வைத்து நம்மால் நகர முடியாது. மக்களாட்சியில் அனைவருக்கும் ஒரு ஓட்டு தான். ஆகவே, அவர்களை புரிந்துக்கொள்ள முயற்சிப்பதும், அவர்களை வழிநடத்தவும் நமக்கு கடமை இருக்கின்றது! அதன் வெளிப்பாடு தான் இந்த சிறப்பிதழ்.

கரூர் பெருந்துயரத்தை ஒட்டி சில தலைப்புகள் தந்து, கட்டுரைகளை தரவும் என ஒரு அறிவிப்பை வெளியிட்டு இருந்தோம். மொத்தம் 27 கட்டுரைகளுடன் இந்த இதழ் வெளியாகி இருக்கின்றது. இந்த கட்டுரைகளின் தலைப்புகளே, ஏன் இந்த இதழ் ஒரு முக்கிய ஆவணமாக திகழப்போகின்றது என்பதை சொல்லும்.

இந்த இதழுக்காக பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதித்தந்த தோழர்களுக்கு எங்களது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

திராவிட வாசிப்பு குறித்த உங்களது மேலான கருத்துகளை, விமர்சனங்களை எதிர்பார்க்கிறோம். கீழ்காணும் மின்னஞ்சலுக்கு உங்கள் கருத்துகளை சொல்லுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். நன்றி!

உங்கள் படைப்புகளையும், கருத்துகளையும் இந்த மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்: dravidavaasippu@gmail.com

கட்டுரைகளை திராவிட வாசிப்பு ஆன்லைன் பக்கத்திலும் வாசிக்கலாம்: https://blog.dravidiansearch.com/

இதுவரை வெளியான திராவிட வாசிப்பு மின்னிதழ்களை "கிண்டிலில்" வாசிக்க: https://www.amazon.in/s?i=digital-text&rh=p_27%3ADravida%2BVaasippu&s=relevancerank&text=Dravida+Vaasippu&ref=dp_byline_sr_ebooks_1

இதுவரை வெளியான திராவிட வாசிப்பு மின்னிதழ்களை "ஆன்லைனில்" வாசிக்க: *https://drive.google.com/drive/folders/1-6Sk8TylSzrCfiU0BJ-_Osvh7DRFCl0z?usp=sharing*

இப்படிக்கு,

திராவிட வாசிப்பு Editorial Team:

- *(அருண் ஆஷ்லி, அசோக் குமார் ஜெ, அஷ்வினி செல்வராஜ், தினேஷ் குமார், ஜெகன் தங்கதுரை, கதிர் ஆர்.எஸ்., மதுமலர், மனிதி தெரசா, இராஜராஜன் ஆர். ஜெ, டிமோத்தி, யூசுப் பாசித், விக்னேஷ் ஆனந்த், விஜய் ஜி.எஸ், பிரபு கணேஷ்)*

Karur Stampede: Why Cult Politics, Not DMK, Must Bear the Blame - Veeramani Mani
எம்ஜிஆர்-ரஜினிகாந்த்-விஜய் அரசியல் - வெங்கடேஷ் மோ
கரூர் பெருந்துயரமும் அதில் நாம் கற்றுக்கொண்ட படிப்பினைகளும் - ச சதிஷ்
வாசிப்பு மறையும் போது, விழிப்பு மங்குகிறது— முகிலினி
Gen Z, Gen Alpha தலைமுறை : ஒரு பகுப்பாய்வு - இனியன்
கல்வி மட்டும் போதுமா? சமூக விடுதலைக்கான பகுத்தறிவின் அவசியமும் அதன் ஆற்றலும் - *Nithyanandam Vms*
கல்வி மட்டும் போதுமா? பகுத்தறிவு அவசியமா? - முனைவர் கா. குமார்
கல்வி மட்டும் போதுமா? பகுத்தறிவு அவசியமா? - ராகவா தனபால்
கடைசி நாயகன் - சிரா
மௌன இளைஞர்கள் – பிலால் அலியார்
வாசிப்பு பழக்கம் இல்லாத, அரசியல் புரிதல் இல்லாத இளம்தலைமுறையினரை வழிநடத்துவது எப்படி? - சுந்தரவாணன் பாண்டியன்
Free Speech, Vulgarity and the Politics of Panic: Lessons from Karur Tragedy - Dhileepan Pakutharivu
சினிமா மோக இளைஞர்களை வழிநடத்த தவறி விட்டதா தமிழ்நாடு? - அ.ப.சிவா
வாசிப்பு பழக்கம் இல்லாத, அரசியல் புரிதல் இல்லாத இளம் தலைமுறையை வழிநடத்துவது எப்படி? – அ.இன்பன்
கரூர் பெருந்துயரம் - ரவி செல்வராஜ்
தமிழ்நாட்டு மாணவர்கள் அவர்களுக்கான அரசியல் பேச வேண்டும் - லோனா வெங்கிட்
கரூர் பெருந்துயர படிப்பினைகள் - *MURALIDHARAN PB*
வாசிப்பு பழக்கம் இல்லாத, அரசியல் புரிதல் இல்லாத இளம் தலைமுறையை வழிநடத்துவது எப்படி? - மு. சுமதி
தமிழ்நாட்டை சூழ்ந்திருக்கும் ஆபத்து - ஹாஜா பின் பாவா
When Corporate Vision Meets Political Virtue – Prem Murugan
வைப் கலாச்சாரம்தான் இந்த வைப்ரேஷனுக்கு காரணம் -ராஜா ராஜேந்திரன்
வாசிப்பு பழக்கம் இல்லாத, அரசியல் புரிதல் இல்லாத இளம் தலைமுறையை வழிநடத்துவது எப்படி? - லதா. எம்
ஜென் Z தலைமுறையின் மனநிலையை புரிந்து கொள்வது எப்படி? - ஜெ.வெ.நவீன்
பெரியார்... - பேராசிரியர் சக்திவேல் காந்தி
தமிழ்நாடு காக்கப்படட்டும்! – Rajarajan RJ
இடதுசாரி - வலதுசாரிகளின் ஒரு நூற்றாண்டு (1925 - 2025) வரலாறு - முனைவர் சிவ இளங்கோ
தமிழ்நாட்டின் தொழில்துறை மறுமலர்ச்சி (2021-2025) - வெற்றிச்செல்வன் மாணிக்கம்

Karur Stampede: Why Cult Politics, Not DMK, Must Bear the Blame - Veeramani Mani

The tragic Karur stampede that claimed innocent lives should not be reduced to a partisan blame-game against DMK. Attempts by detractors to hold the ruling party responsible are both opportunistic and misleading. The real cause lies elsewhere—within the manufactured frenzy surrounding actor-turned-politician Vijay and the dangerous culture of blind hero-worship he and his team have actively cultivated.

The Anatomy of a Cult Moment

For years, Vijay's political entry has been prepared through the careful construction of a fan cult. His appearances are rationed and choreographed, not out of necessity but to maximise hysteria. The message is clear: seeing him is not normal politics, but an act of "bliss." Media outlets and a network of paid influencer groups amplify this narrative, ensuring his presence feels rare, exalted, and explosive.

This careful throttling of appearances serves one purpose—election mobilisation. His team fears that over-exposure would reduce his aura. Instead, they preserve his image for grand moments designed to whip up frenzied devotion.

The Karur tragedy is the inevitable consequence of such manipulation. When leaders are packaged as spectacles rather than accessible representatives, crowds are primed for chaos, not democracy.

A Disturbing Pattern of Behaviour

By all accounts, Vijay himself seems to indulge in this frenzy. Witnesses describe him switching lights on and off at events just to watch the crowd erupt. This is not leadership—it is narcissistic showmanship that values personal adoration over public safety.

Close observers like Rajmohan have noted that Vijay is capable of sitting in silence for hours with no engagement, reinforcing an image of emotional detachment. His expressionless response as his own bouncers manhandled a fan on stage highlights the same coldness. These are not the instincts of a compassionate leader but of someone for whom people are props in a performance.

It is this emotional vacuum that makes Vijay particularly dangerous in politics. A personality with little empathy, elevated through mob frenzy, is easily co-opted by forces like the RSS and BJP—actors who thrive on heartless mobilisation and communal division.

Karur as a Political Turning Point

The Karur stampede is not an accident. It is the direct result of willful negligence by Vijay and his organisers. Their priority was not safety but sustaining a mood of hysteria. When frenzy becomes the operating mode of politics, death becomes collateral damage.

Such negligence cannot be brushed aside. In Tamil Nadu, the Aruna Jagadeesan Commission report into earlier tragedies has set clear precedents for accountability. By the same principle, Vijay and his team should face criminal charges for negligence leading to public deaths. The law must take its course, not to score political points, but to protect citizens from the dangers of cult-driven politics.

Silence of the Opposition, Role of DMK

Equally troubling is the silence of other political actors. Seeman, ADMK, and others have failed to stand with the families of the deceased or to question the cult tactics that caused this disaster. Had leaders like Edappadi K. Palaniswami (EPS) called out Vijay's dangerous obsession with fan frenzy, they might have positioned themselves as real alternatives. Instead, their silence has left a vacuum.

That vacuum reinforces one truth: only DMK has shown the will and capacity to represent Tamil Nadu's people against such manipulative and dangerous politics.

The Road Ahead

Vijay's cult politics represents more than just another party in Tamil Nadu. It represents a mob culture that suppresses reason, exploits sentiment, and erodes democratic accountability. Left unchecked, it risks becoming a Trojan horse for RSS and BJP to fragment minority votes and impose their heartless political agenda.

Karur must be remembered not just as a tragedy but as a warning. Tamil Nadu has long prided itself on rational, compassionate, people-centred politics. Allowing narcissism and mob frenzy to replace empathy and responsibility is a betrayal of that legacy.

DMK, for all its flaws, remains the only party standing between Tamil Nadu and this dangerous drift. In the face of death by negligence and silence by others, it is essential to reaffirm the values of accountability, compassion, and rational governance.

எம்ஜிஆர்-ரஜினிகாந்த்-விஜய் அரசியல் - வெங்கடேஷ் மோ

திரு. விஜய் அவர்களே!

உங்கள் முதல் படமான நாளைய தீர்ப்பு படத்தை வீடியோ டெக்கில் பார்த்த நாள் முதல் ரஜினிக்கு அடுத்து உங்களைத்தான் எனக்கு ரொம்ப பிடிக்கும்.

ஸ்கூல் ஹாஸ்டலில் படிக்கும் போது வீட்டில் இருந்து வரும் பையன் விஜய் படம் ஸ்டிக்கர் என்று கொண்டு வருவான். அதை வாங்கிக் கொள்ள அவ்வளவு சண்டை போட்டு இருக்கிறேன்.

விஜய் படம் என்றாலே எப்படியாவது பார்த்து விட வேண்டும் என்ற எண்ணம் தான் இருக்கும். நன்றாக இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்கு இடமில்லை.

காலம் செல்ல, செல்ல வயது ஏற ஏற மனதிலும் ஒரு மாற்றம் வந்தது. ரஜினி படங்களிலேயே கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் "ரஜினித் தன்மை" விஜய் படங்களில் தூக்கலாக வர ஆரம்பித்தது. போதாக்குறைக்கு ஸ்டைல் என்ற பெயரில் செய்த மேனரிசங்கள் பலவை எரிச்சலையே வரவழைத்தன. ஆனாலும் விஜய் என்ற மனிதன் மீது வைத்திருந்த பற்று குறையாமல் தான் இருந்தது. ஒரு சில படங்கள் தடுமாறுகிறதே என்ற கவலை மட்டும் தான் இருந்தது.

இடையிடையே வந்த அரசியல் சிக்கல்கள் அதற்கு இவர் காட்டிய சிறு சிறு எதிர்வினைகள் அரசியலுக்கு இவர் வந்தால் பார்க்கலாமே என்ற எண்ணமும் துளிர்த்தது. ஆனால் ஏற்கனவே அரசியலுக்கு வந்த நடிகர்களில் எம்ஜிஆரின் வெற்றி மற்றும் ரஜினியின் பின்வாங்கல் ஏற்படுத்தி வைத்த முன்மாதிரி இவரது வருகையை யோசிக்கவும் வைத்தது.

எம்ஜிஆரின் அரசியல்:

எம்ஜிஆரின் அரசியல் பிரவேசத்தை இப்போதுள்ள நடிகர்கள் முன்மாதிரியாக கொள்வதே பெரும் தவறு.

அவர் திமுக ஆரம்பித்த காலத்தில் முதற்கொண்டு அண்ணாவின் மீது கொண்ட பற்றாலும் கலைஞருடன் கூடிய நட்பாலும் திமுகவில் உடன் வளர்ந்தவர்.

இப்படி அண்ணாவின் பற்றாளராக திமுகவில் இணைந்து வளர்ந்தவர், தனது படங்களில் மனித குணங்களின் அடிப்படை இயல்புகளான நீதி, நேர்மை, நியாயம், தவறு நடந்தால் தட்டிக் கேட்பது கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகாமல் இருத்தல் போன்றவற்றை ஒரு நாயக பிம்பமாக கட்டியமைத்தவர்.

மேலும் தாய் பாசம், தங்கைப் பாசம், காதலியிடம் நேர்மையாக நடத்தல் போன்ற பெண்களுடன் உறவை உயர்வாகக் கட்டமைத்தவர். குடும்ப பாசத்தின் அடிப்படையை ஒவ்வொரு படங்களிலும் மக்களிடையே விதைத்தவர்.

இப்படி குடும்ப உறவுகளின் வலிமையையும், மனித குணத்தின் அடிப்படை இயல்புகளையும் ஒவ்வொரு படங்களிலும், பாடல்களிலும் மக்களிடம் விதைத்தவர் "நான் உங்களுக்காக வருகிறேன்" என்று கூறினால் மக்கள் தலைவனாகக் கொண்டாடாமல் விட்டுவிடுவார்களா??

மக்கள் கொண்டாடி தீர்த்து விட்டார்கள். அவர் கூறியதை வேதவாக்கு என்று எண்ணியதால் அரசியல் நியாயங்கள் அடிபட்டு போனது. தொடர்ந்து 10 ஆண்டுகள் அவரை முதலமைச்சராக அழகு பார்த்தார்கள். (ஆனால் அதன் பின்னணியில் என்ன என்ன நடந்தது என்று இப்போதுதான் youtube பேட்டியில் வெளிவந்து கொண்டிருக்கிறது. அது வேறு கதை.)

ஒரு திரை நாயகன் எப்படி வெற்றிகரமாக அரசியலில் ஜெயிக்க வேண்டும் என்பது எம்ஜிஆர் வழி வகுத்தது.

எம்ஜிஆரின் இடத்தில் அடுத்து மக்கள் வைத்து பார்த்தது ரஜினிகாந்த் அவர்களை தான். அவரும் எம்ஜிஆரின் படங்களின் அடிப்படை கூறுகளான "குடும்ப உறவைப் போற்றுதல்" மற்றும் "மக்களை கவரும் விதமாக நடித்தல்" என்று தன் படங்களை அமைத்துக் கொண்டார். ஆனால் போதை பொருட்களை பயன்படுத்துவதை அவர் ஊக்குவிக்கும் விதமாகவே நடித்தார். ஆனால் ரஜினி என்ற பிம்பம் ஏற்படுத்திய ஈர்ப்பால் மக்கள் அவற்றை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

நல்ல சந்தர்ப்பம் கிடைத்தும் அதை தவறவிட்டவர் ரஜினி. வேண்டுமென்றே தவற விட்டாரா இல்லை யோசிப்பதற்காக காலம் எடுத்துக் கொண்டாரா என்று தெரியவில்லை. கடத்த பத்து ஆண்டுகளில் ஏற்பட்ட அரசியல் அழுத்தத்தால் அவர் எவ்வளவு தடுமாறினார் என்று அனைவருக்கும் தெரியும். அரசியலுக்கு வருகிறேன் வருகிறேன் என்று பூச்சாண்டி காட்டி கடைசியில் அரசியல் என்ற கடலின் ஆழத்தை உணர்ந்து கொண்டு அதிலிருந்து விலகினார். தமிழக அரசியலில் காலடி எடுத்து வைத்தால் எவ்வளவு கடினமாக வேலை செய்ய வேண்டும், போராட வேண்டி இருக்கும், இரண்டு மிகப்பெரிய ஜாம்பவன்களை சமாளிக்க வேண்டி இருக்கும் என்பதை ஒரு மேடைப்பேச்சில் குறிப்பிட்டு இருப்பார். அவர் கூறியது தான் நிதர்சனம்.

ஆனால், ஒரு நடிகனாக எம்ஜிஆர் கட்டமைத்த அடிப்படை கூறுகள் எதையும் தன் திரைப்படங்களில் கடைபிடிக்காமல், அரசியலில் வந்தால் எவ்வளவு கஷ்டப்பட வேண்டும் என்று ரஜினி கூறியதையும் பொருட்படுத்தாமல், நடிகனாக வெற்றி பெற்றுவிட்டால் அரசியலில் ஜெயிக்கலாம் என்று ஒவ்வொரு நடிகரும் எண்ணுவது தான் அவர்களின் தோல்விக்கு அடிப்படை காரணம்.

கட்சி தொடங்கிய இரண்டு வருடங்களில் விஜய் தொடர்ந்து சிக்கலில் சிக்குவதற்கும் பல விமர்சனங்களுக்கு உள்ளாவதற்கும் இவர் தவறவிட்ட அந்த தருணங்களே காரணம்.

விஜய் அவர்கள் ஒரு திட்டமிடல் இல்லாமல் கட்சி ஆரம்பித்து விட்டதாகவே தோன்றுகிறது. ஒரு கட்சி தெளிவாக நடத்த வேண்டும் என்றால் இரண்டாம் கட்ட தலைவர்கள் திறமையுடனும் நல்ல விசால அரசியல் அறிவுடன் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஒரு பாமரனாக எனக்கே இது தோன்றுகிறது என்றால் விஜய்க்கு ஏன் தோன்றவில்லை என்பது தான் ஆச்சரியமாக இருக்கிறது.

ஆனால், விஜயின் சமீபத்திய படங்கள் கூறுவது என்ன? போதை பழக்கங்களின் பெருமையை பறைசாற்றுவதாக தான் இருக்கிறது. எம்ஜிஆர் என்ற மிகப்பெரும் ஆளுமையை தலைவராகக் கொண்ட கட்சியினரே அவரது புகைப்படத்தை போஸ்டரில் ஒரு மூலையில் ஸ்டாம்ப் அளவிற்கு கொண்டு சென்று விட்டார்கள். ஆனால் விஜய்யை மட்டுமே பார்த்து வளர்ந்த இளம் தலைமுறையினர் எம்ஜிஆர் என்பவர் அரசியல் வெற்றி பெற்ற நடிகர் என்ற அளவில் மட்டுமே தெரிந்து வைத்திருப்பார்கள். அவர் படங்கள் ஒன்றாவது பார்த்திருப்பார்களா அல்லது அவர் படத்தின் பாடல்களில் ஒன்றாவது கேட்டிருப்பார்களா என்பது சந்தேகமே!

அப்படி இருக்க "நான் எம்ஜிஆரை போல் வெற்றி பெற்று விடுவேன்" என்று கூறிக்கொண்டு பொதுவில் வந்தால் பள்ளி இறுதி வகுப்பு படிக்கும் வயதில் உள்ள சிறார்கள் என்ன நினைப்பார்கள்?
நம் ஆதர்ச நாயகன் வெற்றி பெற வேண்டும் என்று தானே..!!

ஆனால், அவர்களுக்கு அரசியல் என்றால் என்ன பொதுமக்களிடம் செல்வது என்றால் என்ன என்று எதையும் ஒரு அடிப்படை ஒரு நிலை ஏற்படுத்தாமல் பொதுவில் வந்தது தான் பிரச்சனை.

ரசிகப் மனப்பான்மையில் வளர்ந்தவர்கள், இன்னமும் ரசிகர்களாக இருப்பது பெரும் பிரச்சனை. ரசிக வெறி என்பது ஊறி ஊறி அவர்கள் மனதில் விஷமாக இறங்கி விட்டது.

ஒரு நல்ல தலைவன் தனக்கு ஆதரவு தெரிவிக்கும் மக்களையும் நல்வழிப்படுத்த வேண்டும். ஆனால் அவர்கள் தன் மீது வைத்த பாசத்தை விஷமாக மாற்றி அந்த விஷத்தில் வளர்வது நாட்டுக்கு கண்டிப்பாக நல்லது அல்ல.

விஜய் கொஞ்சம் நிதானித்து தன்னை பலவாறாக சுயபரிசோதனை செய்து தனது கட்டமைப்பை அடிப்படையில் இருந்து மாற்றினால் மட்டுமே அரசியலில் ஓரளவுக்காவது பிரகாசிக்க முடியும்.

இல்லையேல் அரசியலில் வந்து தோற்ற நடிகர்கள் வரிசையில் இவர் கடைசியில் நிற்க வேண்டி இருக்கும்..!!!

முதலில் புத்தி தெளிவு பெற்று கரூருக்கு உடனே செல்லவும்.

முதலில் மனம் விட்டு பேச கற்றுக் கொள்ளவும்.

எவ்வளவோ அட்வைஸ் என்று சொல்லத் தோன்றுகிறது.

ஆனால், கரூரில் நீ ஏற்படுத்திய பேரழிவு 'சீ போய்யா" என்றே சொல்ல வைக்கிறது.

புத்தி தெளிந்தால் நல்ல மனதுடன் வா.. அரசியலில் போட்டியிடலாம்.

நீ எதிரியாக கட்டமைத்த படை சமர் புரிய காத்திருக்கிறது.

- வெங்கடேஷ் மோ

கரூர் பெருந்துயரமும் அதில் நாம் கற்றுக்கொண்ட படிப்பினைகளும் - ச சதிஷ்

இந்த துயர் நிகழ்விற்கு யார் பொறுப்பு மற்றும் யார் காரணம் போன்றவற்றை நீதிமன்றம் பார்த்துக்கொள்ளும். மேலும் திமுக அரசு 41 உயிர் இழந்த பொது மக்களுக்கான நீதியை பெற்று தரும் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

மேலும் வளர்ந்து வரும் தலைமுறையினர் அனைவரையும் பொது புத்தியின் அடிப்படையில், இந்த தலைமுறையினரே இப்படிதான் பொறுப்பற்று நடிகரின் பின்னால் செல்கின்றனர் என்பது போன்ற வாதங்களில் எனக்கு உடன்பாடு இல்லை. ஒரு உச்ச நடிகரின் பின்னால் இளைஞர்கள் திரள்வது தமிழ்நாட்டிற்கு புதிதல்ல. ஆனால், அந்த இளைஞர்களை தன் அரசியல் இலாபத்திற்கும், தன் சுய ஆசுவாசத்திற்க்கும் பயன்படுத்திக் கொள்வது இதுவே முதல் முறை.

எனவே, இப்படிப்பட்ட அரசியல் நடிகர்களிடம் இருந்து நம் இளைஞர்களை பாதுகாக்க வேண்டியது நமது கடமை.

பெரும்பான்மையான இளைஞர்கள் அரசியலில் ஈடுபட ஏதேனும் ஒரு கட்சியை தேடுகின்றனர் அதில் சிலர் எதில் நாம் சுலபமாக இணைய முடியுமோ அந்த கட்சியை தேர்ந்தெடுக்கின்றனர், சிலர் தன் சுய சாதியின் அடிப்படையில் தலைவரை தேர்ந்தெடுக்கின்றனர், சிலர் ரசிகமனப்பான்மையில் என தேர்ந்தெடுத்திறார்கள்

திமுக போன்ற பெரிய கட்சிகளில் தங்களை இணைத்துக்கொள்ளவும் ஆர்வமாக இருக்கின்றனர். ஆனால் அதற்கான வழிமுறைகளை நாம் சுலபமாக்க வேண்டும்.

பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற கொள்கை தலைவர்களின் வரலாற்றையோ அல்லது அவர்களின் சாதனைகளையோ படித்து தெரிந்துக்கொள்ள அவர்களுக்கு ஆர்வமில்லை அதனை அவர்களின் வழியே சினிமா பாணியில் சமூக வலைதளங்களின் வழியே கொண்டு சேர்க்க வேண்டும்.

திராவிட சித்தாந்த பயிற்சி கூட்டங்களை நடத்தலாம், இந்த துயர சம்பவத்தை படிப்பிணையாக கொண்டு திக மற்றும் திமுகவும் இளைஞர்கள் மற்றும் மாணவர்களை அரசியல் படுத்த வேண்டும் அதற்கு கல்லூரிகளில் மாணவர் மன்றங்கள், சங்கங்கள் உருவாக்க வேண்டும். இதன் வழியே வன்முறையின்றி நாம் எப்படி நம் உரிமையை பெற வேண்டும் என்பதை கற்று தரலாம் மேலும் இவற்றை வெறும் போராட்ட அமைப்பாக மட்டும் உருவாக்காமல். பொருளாதாரத்தில் அவர்களை மேம்படுத்த அதற்கான படிப்படியான வழிமுறைகளையும் கற்றுதர வேண்டும்.

இளைஞர்களின் எழுச்சி , இளைஞர்களின் வளர்ச்சி தமிழ்நாட்டின் வெற்றி!! நன்றி!!

- ச சதிஷ்

வாசிப்பு மறையும் போது, விழிப்பு மங்குகிறது— முகிலினி

நாம் அனைவரும் ஒரு தலைமுறையை உருவாக்கியிருக்கிறோம்.
அவர்கள் வேகமாக சிந்திக்கிறார்கள், அவர்கள் தகவல்களால் நிரம்பியிருக்கிறார்கள்,
அவர்கள் உலகை விரல்களின் வழியாக அறிந்து கொள்கிறார்கள்.
ஒவ்வொரு விஷயத்திற்கும் பதில் *Google*'ல் இருக்கிறது.
இன்னும் ஒரு படி மேல் போய் இப்போது அனைத்தும் *AI* வசமாகிவிட்டது.
ஆனால் ஒவ்வொரு கேள்விக்கும்பின் ஆராய்ந்து பார்த்தால் அவர்களுக்குள் சிந்தனை இல்லை.

இது அறிவின் குறைபாடு அல்ல; அது ஆழத்தின் குறைபாடு.
ஒரு காலத்தில் வாசிப்பு என்பது ஒரு பழக்கம் இல்லை, அது ஒரு குணம்.
புத்தகம் பசித்தவனுக்கு தனிமை இருந்தாலும் திசை இருந்தது.
நம் முன்னோர் தலைமுறை வாசித்தார்கள், சிந்தித்தார்கள், விவாதித்தார்கள்.
அவர்கள் நூல்களைப் படித்து உலகத்தைப் புரிந்து கொண்டார்கள்.

ஆனால், இன்று இணையத்தில் ஆயிரம் நண்பர்கள் இருந்தாலும் ஒரு நோக்கமும் இல்லை.
இன்று நாம் வாசிக்கவும் இல்லை, சிந்திக்கவும் இல்லை, விவாதிக்கவும் இல்லை.
இன்று நாம் அனைத்திற்கும் விரல்களின் வழியே பதில் தேடிக்கொண்டு இருக்கிறோம்.
ஒரு நிமிட *reel*, ஒரு *headline*, ஒரு *trending topic*, அது தான் இன்றைய
இளம் தலைமுறையின் பெரும்பான்மையினரின் சிந்தனையின் எல்லை.
அதனால் தான் நம் *Gen-Z* இளம் தலைமுறையினர் கோபமுள்ளவர்கள், ஆனால் காரணமில்லாதவர்கள்.

தகவல்களால் நிரம்பியவர்கள், ஆனால் உணர்ச்சியில் வெறுமை அடைந்தவர்கள்.

வாசிப்பில்லாத சமூகம், சிந்தனையில்லாத சமூகம்.
சிந்தனையில்லாத சமூகம், பொய்யான நம்பிக்கைகளினால் வழிநடத்தப்படும் சமூகம்.

வாசிப்பு என்பது ஒரு கண்ணாடி போன்றது.
அது நம்முள் உள்ள குழப்பத்தையும் கேள்விகளையும் பிரதிபலிக்கிறது.
ஒரு புத்தகம் நம்மை ஆழமாக சிந்திக்க வைக்கும்; ஒரு சிந்தனை நம்மை விழிக்க வைக்கும்.

ஆனால் இன்று வாசிப்பை சுமையாக பார்க்கும் ஒரு சமூகமாக நம் இளம் தலைமுறை உருவாகிவிட்டது.

சமூக ஊடகங்களில் வரும் அனைத்து கருத்துக்களும் உணர்ச்சியை கிளறுகின்றன, ஆனால் புரிதலை
உருவாக்குவதில்லை.

இன்று "அரசியல்" என்ற சொல்லைக் கேட்டாலே பலர் முகத்தைச் சுளிக்கின்றனர்.
ஏனெனில் நாம் அதை புரிதல் என்ற கோணத்தில் கற்றுக்கொள்ளவில்லை;
பிரச்சாரம் என்ற கோணத்தில் மட்டுமே பார்க்கிறோம்.

அரசியல் என்பது அதிகாரத்தின் விளையாட்டு அல்ல, அது பொறுப்பின் குரல்.
அந்த பொறுப்பை நம்முடைய இளம் தலைமுறை உணர்வதில்லை,
ஏனெனில் அவர்களுக்கு அந்த வழிகாட்டல் கிடைக்கவில்லை.
அவர்கள் *followers* ஆக பழகியவர்கள்; *leaders* ஆக சிந்திக்க தொடங்கவில்லை.

ஒரு தலைமுறையின் அரசியல் புரிதல் குறைந்தால், அந்த சமூகத்தின் நியாய உணர்வு மங்கிவிடும்.

இளம் தலைமுறை மாற வேண்டும் என்றால், அவர்களை வாசிக்க வைக்க வேண்டும்.
அது அவர்களை மெதுவாக அமைதிப்படுத்தும். அவர்களின் கோபம் கேள்வியாக மாறும்;
அந்த கேள்வி விழிப்பாக மாறும். அந்த விழிப்பு தான் ஒரு புதிய சமூகத்தின் தொடக்கம்.
அது அரசியல் பக்கங்களில், கவிதைகளின் வரிகளில், மனிதத்தின் குரலில் உயிர் பெறும்.

ஒரு புத்தகத்தைப் படித்த குழந்தை ஒருநாள் சிந்திக்கும் மனிதனாக மாறுவான்.
ஒரு சிந்திக்கும் மனிதன் ஒருநாள் கேட்பான், "நான் வாழும் இந்த சமூகம் எங்கே போகிறது?" என்று.
அந்த கேள்வி எழுந்தால் நம் எதிர்காலம் பாதுகாக்கப்படும்.

வாசிப்பு ஒரு சின்ன சொல் போல தோன்றலாம், ஆனால் அது தான் ஒரு சமூகத்தின் ஆவி.
அதை மீண்டும் உயிர்ப்பிக்க வேண்டும். அதுவே நம் இளம் தலைமுறைக்கு நாம் செய்ய வேண்டிய தலையாய கடமை.

ஏனெனில், புத்தகம் முடிந்த இடத்தில்தான், உண்மையான விழிப்பு தொடங்குகிறது.

- முகிலினி

Gen Z, Gen Alpha தலைமுறை : ஒரு பகுப்பாய்வு - இனியன்

சமீப காலத்தில் Gen Z மற்றும் Gen Alpha நபர்கள் குறித்துக் கவலைகளை வெளிப்படுத்தும் விதமாகப் பல உரையாடல்கள் நிகழத் தொடங்கியுள்ளன. அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டில் த.வெ.க கட்சிக் கூட்டங்களில் நடைபெற்ற காட்சிகளைக் கண்டபிறகு பரவலாக அவர்களைப் பற்றிய பேச்சுகள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன.

அவற்றில் மிக முக்கியமான ஒன்றாக நான் கருதுவது, "அவர்களின் கொண்டாட்ட மனோநிலை மற்றும் வைப்ஸ் எனச் சொல்லப்படும் அதீதக் கொண்டாட்டங்கள் மட்டுமே அவர்களை ஆளுகின்றன. அதன் வெளிப்பாடுதான் இப்படியான சம்பவங்கள்" என்னும் சிந்தனையைப் பலரும் வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

ஒருவகையில் அது உண்மைதான் என்றாலும் கூட, அந்தக் கொண்டாட்டங்களுக்குப் பின்னால் இருக்கும் புள்ளிகளையும் கொஞ்சம் பகுப்பாய்வு செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளது. அவற்றில் தனிமனித ஒழுக்கம், அறம் சார்ந்த விழுமியங்கள் தொடங்கி சமூக ஒழுக்கம் மற்றும் சமூக அறம் வரையிலான பலவற்றையும் பகுப்பாய்வு செய்ய வேண்டிய தேவை உள்ளது. அவற்றையெல்லாம் ஓரளவு தொடும் முயற்சிதான் இந்தக் கட்டுரை.

பொதுவாக மற்ற எந்த உயிரினத்துக்கும் இல்லாத வாழ்வியல் முறை மனிதர்களிடம் உண்டு. அது அவர்களின் ஆறாம் அறிவு எனச் சொல்லப்படும் சிந்தனைத் திறனை மையமாக வைத்தே வரையறை செய்யப்படுகிறது. அந்தச் சிந்தனைத் திறனின் வெளிப்பாடுதான் மனிதர்களை மற்ற உயிரினங்களில் இருந்து மேலானவர்கள் எனச் சொல்லிக்கொள்ள உதவுகிறது. ஆனால், அதெல்லாம் எந்த அளவிற்கு நமக்கு உதவிக் கொண்டிருக்கிறது என்பதையெல்லாம் சிந்திக்கும்போது, பல அபத்தங்கள் நமது வாழ்வியல் முறைகளில் தொடர்வதை நாம் காணும்போதெல்லாம் பல ஆற்றாமைகளில் நாம் துவண்டு போய்க்கொண்டிருக்கிறோம்.

அப்படியான ஆற்றாமைகளில் ஒன்றுதான் இந்த Gen Z மற்றும் Gen Alpha தலைமுறையில் பலரின் செயல்பாடுகள். அவற்றிற்குக் காரணமாக நான்கு பகுதிகளை நாம் உற்றுநோக்க வேண்டிய தேவை இருக்கிறது.
அவை

1. குடும்பக் கட்டமைப்பு
2. சமூகக் காரணிகள்
3. தொழில்நுட்பக் காரணிகள்
4. அரசியல் காரணிகள்

முதலாவதாக குடும்பக் கட்டமைப்பு.
உலகில் குடும்பம் என்னும் கட்டமைப்பு உருவாகி பல்லாயிரம் ஆண்டுகள் பல தலைமுறைகள் கடந்து வந்திருந்தாலும் இந்த Gen Z மற்றும் Gen Alpha தலைமுறையினர் அனுபவிக்கும் அனுபவங்களும், அவர்களைக் கையாளத் தெரியாமல் தவிக்கும் முந்தைய தலைமுறையினருக்கும் இடையில் நடக்கும் போராட்டம் என்பது மிகப் பெரிதாகவே இருக்கிறது. அவற்றில் நன்கு படித்தவர்கள் மற்றும் படிப்பறிவற்றவர்கள், செல்வாக்கு மிக்கவர்கள் மற்றும் செல்வாக்கு அற்றவர்கள், வசதி படைத்தவர்கள் மற்றும் வசதி இல்லாதவர்கள் என்னும் எவ்வித வித்தியாசமும் இல்லாமல் அவரவர் இருப்புகளுக்கு ஏற்றார்போல் பிரச்சினைகள் இருந்துகொண்டேதான் உள்ளன.

தாத்தா – பாட்டி, அப்பா – அம்மா, Gen Z மற்றும் Gen Alpha குழந்தைகள் என மூன்று தலைமுறையினரைக் கொண்ட குடும்பம் (கிராமப் புறங்களில் இன்றும் இந்தக் கட்டமைப்பு இருக்கிறது) என எடுத்துக்கொண்டால், உலக வரலாற்றில் வேறெப்போதும் இல்லாத அளவிற்கான பெரும் இடைவெளியை இந்தக் குடும்பக் கட்டமைப்பு சந்தித்துக் கொண்டிருக்கிறது. கராணம் வாழ்வியல் முறைகளில் தொடங்கி, உணவு, தேவைகள், சந்தைகள், தொழில்நுட்பங்கள் என அனைத்திலும் பெரும் வித்தியாசங்கள் அதீதப் பாய்ச்சலுடன் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

தொலைக்காட்சிப் பெட்டியைக் கூடத் தங்களது 30 - 50 வயது வரை கண்டிராத தாத்தா – பாட்டிகள், அவற்றின் பரிமாணங்களையும் அதன் வளர்ச்சியையும் கண்கூடாகக் கண்டு தயங்கி தயங்கி பயன்படுத்தக் கற்றுக்கொண்ட அப்பா – அம்மாக்கள், வாழ்வின் அனைத்தையுமே தொழில்நுட்பங்களின் வாயிலாகவே பெற்றுக்கொள்ள முடியும் என நம்புகிற Gen Z மற்றும் Gen Alpha நபர்கள் என மூன்று தலைமுறைகள்

நான்கு சுவருக்குள் பழக நேரும்போது, அவ்விடம் வெறும் தடுமாற்றங்களால் மட்டுமே நிரம்பியிருக்கின்றன.

அதிலும் குறிப்பாக கோவிட்-19 முற்றடைப்புக் காலத்திற்குப் பிறகான வாழ்வியல் சூழலில் அவரவர்கள் தங்களுக்குள் தூக்கிச் சுமந்து கொண்டிருந்த தலைமுறைகளுக்கான பொறுப்புகள் முற்றிலும் பெரும் மாற்றங்கள் அடைந்திருக்கின்றன. அவற்றில் மிக முக்கியமான ஒன்று குடும்பக் கட்டமைப்பில் இருக்கின்ற தலைமுறை ஆதிக்கங்கள் முற்றிலும் சிதைந்து மாற்று வடிவங்களைப் பெறத் தொடங்கியிருகின்றன.
அதில் தனிமனித ஒழுக்கம் மற்றும் குடும்ப அறம் போன்றவற்றைக் குடும்பக் கட்டமைப்பின் வாயிலாகக் கற்றுக்கொடுக்கும் சூழல் வெகுவாகக் குறைந்துள்ளது. அதேநேரம் இந்தக் கட்டமைப்பைப் புரிந்துகொண்டவர்கள் ஓரளவுக்குச் சிலவற்றை மாற்றிவிடும் முனைப்பு தருகின்றனர். ஆனால், பெரும்பாலும் இந்த வாழ்வியல் சூழலில் தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ள இயலாமல் Gen Z மற்றும் Gen Alpha தலைமுறையினரை அவர்கள் போக்கில் விட்டுவிடும் சூழலே அநேகக் குடும்பங்களில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இவை ஒருபுறமிருக்க, மற்றுமொரு பெருங்கூட்டம் தங்களது குடும்பக் கட்டமைப்பு எனச் சொல்லி அதே Gen Z மற்றும் Gen Alpha நபர்களைத் தங்களது சாதி – மதப் பெருமைகளுக்கான பயிற்சியையும் கொடுத்து, வளர்த்தும் விடுகின்றனர். இம்மாதிரியான வளர்ப்பிற்கு ஆளாகும் நபர்களிடம்தான் கட்டுப்பாடற்ற எல்லையில்லா சுதந்திரம் தங்களிடம் இருப்பதாக அவர்களைக் கருத வைத்துவிடுகிறது.

இரண்டாவதாக சமூகக் காரணிகள்.
குடும்பக் கட்டமைப்பின் பெரும்பாலான காரணிகள்தான் சமூகத்திலும் நிலவுகின்றன. ஒரு குழந்தையாக நாம் முதலில் பார்த்துப் பழகும் குடும்பக் கட்டமைப்பிற்குப் பிறகு, நாம் அனைவருமே அடியெடுத்து வைக்கும் சமூகக் கட்டமைப்பு என்பதை மூன்றாகப் பிரித்துக் கொள்ளலாம்.
அவை

1. கல்வி
2. சினிமா
3. போதை

நமது கல்வி அமைப்பிலும் தலைமுறை இடைவெளிகள் பெரும் பங்காற்றுகின்றன. தொழில்நுட்ப முன்நகர்வுகளையும், அவற்றைக் கூர்மையாக உற்றுநோக்காத பெரும்பாலான ஆசிரியர்களைக் கொண்ட கட்டமைப்பாகவே இன்றைய கல்வி நிலையங்கள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக, பள்ளிக் கல்வியில் பெரும் இடைவெளி உள்ளது.

பாடங்கள் கடந்த உரையாடல்கள் என்பதும் அவற்றிற்கான நேர மேலாண்மை என்பதும், விளையாட்டுகளுக்கான முக்கியத்துவம் என்பதெல்லாம் பள்ளிகளில் இருந்து நீக்கம் பெற்று பல வருடங்கள் ஆகிவிட்டன. அவற்றை அனைத்தையும் ஓரளவு சரிசெய்யும் முயற்சிகள் அரசு சார்பாக எடுக்கப்பட்டாலும் அவை நேரடியான மாணவர்களின் கரங்களில் வந்து சேரும்பொழுது பல தடைகளில் தடம் தெரியமல் சென்றுவிடும் சூழல் இன்றைக்கும் இருக்கும் நிலையில், பத்து ஆண்டுகளுக்கு முன்பாகப் பெரும்பாலான Gen Z மற்றும் Gen Alpha நபர்களின் பள்ளி வாழ்க்கை என்னவாக இருந்திருக்கும் என்பதை நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும்.

இவை அனைத்தும் அரசுப் பள்ளிகளை முன்வைத்தே நம்மால் சிந்திக்கப்படுகிறது. அதேநேரம் தனியார் பள்ளிகளின் நிலைமை வேறுவிதம். அங்கே Gen Z மற்றும் Gen Alpha நபர்களின் நிலை வடிகாலற்று அடைத்து வைக்கப்பட்ட நிலைமைதான்.

இப்படியான சூழ்நிலைகளில்தான் அவர்களுக்கான கொண்டாட்ட வடிவங்கள் பல்வேறு நிலைகளை வந்தடைகின்றன. அவற்றில் மிக முக்கியப் பங்காக முதலில் வந்து நிற்பது சினிமாதான். சினிமா தோன்றிய காலம் முதலே பல்வேறு பரிணாமங்களை அடைந்து கொண்டேதான் இருக்கிறது. அதிலும் இந்தத் தொழில்நுட்பக் காலத்தில் சொல்லவே வேண்டாம். அது அடைந்திருக்கின்ற அபரிமிதமான வளர்ச்சி என்பது நாம் அனைவரும் கண்கூடாகக் கண்டுணரும் ஒன்றுதான். அதேநேரம் அதன் வரலாற்றின் பக்கங்களை ஆராய்ந்தால், சினிமா இந்த மானுடச் சமூகத்திற்குக் கற்றுக் கொடுத்தவை ஏராளாம்.

அதில் உலகம் முழுவதுமே அறிவியல் முதற்கொண்டு அறநெறிகள் வரையில் பலவற்றை அறிமுகம் செய்து வைத்ததில் சினிமா படைப்பாளர்களுக்குப் பெரும் பங்கு இருக்கிறது. அதில் ஒன்றாகத்தான் நமது தமிழ்நாட்டில் சினிமா வளர்த்தெடுத்த அரசியல் ஒன்றும் ஒரு காலத்தில் இருந்தது. ஆனால், அதே சினிமாதான் சமூக எதார்த்தங்கள் கடந்து அறமற்ற செயல் வடிவங்களைக் காட்சிகளின் வாயிலாக நாயக

பிம்ப வழிகாட்டுதலுக்குத் துணை நின்று, இவைதான் கொண்டாட்டம் என்னும் நிலையில் அனைவரையும் இழுத்துக் கொண்டு நிறுத்தியிருக்கிறது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பாக அதாவது Gen Z மற்றும் Gen Alpha காலத்திற்கு முன்பாக மெல்லிய காதலையும், ரத்தமில்லாத சாந்தமான சாகச சண்டைகளையும் செய்து கொண்டிருந்த கதாநாயகர்கள் அனைவரும் ரத்தம் ஒன்றை மட்டுமே வைத்து மொத்த சினிமாக்களையும் முடிக்கும் நிலைக்குக் கொண்டுவந்து இருக்கின்றனர்.

இம்மாதிரியான காட்சிகளைக் குழந்தைகள் பார்க்கக் கூடாது என்பதனால்தான் U, U/A, A என்று தரம் பிரித்துச் சான்றிதழ்கள் வழக்கப்படுகின்றன. ஆனால், இருபது வருடங்களுக்கு முன்பாக தான் ரசிகனாகக் கண்ட திரை நாயகனின் இன்றைய ரத்தக் காட்சிகளுக்குத் தங்களது குழந்தைகளையும் அறிமுகம் செய்து வைக்கின்றனர் பெற்றோர்கள்.

அதன் விளைவுகள் இந்தச் சமூகத்தில் கட்டமைத்திருக்கும் மாற்றங்கள் என்பது பெருங்கொடுமைகள் நிறைந்தது என்பதெல்லாம் கண்கூடாக நாம் காணுகின்ற உண்மைகள். அதேபோல், குழந்தைகள் பார்த்து, ரசித்துக் கொண்டாடி, மகிழ்ந்து கற்றுக்கொள்ளும் விதமான சினிமாக்கள் அறவே அற்ற ஒரு சமூகம் ஒன்று இருக்க முடியுமா? என யாராவது கேட்டால், "இதோ நாங்கள் இருக்கிறோம்." எனப் பெருமையாக மார்தட்டிக் கொள்ளலாம்தான்.
இன்றைய தேதிக்கு ரத்தம் தெறிக்கும் வன்முறைக் காட்சிகளையும், போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் காட்சிகளையும் விரும்பி நடிக்காத கதாநாயகர்களே இல்லை எனச் சொல்லும் அளவிற்கு நமது உள்ளூர் சினிமா இருக்கிறது. அந்த சினிமா பிம்பங்களைக் கட்டிக்காக்கும் வணிக நோக்கம் இந்தச் சமூகத்துக்குக் கொடுத்திருக்கும் கேடு என்பது மிகப் பெரியது.

பாலின பேதங்கள் முதல் போதைப் பொருட்களின் பயன்பாடுகள் வரையில் அவை இந்தச் சமூகத்துக்கு கடத்தாத தகாத செயல்களே இல்லை என்னும் அளவிற்குப் பெரும் பங்காற்றி வரும் நாயக பிம்பத்தவர்கள் மற்றும் அத்தனை தொழில்நுட்பக் கலைஞர்கள் அனைவரும் இந்தச் சமூகத்துக்குப் பேராபத்தானவர்களே.

இந்த வரிசையில் அடுத்ததாக இருப்பது, அதுவும் குறிப்பாக அதிக அளவு சினிமா மூலமாக வந்து சேர்ந்திருக்கும் பழக்கம் என்றால் அது போதைப் பயன்பாடுகள்தான்.

சமீபத்தில் ஒரு கல்லூரிக்கு இரண்டு நாட்கள் சிறப்பு வகுப்புகள் நெறியாளுகை செய்திடச் சென்றபோது முதலாமாண்டு வகுப்பறைக்குள் சர்வே ஒன்றை நிகழ்த்தினேன். வகுப்பறைக்குள் அமர்ந்திருந்த 18 – 20 வயதுடைய 32 நபர்களில் 24 பேர் ஏதோவொரு வகையில் கூல் லிப் முதல் மதுபானம் வரையிலான போதைப் பொருட்களைப் பயன்படுத்திக் கொண்டிருப்பதாக ஒப்புக் கொண்டனர்.

அவர்களில் சிலரிடம் எப்போது, எப்படி இந்தப் பழக்கம் வந்தது என்னும் கேள்வியை முன் வைத்தபோது, முற்றடைப்புக் காலகட்டத்தில் ஊருக்குள் இருந்தபோது இந்தப் பழக்கம் வந்ததாகத் தெரிவித்தனர். இன்னும் அதில் ஒருவர் சினிமா பார்த்து பீர் குடிக்கக் கற்றுக்கொண்டதாகத் தெரிவித்தார். இப்படியாக ஒவ்வொருவரிடமும் சொல்லிக்கொள்ளும் விதமான பல காரணங்கள் உள்ளன. அதிலும் கூல் லிப் போன்றவற்றை வகுப்பறைக்குள்ளேயே எளிதில் பயன்படுத்திவிட முடியும்.

இதெல்லாம் பொருளாதரத்தில் பின்தங்கிய பகுதியில் இருக்கும் கல்லூரிகளில் நடைபெறும் அன்றாடங்களில் ஒன்றாகவே மாறியிருக்கிறது. அதேநேரம், பெருநகரங்களில் பெருங்கல்வி நிறுவனங்கள் மற்றும் மிகப்பெரிய பொருளாதாரப் பின்புலத்தில் இருக்கும் போதை கலாச்சாரம் என்பது பெருந்தொகை கொண்டு விளையாடும் விளையாட்டாகவே உள்ளது என்பதெல்லாம் நமக்குத் தெரிந்த ஒன்றுதான்.

ஆனால், இவற்றில் பல தொடக்கங்கள் சினிமா காட்சிகளின் மூலம், தங்களின் ஆதர்சனக் கதாநாயகர்கள் மூலமே அறிமுகம் ஆகின்றன என்பதைக் கவனிக்கத் தவறிவிடுகிறோம்.
அதற்காக மொத்த Gen Z மற்றும் Gen Alpha நபர்களும் போதையில் திரிகிறார்கள் என்று பொருள் கிடையாது. அவர்களுக்குள்ளாக போதை என்பது இயல்பாகிக் கொண்டிருக்கிறது என்றுதான் புரிந்துகொள்ள வேண்டும். அந்த இயல்பில் இருந்துதான் அவர்களின் மொத்தச் செயல்பாடுகளையும் நாம் புரிந்துகொள்ள வேண்டிய தேவைகள் எழுந்துள்ளன.

அதேநேரம் இங்கே போதை என்பது உடலில் செலுத்திக்கொள்ளும் அல்லது உட்கொள்ளும் போதைப் பொருட்கள் என்று மட்டும் நாம் அடையாளப்படுத்திக் கொண்டு தேங்கிவிட முடியாது. காரணம் அவற்றையெல்லாம் விட, பயன்பாட்டில் அதிகம் உள்ள, பாலினம் மற்றும் வயது என எவ்வித பேதமும்

அற்ற ஒரு போதைப் பயன்பாடும், அதற்கு அடிமையாகும் சூழலும் இருக்கிறது என்றால், அவை தொழில்நுட்பங்களால் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

அடுத்ததாக தொழில்நுட்பக் கராணிகள்.
எப்படி போதைப் பொருட்களின் பயன்பாடுகள் குறித்த விழிப்புணர்வு என்ற ஒன்று அறவே அற்ற நிலையில் அதனைப் பயன்படுத்தும் நிலையில் இந்தச் சமூகம் உள்ளதோ அதனைவிட அதிகப்படியான விழிப்புணர்வு மட்டுமல்ல அடிப்படையான புரிதல்கள் என எதுவுமற்ற நிலையில் பெரும்போதையாக மாறிவருகிறது என்றால் அது தொழில்நுட்பங்களின் பயன்பாடுகள்தான்.

அதிலும் குறிப்பாக, தொழில்நுட்பத்தை மையமாக வைத்திருக்கும் சமூக வலைதளங்கள் மற்றும் பிரத்தியேகப் பயன்பாடுகளுக்கு என உருவாக்கப்படுகின்ற செயலிப் பயன்பாடுகள் என்றெல்லாம் இதன் தாக்கங்கள் அதிவேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. இதுகுறித்தான எவ்விதப் புரிதல்களோ, விழிப்புணர்வோ இங்கே எந்த மட்டத்திலும் ஏற்படுத்தப்படவில்லை. அதன் கராணமாகப் பெரும் தொழில்நுட்ப போதையில் சிக்குண்டு சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கிறோம்.

10 வருடங்களுக்கு முன்பாகவெல்லாம் ஏதாவது கிராமங்களுக்குள் பயணிக்கும்போது, அந்தக் கிராமங்களின் பகல் பொழுதில் பல இளைஞர்கள் கிராமத்து முச்சந்தியில் அமர்ந்து எதையாவது பேசிக் கொண்டிருப்பார்கள். ஆனால், தற்போது மலைப்பகுதி கிராமங்களில் கூட கூட்டாக அமர்ந்து இருந்தாலும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளாமல், மொபைல் போனில் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி விளையாட முடியாத காரணத்தால், சென்னை போன்ற பெருநகரத்தில் பணியில் மாதம் 22,000 ரூபாய் வரையில் சம்பளத்திற்கு வேலையில் இருந்த ஆட்டோ மொபைல் இன்ஜினீயரிங்கில் பட்டயப்படிப்பு படித்திருந்த பழங்குடியின இளைஞர் ஒருவர், வேலையை விட்டுவிட்டு வந்துவிட்டதாக தெரிவித்ததையெல்லாம் கேட்டு இருக்கிறேன். அதனை அவர் சொன்னபோது, "ஏன் இப்படி?" என்னும் கேள்வியைக் கேட்டால், "கம்பெனி உள்ளே செல்போன் எல்லாம் பயன்படுத்தக் கூடாது என்னும் கட்டுப்பாடு இருக்கிறது. என்னால், இந்த விளையாட்டெல்லாம் விளையாடாமல் இருக்க முடியவில்லை" என்று பதில் அளித்தார். இப்படி பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தொழில்நுட்பப் பயன்பாடுகள் குறித்த விழிப்புணர்வு இல்லாமல், பெரும்போதைக்குள் சிக்குண்டு கிடக்கிறார்கள்.

இளைஞர்கள் மட்டுமின்றிப் பதின்பருவத்துக் குழந்தைகள் பலரும் இந்தமாதிரியான சிக்கலுக்குள் சிக்கி மனநல மருத்துவர்களை அணுகுவதாக மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்தச் சிக்கல் அனைத்துத் தரப்பு மக்களிடமும் இருந்தாலும், இம்மாதிரியான தொழில்நுட்ப போதையால் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாவதும் எப்போதும்போல் விளிம்புநிலை இளைஞர்களாகவும், குழந்தைகளாகவுமே இருக்கிறார்களே, அப்படியென்றால் அதன் பின்னணியில் இருக்கக்கூடிய அரசியல் காரணங்களையும் பகுப்பாய்வு செய்துகொள்ள வேண்டும்.

அரசியல் காரணிகள்:
முதல் தொழிற்புரட்சியின் தொடக்கமான 18ஆம் நூற்றாண்டின் மையப் பகுதிக்குப் பிறகு ஏற்பட்ட உழைப்புச் சுரண்டல்கள் மற்றும் பாலினச் சமத்துவமின்மை என அனைத்துவிதமான ஒடுக்குதல்களும் எதிராக 19ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதல் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையிலான காலகட்டத்தில் உலகம் முழுவதும் பல்வேறு கட்டங்களில் முதலாளித்துவத்தின் ஒடுக்குதலுக்கு எதிரான தொழிலாளர் புரட்சிகள் முதல் பலதரப்பட்ட சமூகச் சீர்திருத்தங்களுக்கான போராட்டங்கள் தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தன. இப்போது அவற்றின் தேவைகள் இருந்துகொண்டேதான் உள்ளன.

ஆனால், அந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற போராட்டங்கள் வாயிலாகத் தொழிலாளர் புரட்சிகள், ஆட்சியதிகார மாற்றங்கள் வரைக்கும் வழிவகுத்தன என்பதுதான் வரலாறு.
அந்த வரலாற்றில் பாடங்களைக் கற்றுக்கொண்டு 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குப் பிறகு பெரும் பாய்ச்சலுடன் நான்காம் தொழிற்புரட்சியைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருந்த முதலாளித்துவ அமைப்புகள் தொழில்நுட்ப வளர்ச்சியில், பொருளாதார தாராளமயமாதலுடன் கூடிய பொழுதுபோக்குக் கொண்டாட்டங்களுடன் மக்களை அணுகி ஒருவித மந்தை மனோநிலையைத் தொடர்ந்து கட்டமைத்துக் கொண்டிருக்கின்றன. இதனால் உலகம் முழுவதும் மக்களின் கூட்டு மனோநிலை மிகப்பெரிய அளவிலான சீர்கேட்டை அடைய வழிவகைகளைச் செய்துகொண்டே இருக்கிறார்கள் என்றால் அது மிகையல்ல.

எந்தவொரு தொழில்நுட்பமும் முதலில் கையாளப்படுவது மட்டுமின்றி அவற்றின் தொடக்கமே முதலாளித்துவ ஆதிக்கத்தில் இருந்துதான் தொடங்குகிறது. உலக அளவில் இதுதான் நிலை என்றால்,

இந்திய நிலப்பரப்பில் அந்த முதலாளித்துவத்துடன் பார்ப்பனியமும் இணைந்து கொள்கிறது அத்தனை வளர்ச்சியிலும்.

அதன் வெளிப்பாடுகள்தான் தொழில்நுட்பத்தின் வாயிலாகவும் கூட பார்ப்பனியத்தின் வர்ணாசிரமப் படிநிலையான ஜாதியக் கட்டமைப்புகள் மிக நுட்பமாக வளர்த்தெடுக்கப்படுகின்றன. அதற்கு எதிரான கருத்துகள் அனைத்தும் அதே தொழில்நுட்பத்தின் வாயிலாகவே முடக்கவும்படுகின்றன.

இந்தச் சிக்கல்கள்தான் Gen Z மற்றும் Gen Alpha நபர்களை வழிநடத்தும் காரணிகளாகவும் இருக்கின்றன. இந்த நுட்பத்தைப் புரிந்துகொள்ளவும் அல்லது புரியவைக்கவும் மிகப்பெரிய மாற்று வடிவங்களைச் சிந்திக்க வேண்டிய தேவைகள் உள்ளன. ஆனால், அவற்றைக் கேட்கும் இடத்தில் Gen Z மற்றும் Gen Alpha தலைமுறையினர் தயாராகவே இல்லை.

எவ்வளவு பெரிய தொழில்நுட்பங்கள் கைகளில் இருந்தாலும் அதன் பிடிமானங்கள் பார்ப்பனியத்தின் உயர் சாதியினரிடமும், சனாதனத்தின் படிநிலையின் அடிப்படையில் மட்டுமே வந்து சேருகின்ற கட்டமைப்புகளும், அந்த நுட்பத்தைப் புரிந்துகொண்டு அதனை வழிநடத்தாத முந்தைய தலைமுறையினரின் குழப்பங்கள் சூழ்ந்த குடும்பக் கட்டமைப்பு மற்றும் சமூகக் காரணிகள், தொழில்நுட்பக் காரணிகள் இருக்கின்ற வரையில் Gen Z மற்றும் Gen Alpha நபர்களின் இந்தப் போக்குகள் இப்படியேதான் நீடித்துக் கொண்டிருக்கும்.

இவை அனைத்தும் இப்படியே நீடித்துக் கொண்டிருக்க வேண்டியது மட்டுமே முதலாளித்துவம் மற்றும் பார்ப்பனியத்தின் தேவைகளாக இருக்கக்கூடிய அரசியல் காரணிகளாக இருக்கும் வரையிலும் இந்தப் போக்குகள் Gen Z, Gen Alpha, Gen Beta.... என்றெல்லாம் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும். என்பதைத் தவிர வேறில்லை. அவற்றை நாம்தான் புரிந்துகொள்ள வேண்டும்.

- இனியன்

கல்வி மட்டும் போதுமா? சமூக விடுதலைக்கான பகுத்தறிவின் அவசியமும் அதன் ஆற்றலும் - *Nithyanandam Vms*

*கல்வி என்பது மனித வாழ்வின் இருளை நீக்கும் ஒரு **வலிமையான ஆயுதம்** என்றால், அந்த ஆயுதத்தைச் சரியாகப் பயன்படுத்தும் வழிகாட்டி **பகுத்தறிவு (Rationality)** ஆகும். வெறும் ஏட்டுச் சுரைக்காய் போலக் கல்வி அறிவை மட்டும் கொண்டிருப்பவர்கள், நடைமுறை வாழ்க்கையில் பெரும் சவால்களையும், தேவையற்ற தடங்கல்களையும் சந்திக்க நேரிடும். எனவே, பகுத்தறிவோடு கூடிய கல்வி மட்டுமே ஒருவரை அடுத்த வளர்ச்சிப் படிக்குச் சரியான தருணத்தில் இட்டுச் சென்று, **சுயமரியாதையுடன் வாழ** வழிகாட்டும்.*

I. அடிமைத்தனத்தில் இருந்து விடுதலைக்கான பகுத்தறிவு

*பகுத்தறிவின்மை ஒரு தனிநபரை எளிதில் **ஏமாற்றி அடிமைப்படுத்தப்படும்** நிலைக்குத் தள்ளும். ஆனால், பகுத்தறிவோ சுயமரியாதையையும் பாதுகாப்பையும் உறுதி செய்கிறது.*

- ***கல்வியின் உண்மையான நோக்கம்:** பகுத்தறிவே, கல்வி எவ்வளவு முக்கியம், அது **வாழ்க்கையின் ஏழ்மையைப் போக்கி, அடிமைத்தனத்திலிருந்து மீள** உதவும் ஒரு கருவி என்பதை உணர்த்துகிறது. பகுத்தறிவில்லாதவர்கள், கல்வி கற்றிருந்தாலும், பிறரின் தவறான வழிகாட்டுதலுக்கு அடிமையாகி, தங்கள் உழைப்பைச் சுரண்ட அனுமதிப்பார்கள்.*
- ***விமர்சன முடிவெடுத்தல்:** பகுத்தறிவே எது **சரி, எது தவறு, எது நம்முடைய வேலை, எது அடுத்தவர் வேலை, எது உதவி, எது நம்மைப் பயன்படுத்துகிறார்கள்** என்பதைத் தெளிவாக அறிய உதவுகிறது. யாரை நம்புவது, யாரிடம் என்ன பேச வேண்டும், ஒரு நபர் **தெரிந்தே பொய் பேசுகிறாரா** என்பதைக்கூட நுட்பமாக உணர வைக்கிறது.*
- ***சுயமரியாதை மற்றும் பாதுகாப்பு:** பகுத்தறிவுதான் **சுயமரியாதை எவ்வளவு முக்கியம்** என்பதை உணர்த்தும். பகுத்தறிவு இல்லையேல், நாம் இருக்கும் இடத்தில் அனைவரும் நம்மை அடிமையாகவும், வேலையாளாகவும் நடத்துவார்கள். அத்துடன், பகுத்தறிவில்லாதவர்கள், எளிதில் **பலியாடுகளாக ஆக்கப்படுவார்கள்**, வீண்பழி சுமத்தப்பட்டு குற்றவாளியாக்கப்படும் வாய்ப்பு மிக அதிகம். சரியான நேரத்தில், **எப்போது ஒரு இடத்தை விட்டு வெளியேற வேண்டும்** என்பதைக்கூட பகுத்தறிவே உணர்த்துகிறது.*

II. அறிவின் தூய்மை மற்றும் செயல்பாட்டுத் திறன்

நாம் கற்றுக்கொண்ட அறிவைப் பயன்படுத்தும் திறனும், அறிவைத் தொடர்ந்து புதுப்பிக்கும் ஆற்றலும் பகுத்தறிவால் மட்டுமே சாத்தியமாகும்.

- ***அறிவின் உண்மைத்தன்மை:** பகுத்தறிவின்றி, நாம் கேள்வி கேட்க மாட்டோம். எனவே, **நாம் கற்றது சரியா தவறா, கற்றுக்கொடுக்கப்பட்டது சரியா தவறா,** கற்பிப்பவர் சரியாக முழுமையாகக் கற்றுக்கொடுக்கிறாரா, அல்லது **வேண்டுமென்றே தவறான கருத்துக்களை உட்புகுத்துகிறாரா** என்பதை உணர பகுத்தறிவு மிக அவசியம்.*
- ***தொடர்ச்சியான வளர்ச்சி: Learn (கற்றல்) - Unlearn (களைதல்) - Relearn (மறுகற்றல்)** என்ற இந்த வளர்ச்சிச் சங்கிலியே பகுத்தறிவுதான். நாம் ஒரு விஷயம் தவறாக இருக்கும் பட்சத்தில், அதை ஏற்றுக்கொண்டு, **களைந்து புறந்தள்ளிவிட்டு, எது சரியோ அதை மறுகற்றல் மூலம் திருத்திக் கொள்வது** பகுத்தறிவால் மட்டுமே முடியும்.*

- ***பயன்பாட்டு ஞானம்:*** *பகுத்தறிவே நாம் கற்ற கல்வியை* ***எங்கு, யாரிடம், எவ்வளவு வெளிப்படுத்த வேண்டும்****என்பதை உணர்த்தும்.* ***"வித்தை தெரிந்தவனிடம் வித்தையைக் காட்ட வேண்டும்"*** *என்ற பழமொழிக்கேற்ப, அதன் மதிப்பை உணரும் இடத்தில் மட்டுமே அறிவை வெளிப்படுத்த இது உதவுகிறது.*
- ***செயல்பாட்டுக் கணிப்பு:*** *பகுத்தறிவே ஒரு செயலை* ***சிறப்பாகச் செய்து முடிக்க*** *உதவுகிறது. இதனால்,* ***எதை எல்லாம் செய்ய முடியும், எதைச் செய்ய முடியாது, அதன் திறன் எவ்வளவு*** *என்பதைச் சரியாகக் கணிக்க இயலும். கல்வி 'எவ்வாறு செய்ய வேண்டும்' என்பதை மட்டுமே கற்றுத் தரும் நிலையில், அதன் சாத்தியக்கூறுகளைப் பகுத்தறிவே தீர்மானிக்கிறது.*
- ***ஆபத்து மேலாண்மை:*** *வணிகம், அறிவியல் அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில்,* ***Risk management, risk analysis, risk mitigation*** *(ஆபத்துக் கணிப்பு, பகுப்பாய்வு மற்றும் குறைப்பு) போன்ற அனைத்து முக்கிய தீர்மானங்களும் பகுத்தறிவால் மட்டுமே சாத்தியமாகும்.*

III. ஒடுக்குமுறைக்கு எதிரான அரசியல் விழிப்புணர்வு

சமூகத்தில் நிலவும் கண்மூடித்தனமான விசுவாசங்கள் மற்றும் பாகுபாடுகளைக் கடந்து சமூக நீதியை நிலைநாட்டுவதற்குக் பகுத்தறிவு இன்றியமையாதது.

- ***கல்வி மறுக்கப்பட்டதன் பின்னணி:*** *ஒடுக்கப்பட்டோருக்குக் கல்வி மறுக்கப்பட்டதன் அடிப்படை நோக்கம் ஆழமானது. கல்வி கற்றால் அவர்கள்* ***சிந்திக்கத் தொடங்குவார்கள்;*** *சரியாகச் சிந்திக்க ஆரம்பித்தால்* ***பகுத்தறிவாளர்கள் ஆகும் வாய்ப்பு அதிகம்.*** *பகுத்தறிவு பெருகினால், ஒடுக்குபவர்களால் தொடர்ந்து மக்களை* ***ஏமாற்றிப் பிழைக்க முடியாது****. அத்துடன்,* ***அவர்களது உடமைகளையும், சொத்துக்களையும், உரிமைகளையும்****தராமல் ஒடுக்குபவர்களால் அனுபவிக்க முடியாது என்ற அச்சமே கல்வி மறுப்புக்குக் காரணம்.*
- ***குருட்டு விசுவாசத்தை நிராகரித்தல்:*** *ரசிக வெறி அல்லது* ***ரசிக மனப்பான்மையை*** *முழுமையாகப் புறந்தள்ளிவிட்டு, எந்த ஒரு செயலையும், தலைவரையோ, இயக்கத்தையோ* ***நடுநிலையுடன்*** *அணுகும் திறன் பகுத்தறிவால் மட்டுமே வரும்.*
- ***விமர்சன அரசியல் பார்வை:*** *நாம் எந்த ஒரு சிந்தனையையோ, இயக்கத்தையோ, தலைவரையோ பின்பற்றினாலும், அவர்கள் கூறுவது* ***சரியா, தவறா, அறமா, அறமற்றதா, நம் நலனுக்கானதா*** *என்பதை பகுத்தறிவால் மட்டுமே உணர முடியும்.* ***நமக்கான, நமது நலனுக்கான அரசியல் எது*** *என்பதை அறிய இது உதவுகிறது.*
- ***சமூகப் பாகுபாடு உணர்வு:*** *ஒருவர் நம்மை* ***ஜாதி ரீதியாகப் பாகுபாட்டுடன்*** *நடத்துகிறாரா இல்லையா என்பதை உணர்ந்து, அதற்குத்* ***தகுந்தபடி நிதானத்துடனும், சுயமரியாதையுடனும்*** *நாம் நடந்து கொள்ள பகுத்தறிவு மிகவும் அவசியம்.*

முடிவுரை:

கல்வி ஒருவரின் கண்களைத் திறக்கிறது என்றால், ***பகுத்தறிவு*** *அந்த வெளிச்சத்தை எங்கு, எப்படி, யாருக்குப் பயன்படுத்த வேண்டும் என்று வழிகாட்டுகிறது. சுயமரியாதையான வாழ்வுக்கும், சமூக நீதியை நிலைநாட்டுவதற்கும், ஏமாற்றங்களில் இருந்து விடுபடுவதற்கும், பகுத்தறிவே மிக இன்றியமையாத, வலிமையான சக்தியாகும். பகுத்தறிவின் துணை கொண்டே, ஒரு தனிநபர் தனது கல்வி அறிவை முழுமையாகப் பயன்படுத்தி,* ***தடங்கலற்ற, விழிப்புணர்வுடன் கூடிய, வெற்றிகரமான வாழ்வை*** *வாழ முடியும்.*

- Nithyanandam Vms

கல்வி மட்டும் போதுமா? பகுத்தறிவு அவசியமா? - முனைவர் கா. குமார்

இன்றைய காலகட்டத்தில் ஒருவனால் எளிதில் கல்விகற்க முடிகிறது, அவனால் முனைவர் பட்டம் வரையில் பெற குறைந்தப்பட்ச எந்த தடையும் இருக்கப்போவதில்லை. குறிப்பாக தமிழ்நாட்டில் கல்விகற்க போதுமான சட்டப்பாதுகாப்பு, இடஒதுக்கீடு எனும் கல்வியில் வேலைவாய்ப்புகளில் கிடைக்கும் அங்கீகாரம் இவற்றைக்கொண்டு அனைவராலும் கல்விப்பெறமுடிகிறது. ஆனால் அவர்களால் சமூகத்தில் நிலவுகின்ற இடையூறுகளை பிரித்து அடையாளம் காணமுடிகின்றனவா? சமுகத்தில் நிலவுகின்ற இங்கு புரையோடி இருக்கின்ற சா"தீய-மத" இழிவுகளை அவர்களால் தான் கற்றக்கல்வியின் மூலம் புரிந்துக்கொள்ளமுடியுமா? என்றால் நிச்சயம் அது முடியாது. இந்த உலகில் ஒருவன் கல்வி கற்பதினால் அவனுக்கு வேண்டிய அறிவு கிடைத்துவிடுமா என்றால் இல்லை?. ஏனெனில் கல்வி அறிவையும் தாண்டி ஒருவன் சிந்திக்க வேண்டுமானால் அவனிடம் இயற்கையான பகுக்கும் அறிவு தேவை.

சீர்த்தூக்கிப்பார்க்கும் அறிவே சிந்தனை அறிவு; அப்படியான சிந்தனையின் மூலம் விளையும் தனித்துவமே பகுத்தறிவு என்பதை விளங்கிக்கொள்ளவேண்டும். இன்றைய தலைமுறைக்கு அதுவும் Gen-Z என்று சொல்லிக் கொள்கிறவர்களுக்கு இருக்கிறதா? என்றால் நிச்சயம் இல்லையென்றே சொல்லலாம். கரூர் கலவரத்திற்கு பிறகு நாம் உறுதியாகவே அறிவிக்கலாம். அவர்கள் ரசிக மனநிலையிலேயே இன்னும் திகழ்கிறார்கள். தான் ரசித்தக் கொண்டாடிய ஒரு நடிகன் அரசியல் கட்சி ஆரம்பிக்கிறார், கொண்டாடுகிறார்கள் ஆடிகழிக்கிறார்கள் ஆனந்தக் கூத்தாடி. எதன் அடிப்படையில் இந்த கொண்டாடம் என்றால் ஒரு மாற்றம் வரட்டும் என்கிறார்கள், சரி என்ன மாற்றம் என்றால் பதில் இல்லை. இதுதான் இவர்களின் அரசியல் அறிவு.

ரசிக மனநிலை என்றும் கருத்துக்களையோ, தத்துவத்தையோ ஏந்த முடியாது. தத்துவமில்லாமல் எதற்கும் தலைமை ஏற்கவும் முடியாது. இந்த அரசியல் தெளிவு எதுவுமின்றி தான் நேசித்த ஒரே காரணத்திற்காக அடிப்படை அரசியல் கொள்கை என்ற எந்தவொரு முகாந்திரமும் இல்லாத நடிகர் கட்சி ஆரம்பித்த உடனே இவர்களுக்கு புது உலகம் உதித்தது போலவும், அதுவரை சரியாக தெரிந்த எல்லாம் தவறாகவும் தெரிகிறது. அதுதான் அவர்களின் இயலாமை அதுதான் அவர்களின் அறிவும்.

எந்த ஒரு தெளிவுமின்றி தான் கற்றகல்வியின் துணைக்கொண்டும் பார்க்காமல், சிந்திக்கமுடிகிறது என்றால் இதுதான் கண் இருந்தும் குருடராய் திரிவது. அவர்களின் நிழல் திரைத்தலைவன் கரூரில் நண்பகல் 12 மணிக்கு பேசுகிறார் என்றால் இவர்கள் விடியல் காலையிலே சுமார் 3 மணியளவிலே கூட்டம் கூடியதாக கூறுகிறார்கள் பெருமிதத்துடன். கட்டுக்கடங்காத கூட்டம் என்கிறார்கள் வெக்கமே இல்லாமல். அத்தகைய கட்டுபடுத்தபடாத, அரசியல் படுத்தப்படாத கூட்டத்தின் மூலம் இழப்போ 41 நபர்கள், இதற்கு யார்? பொறுப்பு ஏற்பார்கள். கல்வியை பெற்றும் பகுத்தறியும் திறனற்ற சிந்திக்க அஞ்சும் இன்றைய இளைய சமூகத்தினர் தான் பொறுப்பு. என்ன மாதிரியான கலாச்சாரம் இது எங்கு கூட்டமென்றாலும் கூடுகிறார்கள் ஆட்டு மந்தைகளாக. ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது ஆட்டுக்கார அலமேலு திரைப்படம் வெள்ளிவிழாப்படம். அதில் நடித்த ஆடு ஊர் ஊராக அழைத்து வரப்படுகிறது, மக்கள் அந்த ஆட்டை பார்க்க அலை மோதுகிறார்கள். கவிக்கோ அப்துல்ரகுமான் இப்படித்தான் எழுதினார் "ஆடு என்னமோ சிங்கம் போல் வந்தது மக்கள் தான் மந்தையாகிப்போனார்கள்" என்று. உண்மை தான் மந்தை மனநிலை மனிதர்களிடம் வேறு என்ன எதிர்ப்பார்க்கமுடியும். இவர்களை இன்னுமும் கல்ட் (Cult) மனநிலை மனிதர்கள் எனலாம். கல்ட் (Cult) மனநிலை கொண்டவர்கள் தன் தலைவன் தேவதூதன் போலவும் அவரே தனக்கு எல்லாமும் என்ற மனத்தெளிவற்ற நிலையில் அவர்கள் எதற்கும் கட்டுப்படமாட்டார்கள். தன் தலைவன் என்ன சொல்கிறாரோ அதைதான் அவர்கள் செய்வார்கள், அவர்களுக்கு வேறு எதுவும் தெரியாது. வேறுயார் சொன்னாலும் கேட்காத கல்ட் மனநிலை மிகவும் ஆபத்தானது. இன்றைய பெற்றோரின் வளர்ப்பையும் நாம் கேள்விக் கேட்கதான் வேண்டும். விடியல் காலையில் எழுந்த படிக்கிறானா என்று கண்காணிக்கிறார்களா? கண்டிப்பதுமில்லை. ஆனால் விடியல்

காலையில் ஒரு நடிகனைப் பார்க்க செல்கிறார்கள் என்றால் கண்டித்திருக்க வேண்டாமா? இந்தமாதிரி பெற்றோர்களும் இதற்கு பொறுப்பு.

அரசியலில் சுயக்கட்டுபாடு என்பது தேவையான நல்லொழுக்கமாகும். அதுதான் சமூகத்தில் ஏற்படும் மாற்றங்களைப் புரிந்துக்கொள்ளும் திறன் அரசியல் தலைவனுக்குத் தேவை, தொண்டர்-ரசிகனுக்கும் தேவை. இந்தியாவில் எப்பொழுதும் தமிழ்நாடு தனிசிந்தனை மிகுந்த நாடாகவே திகழ்கிறது. இது ஏதோ இப்பொழுது ஏற்பட்டது கிடையாது 5000 ஆண்டுகள் தொடர்ச்சி அது. இந்தியா என்ற நாடு தோற்றுவிக்கும் முன்பே தமிழ்மொழி பேசும் பெரும் நிலம், அந்த நிலத்தினை ஆட்சிசெய்யும் தமிழ் பேராசான்கள் இருந்துள்ளார்கள். கல்வி பிராமணர்களுக்கு மட்டுமே உரியது என்று ஆரிய பிராமணர்கள் கூறினர். அதைமறுத்து கல்வி அனைவர்க்கும் பொது அனைவருக்கும் உரியது என்றும். நான்கு வகுப்பாக குலத்தை பிரித்து கீழ்வகுப்பில் பிறந்தவன் கல்விகற்கக்கூடாது எனும் போக்கு இருந்த காலத்திலே பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் "நீங்கள் சொல்கின்ற நான்கு வகுப்பில் கீழ்வகுப்பில் பிறந்த ஒருவன் கல்வி கற்றிருந்தால் அந்தக்கீழ் வகுப்புக் கல்வியாளன் அறிவுரையைத்தான் மேல்வகுப்பில் பிறந்தவன் கேட்டு நடக்க வேண்டும்" இதுவே எங்கள் நெறி என்றான் நம் தமிழ் மன்னான். அத்தகை தமிழ் பெரு நிலத்தின் தொடர்ச்சியே பின்னாளில் வழிவந்தவர்கள் அனைவருக்கும் கல்வி எல்லோருக்கும் எல்லாமும் என்ற பகுத்தறிவுக் கோட்பாடுகளை விதைத்து மூடநம்பிக்கைகளை வேரோடு பிடிங்கி எரிந்த நீதிகட்சி தொடங்கி பெரியார், அண்ணா, கலைஞர் போன்றவர்கள் பாடுபட்டனர் அதன் விளைவே இந்தியாவில் தமிழ்நாடு தன்னிகர் நாடு. பள்ளிக் கல்வியை முடித்து உயர் கல்வியில் சேர்பவர்கள் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அதிகம். அதாவது தேசிய சராசரியை விடவும் இரண்டு மடங்கு அதிகம். இந்தியாவின் சிறந்த 100 கல்வி நிறுவனங்களில் தமிழ் நாட்டில் மட்டுமே 37 கல்லூரிகள் உள்ளதாக மனிதவள மேம்பாட்டுத்துறை வெளியிட்டுள்ளது. அதுமட்டுமில்லாமல், இந்தியாவிலே கல்வி விகிதாசரம் தமிழ் நாட்டில் 80.33%.

இவ்வளவு தெளிவான இத்தேசத்தில் அரசியல் கையாடல் சிறிதும் இல்லாத ஒரு கூட்டம் இருப்பது வேதனையே. ஆனால், இன்றோ தத்துவமில்லாத ஒரு தனி நபரை தலைமையாக ஏற்றுத் தடுமாறி தன்வலிமை இழந்து திக்கு தெரியாமல் அலைகிறது ஒரு கூட்டம். இது எதனால் வந்தது என்றால் கல்வியை வெரும் பாடமாக பட்டம் பெற்றால் போதும் என்ற மந்தபுத்தியால் வந்த விளைவே இந்த இழப்பிற்கு விலை. சிந்திக்காமல் போனதன் விளைவால், ரசிக மனநிலை கூட்டதால் ஏற்பட்ட இழப்பை எதனைக்கொண்டு ஈடு செய்யமுடியும் என்ன சொன்னாலும் இது மனித அறிவற்ற ஒழுக்கம் என்றொரு சிந்தனையற்ற செயல்தான். வேதம் சொல்வதே இறுதியானது, அந்த தத்துவத்தை மறுபேச்சி கூறாமல் அப்படியே ஏற்றுக்கொள் என்கிறது ஆரிய பண்பாடு. "அந்தம்" என்றால் முடிவு; வேதம் சொல்வதே இறுதியானது, அதைதான் "வேதாந்தம்" என்றார்கள். தமிழ் சிந்தனையாளர்கள் வேதாந்தம் என்ற கருத்தியலை ஏற்காமல் மனித அறிவு சொல்வதே இறுதியானது என்றார்கள். அதனால் அறிவு சொல்வதே இறுதியானது என்ற பொருளில் "சித்தாந்தம்" என்ற கருத்தியலை முவைத்தார்கள். வான் புகழ்கொண்ட அய்யன் வள்ளுவனோ "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்பொருள் காண்பது அறிவு" என்று அறிவை முன்னிலை படுத்தினார். தந்தை பெரியாரோ "சிந்தி" என்கிறார், நானே சொன்னாலும் வேறு யார் சொல்லியிருந்தாலும் உன் அறிவுக்கு ஏத்துகாத எதையும் நம்பாதே என்றார். இப்படி ஒரு இனக்குழுவில் வளர்ந்த இவர்கள் தான் எவன் எது சொன்னாலும் அவன் பின்னால் போய் பகுத்தறிவுக்கு ஒவ்வாத விசகருத்தியல்களை கக்கிக்கொண்டு திரிகிறார்கள்.

பெரியார்-அண்ணா-கலைஞர் இவர்கள் எல்லாம் அன்றைய காலக்கட்டங்களில் பேசியே இயக்கத்தை வளர்த்தார்கள். கூட்டத்தைக்கூட்டி பேசவில்லை தங்கள் பேச்சின் மூலமாக கருத்துக்கள் மக்களை சென்றடைந்து அதன் தொடர்ச்சியாக மக்கள் வந்தார்கள், கருத்துகள் அவர்களை அழைத்துவந்தது. அவர்களிடம் நேர்மை இருந்தது மக்களை எளியோர்களாக எதுவும் செய்ய இயலாதவர்களாக இருந்த காலத்தில் பயணித்தவர்கள். அவர்களின் சிந்தனை தூங்கிக்கிடந்த - துவண்டுகிடந்த மக்களை எழவைத்தது, அதன் தொடர்ச்சியாக பலர் எழுதத்தொடங்கினார்கள். ஆனால், இந்த ரசிக தலைவனுக்கு அடிப்படை நேர்மை என்பது இல்லை, நேர்மை இல்லாதவன் எப்படி தலைவன் ஆகமுடியும், அப்படி நேர்மையில்லாதவனை தலைவனாக ஏற்றால் நீயும் குற்றவாளியே. படிக்காத பாமரர்களைப் போலவே படித்தவர்களும் சாதி, சமய மூடத்தன்மைக்கு ஆளாகியிருப்பதைக் கண்கூடாக காணமுடிகிறது இன்றைய தலைமுறையினரிடம்.

26.10.1972 அன்று பெரியார் விடுதலையில் எழுதிய தலையங்கத்தில் இப்படிதான் குறிப்பிடுகிறார் "பி.ஏ., எம்.ஏ., டாக்டர் பட்டம்" பெற்றவர்களெல்லாம் இந்த மடமையான காட்டுமிராண்டிச் செயலுக்கு அடிமைகளாக இருக்கின்றார்கள் என்றால், இன்றைய கல்வி எவ்வளவு தூரம் அறிவை, மானத்தை உண்டாக்க முடியாத, அறிவுக்குப் பயனற்ற கல்வியாக இருக்கிறது என்பதைக் கருதி வேதனைப்படுகிறோம். அரசாங்கமும் இன்றைக்கும் கல்விக்குத் தகுதி, திறமை இல்லை என்றுதான் கவலைப்படுகிறதே தவிர, 'அக்கல்வியினால் அறிவு ஏற்படவில்லையே' என்று எந்த அரசாங்கமுமே கவலைப்படுவதாகத் தெரியவில்லை' என்று குறிப்பிடும் செய்தியில் சிறிதும் எந்த மாற்றமும் இன்றி இன்றும் இந்த இழிநிலையே நீடிக்கிறது என்பது வேதனை. மேலும் பெரியார் சொல்லுகிறார் 'ஒரு மாணவனுக்குப் படிப்பறிவும் தேவை, பகுத்தறிவும் தேவை, இரண்டும் எப்போது அவனுக்கு ஒரு சேர கிடைக்குமென்று இன்னும் உறுதிபடத் தெரியவில்லை. அதுவரை இரண்டையும் தனித்தனியாகவே அவன் பெற்றாக வேண்டும். பாடநூல்களோடு சிறிய அளவிலேனும் பிறதுறை நூல்களையும் அவன் கண்டிப்பாகப் படித்தாக வேண்டியிருக்கிறது. அப்படியில்லாமல் ஒருவன் மனப்பாடம் செய்து அக்கல்வியின் மூலம் எவ்வித உயர்ந்த பட்டத்தை அடைந்தும் படிப்பாளி என்று கூறப்பட்டாலும், அவனுக்குப் போதிய பொது அறிவும் பகுத்தறியும் தன்மையும் இல்லையெனில் உலகியலில் தகுந்த ஞானமும் அடைந்தவனாகக் கருதப்பட மாட்டான்' என்று கண்ணத்தில் அரைந்தார் போல கூறுகிறார் தந்தை பெரியார் (திருச்சி சொற்பொழிவு - 7.11.1954, விடுதலை - 12.11.1954).

இன்றைய அறிவியல் உலகம் முன்னேறியிருக்கின்ற அதே வேலையில் உலகம் முழுமைக்கும் உலகமயப் பொருளியல் ஆக்கிரமிப்பும், பண்பாட்டு சுரண்டலும் தீவிரப்பட்டுள்ளது. பல்வேறு தேசிய இனமக்களும் தமது பண்பாட்டு அடையாளங்களையும், தாய்நிலங்களையும் மீட்கவும் போராடிக்கொண்டு இருக்கின்றனர். இந்நிலையில், தமது வரலாற்று இருப்பை பதிவு செய்யப் போராடும் இனமாக உலகின் மூத்த தமிழர் இனம் இன்றைக்கு பண்பாட்டுத் திணிப்புகளை எதிர்த்து நம்பிக்கைக்கொண்டு களமாடாமல், தன் நிழல் திரைத்தலைவனின் பின்னால் எந்த நம்பிக்கையும் அற்று அலைகிறார்கள். தமிழ் மக்கள் நடத்திக்கொண்டுள்ள அரசியல் போராட்டங்களை இளையோர்களிடம் பதிவு செய்யவும், பரப்புரை செய்யவும் நாம் இழந்தவற்றை மீள்கட்டமைக்கவும் இன்றைய இளையபிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்க பல்வேறு தளங்களை அவசியம் பயன்படுத்தவேண்டும்;, அதை நாம் முன்கைக்கொண்டு முன்னெடுப்போம்.

"மாணவர்கள் சிந்தித்தாலே மற்றவர்கள் செயல்படுத்துவதற்கு சமானமாகும். எனவே நீங்கள் சிந்தித்தால் போதும். செயல்பட நாங்கள் இருக்கிறோம்" என்று 5.8.1979 அன்று மதுரை யாதவர் கல்லூரியில் மாணவர்களுக்கு கலைஞர் உரையாற்றினார். சிந்திக்கச் சொல்கிறார் ஒரு தலைவர் என்றால் மாணவர்கள் தான் தமிழினத்தின் எதிர்கால விளைச்சல் என்று அவருக்குத்தெரிகிறது. காலத்தை முன்னோக்கிப் பார்கிறார் அவர்தான் "சிறந்த தலைமை தத்துவம்; அதுதான் சிறந்த தலைவனுக்கும் தத்துவம்". இன்றைய கல்வி எதையும் பெற்றுதரவில்லை என்று ஏளனம் பேசாமல், நம்மைச்சுற்றியுள்ள அரசியலை ஆராய்ந்து எதுச்சிறந்தது என்று பயணிக்க வேண்டுமே அல்லாமல் சும்மா கைகாட்டிவிட்டு ஓடி ஒழிவதல்ல. கல்வி எந்தளவிற்கு முக்கியமோ அதைவிடவும் முக்கியம் பகுத்தறியும் சிந்தனை, அப்படி இருந்தால் தான் அவனால் எந்தவித கவர்ச்சியிலும் ஆட்கொல்லாமல் தன்சிந்தனையில் வாழமுடியும், இல்லையென்றால் அவன் முடிவை வேறுயாரோ எடுக்கிறார்கள்; அவனை வேறுயாரோ கையாள்கிறார்கள் என்றே அர்த்தம்.
கல்வியோடு பகுத்தறியும் சிந்தனையும் அவசியம்!
அத்தகைய கல்வியை நோக்கி பயணிப்போம்!

தோழமையுடன்..
முனைவர் கா. குமார்
உதவிப் பேராசிரியர்,
விலங்கியல் துறை,
அ.வீ.வா. நினைவு திரு புட்பம் கல்லூரி (தன்னாட்சி),
பூண்டி, தஞ்சாவூர் 613503.
தொடர்புக்கு: 9384582806
drsrikk@gmail.com

கல்வி மட்டும் போதுமா? பகுத்தறிவு அவசியமா? - ராகவா தனபால்

நாம் அனைவரும் "கல்வி வாழ்வின் வெற்றி வழிகாட்டி" என்று சிறுவயதிலிருந்தே கற்றுக் கொண்டுள்ளோம். பள்ளி, கல்லூரி, பட்டம், சான்றிதழ்கள் இவை எல்லாம் நம்மை அறிவாளிகளாக மாற்றும் கருவிகள் என்று நம்புகிறோம். ஆனால் உண்மையில், கல்வி மட்டும் போதுமா? இல்லையெனில் பகுத்தறிவு அவசியமா? என்கிற கேள்வி நமது மனதில் எழுப்பப்பட வேண்டும்.

கல்வி அறிவை வளர்க்கும். கணக்குகள், வரலாறு, அறிவியல், கலை—இவற்றை கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கிறது. ஆனால் அறிவை வாழ்க்கைக்கு மாற்றும் திறன் இல்லையெனில், கல்வி வெறும் காகிதத்துக்குச் சமம்.

அறிவை மனிதன் உணர்ச்சி, நெறி, நேர்மை மற்றும் பொது நலனுக்காக பயன்படுத்தும் திறனே பகுத்தறிவு.

பகுத்தறிவு என்பது சிந்தனை, உணர்வு, செயல்திறன், நீதியை ஒருங்கிணைக்கும் திறன். இது **கல்வி** இல்லையெனில், ஒரு பட்டதாரி உலகின் மிக உயர்ந்த அறிவை பெற்றிருந்தாலும், அவன் வாழ்க்கை மற்றவர்களுக்கு பாதிப்பானதாக இருக்கும். அதே நேரத்தில், சாதாரண கல்வி பெற்றவர், பகுத்தறிவுடன் செயல்பட்டால், வாழ்விலும் சமூகத்திலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

இந்தச் சூழலில், தந்தை பெரியார் நமக்கு ஒரு வெளிச்சமாக இருக்கிறார். அவர் இந்திய சமூகத்தில் கல்வி, சமத்துவம் மற்றும் பகுத்தறிவின் பெரும் அடையாளமாக திகழ்ந்தார்.

பெரியார் கூறிய போதனைகள்:

"அறிவு வாழ்வின் ஒளி; பகுத்தறிவு சமூகத்தின் துணை", நமது வாழ்விலும் நமது சமூகத்திலும் அதிர்ச்சி விளைவிக்கின்றன. சாதிய, மத பாகுபாடு போன்ற பழமையான அணைகள் சமூகத்தில் இருந்த காலத்தில், அவர் மக்கள் மனதில் சிந்திக்கும் திறன், நேர்மை, சமூக நலம் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தினார்.

வரலாறு இதற்கான எடுத்துக்காட்டுகளால் நிரம்பியுள்ளது. பெரிய சிந்தனையாளர்கள், தத்துவஞானிகள், சமூக மாற்றக்காரர்கள்—பலர் உயர்ந்த கல்வி இல்லாமல் இருந்தாலும், அவர்களது பகுத்தறிவு, மனித நேயம், தீர்மானம் அவர்களை உலகிற்கு மதிப்பீடு செய்யக்கூடியவர்களாக்கியது. அதே சமயம், கல்வி பெற்ற, ஆனால் பகுத்தறிவு இல்லாதவர்கள் சமூக நலத்தை பாதித்து, வெற்றித்திருட்டில் வாழ்ந்தனர்.

திருக்குறள் கூறுகிறது:

"அறிவுடைமை அறிவினுடைமை யாவுடைமை;

அறிந்தறிவுடைமை பெரிது."

இதன் அர்த்தம் நமக்கு தெளிவாகக் கூறுகிறது: கல்வி தனிமையாக போதாது; அதனுடன் சிந்தனை, பகுத்தறிவு, உணர்ச்சி, நேர்மை, சமூக நலம் ஆகியவை இணைந்திருக்க வேண்டும். மனிதன் அறிவை வாழ்க்கைக்கு பயன்படுத்தி, மற்றவர்களுக்கு நன்மை செய்யும் போது மட்டுமே உண்மையான வெற்றி கிடைக்கும்.

இன்றைய உலகில் அறிவு மிகப்பெரிய சக்தியாக இருக்கிறது. ஆனால் அதனை பகுத்தறிவுடன் செயல்படுத்தாதால் அது அழிவையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும். எனவே, கல்வி ஒரு கருவி; பகுத்தறிவு அந்த கருவியை இயங்கச் செய்யும் சக்தி. கல்வி இல்லையெனில் மனிதன் வழியறியாத கற்பனை போல; பகுத்தறிவு இல்லையெனில் கல்வி வெறும் உலர் காகிதம்.

முடிவில், நம் வாழ்க்கை வெற்றியோடு நிறைந்ததா, மனித நேயம் வளர்ந்ததா, சமூக நலம் ஏற்பட்டதா என்பதைக் கணிக்க, நமக்கு கையிலுள்ள கல்வி மட்டுமல்ல; நமது பகுத்தறிவு, நேர்மை, செயல்முறை மற்றும் சிந்தனை முக்கியமானது. உலகத்தை மாற்ற விரும்புகிறீர்களா? முதல் படி: கல்வி

மட்டுமில்லாமல், பகுத்தறிவையும் கற்றுக்கொள்ளுங்கள். தந்தை பெரியாரைப் போல், அறிவும் சமூக நலமும் இணைந்த செயல்களை நாமும் செய்வோம்.

- ராகவா தனபால்

கடைசி நாயகன் - சிரா

சினிமா மக்களுக்கு மிக நெருக்கமானது, அரசியலுக்கும், குறிப்பாக தமிழ்நாட்டில். அண்ணா, கலைஞர் உருவாக்கித் தந்த வழியே சினிமாவும் அரசியலும் தமிழ்நாட்டில் இன்றளவும் இணைந்தே இருக்கின்றன. தமிழ்நாட்டின் பண்பட்ட, முன்னேறிய அரசியல் பார்வைக்கு சினிமா இட்ட அடித்தளம் மிக உறுதியானது. நம் மக்களுக்குத் தேவையான சமூக மாற்றத்திற்கான சிந்தனைகளாகிய சமூக நீதி, மொழி அரசியல், திராவிட இயக்கம், சுய மரியாதை ஆகிய கோட்பாடுகளை எல்லோர் மனதிலும் எளிதில் பதியும்படி சொன்னது. "அம்பாள் எந்தக் காலத்திலே பேசினாள்? அறிவு கெட்டவனே!", "அது பேசாது; கல்!" என வசனங்கள் பேசியது. அதற்கு முன் இருந்த பழங்கருத்துக்களை உடைத்தெறிந்தது. நடிகர்கள் இருந்தார்கள். கொள்கைகள் பேசினார்கள். அரசியல் பேசினார்கள். அந்தக் கொள்கைக்கும் அரசியலுக்கும் ஒரு கூட்டம் கூடியது. பின் அவர்களுக்கெனவே அக்கூட்டமானது. நடிகர்கள் நாயகர்கள் ஆனார்கள். இவர்கள் நாயகர்களாக உருமாறியதற்கு பின் ஓர் அரசியல் இருந்தது. அரசியலுக்கு அவர்கள் வந்த போதும், அவர்கள் ரசிகர்களை ஓரளவுக்கு சிந்திக்க வைத்ததில் அதற்கு முன்னிருந்த அரசியல் உதவியது. இதெல்லாம் பழங்கதை.

நடிகரொருவரால் முதலமைச்சர் ஆக முடியும் என்பதை அறிந்த பிறகு, சினிமா மாறியது. அரசியலுக்கு வருகிற ஒற்றைக் குறுக்கு வழி சினிமா என நினைக்க ஆரம்பித்தார்கள். ஆக்ஷன், கட் - களுக்கு நடுவே நடித்தது போலவே தான் அரசியலும் என்று எண்ணிக்கொண்டனர். நடிகன் நாயகனாவதைத்தான் இலட்சியமாகக் கொண்டான். ரசிகர்களை நாளைய வாக்காளர்களாகவே பார்க்கத் தொடங்கினான். ஆனால் வாக்காளனுக்கு ஓர் அரசியல் இயக்கம் தரும் பயிற்சியோ பயனோ , அவன் ரசிகர்களுக்குக் கிடைக்க வேண்டுமென, அவன் நினைக்கவில்லை. மாறாக அரசியல்படுத்தப்பட்டுவிட்டால் தன் நாயக பிம்பம் நொறுங்கிவிடும் என்பதில் மிகத்தெளிவாய் இருந்தான். ரசிகர்களை விசிலடிக்கவும் தன்னை உயர்த்திப் பிடிக்கவுமே பயன்படுத்தினான். மூன்று குரங்குகளையும் சேர்த்த மாதிரியே தன் ரசிகர்களை ஆக்கினான். நாயகன் பிம்பத்தை தூக்கிப் பிடிக்க, ஐந்து சண்டை, ஆறு பாடல், ஒரே ரட்சகன் என சினிமாவை மாற்றினான். அண்ணா, கலைஞருக்கு முன் புராணங்களின் கடவுள் பெருமை மட்டுமே பேசிய கதை கொண்ட சினிமாக்களுக்குப் 'புது' வடிவந் தந்து தன்னை இக்காலக் கடவுளாகக் காட்ட முயன்றான். மக்களுக்குத் தேவையான அரசியல் போய் அரசியலே தேவையில்லாத ரசிகர்களை உருவாக்கியது நாயகனின் சினிமா. கூட்டு முயற்சியான சினிமா ஒரு நாயகனின் அரசியல் வருகைக்கான வழியாய் மாறியது. நாயகனைத் தவிர பிற நடிகர்களுக்கோ தொழில்நுட்பக் கலைஞர்களுக்கோ பெரும் வேலையும் ரசிகர்களும் சேராத வண்ணம் பயணப்பட்டது நாயகன் சினிமா. கடந்த சில வருடங்களில் அதிக ரசிகர்களைத் தனக்கென உருவாக்கிய பிற கலைஞர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். நல்ல வசனமோ, நல்ல பாடலோ நாயகனுக்கே போய் சேரும், தோல்விகள் மட்டும் அவனைச் சேராது. பலரால் உருவாக்கப்படும் சினிமா ஒரே ஒரு மனிதனுக்கே எனவாகி தரங் குறைந்து போனது.

அப்படிப்பட்ட சினிமாக்களை அனேகமாக எல்லோருமே ரசித்திருப்போம் தான். இது நம்முடைய பிழை மட்டுமே இல்லை. நல்ல சினிமாக்களை சில தலைமுறைகளுக்கே காட்டாது போன சினிமாவின் பிழையுந்தான். முதுகெலும்பு இல்லாத சினிமாக்களைப் பார்த்தே பழக்கப்பட்ட தலைமுறைகள் விசிலடிக்க மட்டுந்தானே செய்யும். அந்த நேரத்தில் உருவான நாயகன்களுக்கு இப்படிப்பட்ட ரசிகக்கூட்டங்கள் *cult*-ஆக இருப்பது ஆச்சரியமே இல்லை. இந்த நாயகன் வழிபாடு அரசியல் விழிப்புணர்வு இல்லாததால் மட்டும் ஏற்பட்டதல்ல. அது கலையின் தோல்வியும் கூட. ஒரு சில முதுகெலும்புகள் சினிமாவில் முளைத்திருந்திருந்தால் நாயகன் நடிகராகவே இருந்திருக்க வாய்ப்புண்டு.

சமூகமாய் நாம் கோட்டைவிட்டது பண்பட்ட கலையைத் தூக்கிப்பிடிப்பதில். அடுத்த தலைமுறைக்குப் பகிர்வதில். அங்கேதான் முளைத்திருக்கிறது இன்றைய வேதனை. எப்படி முதலில் புரட்சிக்கு சினிமா வழி செய்ததோ அப்படியே இப்போதும் இந்த இருளில் ஒரு தூரத்து நட்சத்திரமாய் ஒளி துடிக்க வேண்டும். அந்தச் சிறு ஒளி போதும் நாம் தொலைத்த கலைக்கு வழி தேட அதற்கான நேரம் ஆரம்பித்து

விட்டதாகவே தெரிகிறது. மக்களுக்குத் தேவையான அரசியலைப் பேச மறுபடி ஆரம்பித்திருக்கிறது நம் சினிமா. இந்தச் சினிமாக்களில் நாயகன்கள் தாண்டி நடிகர்கள் தெரிகிறார்கள். இயக்குநர்கள் தெரிகிறார்கள். கதைகள் தெரிகிறது. கலைஞர்கள் தெரிகிறார்கள். இந்தச் சினிமாக்கள் வெற்றியும் பெறுகிறது. ரசிகர்களுக்கு அரசியலை ஓரளவுப் புரியச் செய்கிறது. நிறையப் பேசச் செய்கிறது. ஒரு நல்ல பாதைக்கு நம்மை திரும்பச் செய்கிறது.

மூன்று குரங்குளும் கைகளை எடுத்து உயர்த்தட்டும். அவர்கள் பார்க்க மறுத்ததை இது காட்டுகிறது. அவர்கள் கேட்க மறுத்ததை இது கேட்கச் செய்கிறது. அவர்கள் நம்ப மறுத்ததை இது நம்ப வழி செய்கிறது. நடிகர்கள் பேசிய, "அது பேசாது; கல்", நடிகன்கள் பேசிய, "ஒரு வாட்டி முடிவு பண்ணிட்டேன்னா என் பேச்ச நானே கேட்க மாட்டேன்", என்னும் இரு வசனங்களில் எது தனக்கானதென அவர்களே முடிவெடுக்கட்டும். அதற்கான வழிகாட்டும் ஒளியாய் பண்பட்ட கலை அமையட்டும். சிறந்த ஒன்றை ரசிகன் தேர்ந்தெடுக்க முயற்சி செய்தாலே கடைசி நாயகன் மறைந்து போவான்.

- சிரா

மௌன இளைஞர்கள் – பிலால் அலியார்

இன்றைய இளைஞர்கள் முந்தைய தலைமுறையை விட அறிவில் சிறந்தவர்களாகவும், தொழில்நுட்பத்தில் கரைத்தேர்ந்தவர்களாகவும், புதிய கண்டுபிடிப்புகளை உடனடியாகப் பயன்படுத்தும் ஆற்றல் கொண்டவர்களாகவும் திகழ்கிறார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிந்தைய தாராளமய பொருளாதார சிந்தனை உச்சத்தை எட்டியபின் பிறந்த இத்தலைமுறை அறிவார்ந்த முறையில் செயல்படுவதோடு, நுகர்வு கலாச்சாரத்தின் மையமாகவும் மாறியிருக்கிறது.

உலகளாவிய தகவல் பரிமாற்றமும், நாட்டைத் தாண்டிய கல்வி வாய்ப்புகளும், இளைஞர்களின் வாழ்க்கை முறையை ஆக்கப்பூர்வமாக மாற்றியுள்ளன. ஆனால் அதே நேரத்தில், இந்த முன்னேற்றங்களை அச்சத்துடன் நோக்கும் சமூகப் பார்வையும் அதிகரித்து வருகிறது. சமூக வலைதளங்களின் அளவில்லா வீச்சும், அவற்றின் மீதான மயக்கமும், அவற்றால் உருவாகும் மாய சமூக வெளிச்சமும் இளைஞர்களை தவறான வழியில் தள்ளுகின்றன.

தமிழ்நாடு போன்ற கல்வியில் முன்னணியில் உள்ள மாநிலத்தின் இளைஞர்கள், சினிமா கவர்ச்சியால் இழுக்கப்பட்டு கட்டுப்பாடற்ற கூட்டங்களாக, கும்பல்களாக நடமாடுவது — இதனால் சமூகத்தில் பதட்டம் உருவாகி வருவதை நாம் அச்சத்துடன் காண வேண்டியிருக்கிறது.

புதுயுக இளைஞர்கள் தொழில்நுட்ப அறிவில் முன்னேறியிருந்தாலும், சமூக அறிவியல் மற்றும் அரசியல் புரிதலில் ஆழமற்ற நிலையில் உள்ளனர் என்பதே வருந்தத்தக்க உண்மை. தமிழ்நாட்டின் சமத்துவம், சமூகநீதிக் கொள்கைகளுக்கு எதிராகவும், அதன் உண்மைப் பொருளை அறியாமலாகவும் இயங்கும் இளைஞர்கள் பெருகி வருவது கவலைக்குரிய நிலை.

வெறும் கைப்பேசி திரைகளில் வழியும் பாதி உண்மைகள் மற்றும் முழு பொய்கள் கொண்டு நுனிப்புல் மேயும் ஆடுகள் போலச் சிந்திக்காமல் சுழலும் நிலை உருவாகியுள்ளது. அதே நேரத்தில், தங்களின் கடவுளாக நாயக பிம்பங்களையும், சாதிய முகங்களையும் உயர்த்திப் பேசும் புதிய ஓட்டம் உருவாகியுள்ளது. ‘‘பெரியார் மண்’’ என்ற பெருமைக்குரிய சொல்லாடல் கூட இன்று கேள்விக்குறியாக மாறியுள்ளது.

அரசியலே நம் வாழ்வை தீர்மானிக்கும் சக்தி என்பதை உணர்ந்த சமூகத்திலிருந்தே இன்று ‘‘நாயக பிம்பமே அரசியல்’’ என நம்பும் தலைமுறை உருவாகியுள்ளது. இந்த நவயுக இளைஞர்களையும், அவர்களுக்கு பின் வரும் மாணவர் தலைமுறையையும் சரியான பாதையில் வழிநடத்துவது — நம் சமூகத்தின் கடமையாகியுள்ளது.

வாசிப்பின் அவசியத்தை தமிழகமெங்கும் வலியுறுத்தி, தொடர்ச்சியான வாசிப்பு பழக்கத்தை வளர்ப்பதும், அதற்கான தளங்களை உருவாக்குவதும் நம் தலையாய பணி. இளம் தலைமுறையினரை அந்த முயற்சிகளில் ஈடுபடுத்தி, அவர்களை முன்னிலைப்படுத்துவதே உண்மையான சமூக மாற்றத்தின் தொடக்கம்.

உலக வரலாறு, இந்திய சமூக வரலாறு, தமிழ்நாட்டின் வரலாறு ஆகியவற்றை சாதிய, சமூக, கல்வி மற்றும் பொருளாதார தளங்களில் வாசிக்கவும், விவாதிக்கவும் நாம் ஊக்குவிக்க வேண்டும். இல்லையெனில் *YouTube*-ல் தோன்றும் போலி ‘‘அறிவாளிகள்’’ மற்றும் *Instagram, TikTok* போன்ற தளங்களில் பரவும் ரீல்

அறிவு நம் இளைஞர்களின் சிந்தனையை மாசுபடுத்தும் அபாயம் உள்ளது.

கரூர் சம்பவம் — கல்வியறிவு மிகுந்த தமிழ் சமூகத்தின் மீது அழிக்க முடியாத ஒரு கறையாக மாறியுள்ளது. இத்தகைய சமூக அவலங்களிலிருந்து நம் தலைமுறையை காப்பாற்ற, தொடர் அறிவுசார் உரையாடலை நம் வீடுகளில், பள்ளிகளில், கல்லூரிகளில், திருமண விழாக்களில்கூட தாமதமின்றி தொடங்க வேண்டிய நேரம் இதுவே.

ஆம், இது பெரியார் மண் தான்!
அதன் அடையாளத்தை உரக்கச் சொல்லவும், அதன் சிந்தனையை மீண்டும் உயிர்ப்பிக்கவும் நாமே முன் வரவேண்டும்.

- பிலால் அலியார்

வாசிப்பு பழக்கம் இல்லாத, அரசியல் புரிதல் இல்லாத இளம்தலைமுறையினரை வழிநடத்துவது எப்படி? - சுந்தரவாணன் பாண்டியன்

இன்றைய உலகம் தகவல்களால் நிரம்பி வழிகிறது. ஒரு சிறிய மொபைல் சாதனத்தில் உலகத்தின் முழு அறிவும் கைகூடும் காலம் இது. ஆனால் அதே நேரத்தில், வாசிப்பு பழக்கம் குறைந்து கொண்டே வருகிறது.

நூல்கள், பத்திரிக்கைகள், சிந்தனைக் கட்டுரைகள் ஆகியவற்றை வாசிக்கும் இளைஞர்கள் குறைந்துவருகிறார்கள். அதேசமயம் அரசியல் பற்றி ஆழமான புரிதலில்லாமல், வெறும் மேலோட்டமான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு விவாதிக்கும் தலைமுறையும் உருவாகிக் கொண்டிருக்கிறது.

இந்த "வாசிப்பு பழக்கமின்மை" மற்றும் "அரசியல் புரிதலின்மை" — இரண்டும் சேர்ந்து சமூகத்தில் ஒரு வெற்று மனப்பான்மையை உருவாக்குகின்றன. இதன் விளைவாக, இளைஞர்கள் சுய சிந்தனை இல்லாமல் கூட்டத்தின் ஓட்டத்தில் நகர்கிறார்கள்; அரசியல் நிகழ்வுகளை விமர்சனப் பார்வையின்றி ஏற்றுக் கொள்கிறார்கள்; சமூக மாற்றத்திற்கான தங்களது பங்கு குறித்து அலட்சியம் காட்டுகிறார்கள்.

கரூரில் நடந்த அரசியல் கூட்ட நெரிசல் மரணம் *(stampede)* போன்ற சம்பவங்கள் இதன் சாட்சியாகும். அங்கே கூடியிருந்தவர்களில் பெரும்பாலானோர் அரசியல் சிந்தனைக்காகவோ, சித்தாந்தப்பிடிப்பிற்காகவோ, கொள்கைசார் உந்துதலிலோ வந்தவர்கள் அல்ல, ஒரு நடிகரைப் பார்க்கும் ஆர்வத்துக்காகவே வந்திருந்தனர்.அந்தப் பேரிழப்பு நமக்கு ஒரு கடினமான விழிப்புணர்வு கொடுத்தது — "அறிவில்லாத ஆவல் உயிரைக் கொல்லும்" என்ற கடுமையான உண்மையையும்

இன்றைய இளைஞர்களின் நிலை – தகவல் சுரங்கத்தையும் அறிவு வறட்சியையும் ஒரு சேரப்பெற்றவர்கள்.

இன்றைய இளைஞர்கள் தகவல்களால் சூழப்பட்டிருப்பதோடு, உண்மையான அறிவை இழந்துள்ளனர். சமூக வலைத்தளங்களில் தினமும் நூற்றுக்கணக்கான செய்திகள், வீடியோக்கள், குறுஞ்செய்திகள் அவர்களை தாக்குகின்றன.
ஆனால் அவற்றில் எத்தனை உண்மையானவை? எத்தனை உண்மைக்கு புறம்பானவை? என ஆராய்வதில்லை.

அவரவர் எண்ணவோட்டத்திற்கு இசைவாய் அமையும் அனைத்து தகவல்களும் அவர் அவர்களுக்கு உண்மையென ஆகிவிட்டது.

அரசியல் நிகழ்வுகள் பெரும்பாலும் "மீம் கலாச்சாரம்", "சிறு வீடியோ விளக்கம்", "பேச்சு ரீல்ஸ்கள்" மூலம் மட்டுமே புரிந்துகொள்ளப்படுகின்றன.

இன்றைய இளைஞர்கள் ஒரு கட்சி அல்லது தலைவரின் பிரபலத்தையே அரசியல் என்று நம்புகிறார்கள்; ஆனால் கொள்கைகள், சட்டங்கள், நிர்வாகம் போன்ற ஆழமான அம்சங்களைப் பற்றி சிந்திக்கவில்லை.

வாசிப்பு பழக்கம் இல்லாமை காரணமாக அவர்களுக்கு நீளமான கட்டுரைகளை வாசிப்பது சிரமமாகிறது. அதனால் அவர்களின் சிந்தனை சிறு சுருக்கங்களில் முடங்கிவிடுகிறது. அதுவே அரசியல் புரிதலை மேலோட்டமாக்குகிறது.

வாசிப்பு பழக்கம் குறைவு – காரணங்களும் விளைவுகளும்

(அ) காரணங்கள்:

1. மொபைல் மற்றும் டிஜிட்டல் கலாச்சாரம் – சமூக வலைதளங்களில் குறுகிய தகவல்களுக்கு அடிமைப்பட்ட இளைஞர்களுக்கு புத்தக வாசிப்பு சலிப்பாக தோன்றுகிறது.

2. குடும்ப சூழல் – பெற்றோர்கள் வாசிப்பை ஊக்குவிக்காத குடும்பங்களில், குழந்தைகளும் வாசிப்பு ஆர்வம் பெறுவதில்லை.

3. பள்ளிக் கல்வி முறை – தேர்வுக்காக மட்டும் வாசிப்பது பழக்கமாகி விட்டது; சிந்தனையை வளர்க்கும் வாசிப்பில் ஊக்கமில்லை.

4. புத்தகங்களின் அணுகுமுறை – புத்தகங்கள் டிஜிட்டல் வடிவில் கிடைத்தாலும் அவற்றைப் பயன்படுத்தும் ஆர்வம் இல்லை.

(ஆ) விளைவுகள்:

1. ஆழமான சிந்தனை குறைவு – வாசிப்பு அறிவை ஆழமாக்கும்; அதில்லாமல் கருத்துகள் மேலோட்டமாகி விடுகின்றன.

2. தவறான தகவல் நம்பிக்கை – வாசிப்பின்றி கிடைக்கும் தகவல்கள் பெரும்பாலும் தவறானவை; அவை சிந்தனைக்கு பாதிப்பை உண்டாக்கும்.

3. அரசியல் அறியாமை – அரசியல் வரலாறு, சட்டங்கள், பொருளாதாரம் போன்றவை வாசிப்பில்லாமல் புரியாது.

4. நடத்தைச் சரிவுகள் – வாசிப்பு மனிதனை பொறுமையாக்கும்; வாசிப்பின்மை அவசரத்தையும் ஆவேசத்தையும் உருவாக்கும்.

அரசியல் புரிதல் இல்லாமை – சமூக விளைவுகள்

அரசியல் என்பது வெறும் தேர்தல் அல்ல; அது ஒரு வாழ்க்கைமுறை. நாடாளுமன்றம், சட்டமன்றம், நிர்வாகம்,கல்வி, பொருளாதாரம் – இவை அனைத்தும் அரசியல் முடிவுகளால் தீர்மானிக்கப்படுகின்றன. அந்த முடிவுகளை விமர்சனமாகப் பார்க்கும் திறன் இல்லாவிட்டால், மக்கள் ஏமாற்றப்படுவார்கள்.

இளைஞர்கள் அரசியலில் ஆர்வமில்லாமல் இருக்கும்போது,

1. ஊழல் பெருகும்,
2. சமூக நீதிக்கு எதிரான கொள்கைகள் நடைமுறையில் வரும்,
3. மதம், சாதி, பிராந்தியம் போன்றவை அரசியலை ஆளத் தொடங்கும்.

கரூர் பேரிழப்பு போன்ற நிகழ்வுகள், அரசியலின் மேல் விமர்சன பார்வையில்லாத மக்களின் நிலையை வெளிப்படுத்துகிறது. மக்கள் "நடிகரை காண" கூட்டமாகச்சென்றனர்; "தலைவரின் கொள்கையை அறிய" அல்ல. அதுவே கூட்டத்தை அபாயமாக மாற்றியது.

இளைஞர்களை வழிநடத்தும் வழிமுறைகள்

இளைஞர்களை வாசிப்பிலும் அரசியலிலும் ஈடுபடுத்துவது ஒரு நாள் நிகழ்வல்ல.

(அ) கல்வித்துறையின் பங்கு

- பள்ளி, கல்லூரிகளில் "வாசிப்பு மன்றங்கள்" அமைக்கப்பட வேண்டும்.
- அரசியல் விழிப்புணர்வுக்காக சிறப்பு வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.
- மாணவர்களுக்கு "அரசியல், சமூக அறிவியல்" புத்தகங்கள் பரிந்துரைக்கப்பட வேண்டும்.
- வருடத்திற்கு ஒரு "வாசிப்பு வாரம்" பள்ளிகளில் கொண்டாடப்பட வேண்டும்.

(ஆ) ஊடகத்தின் பங்கு

- தொலைக்காட்சி மற்றும் இணைய ஊடகங்கள் புத்தக விமர்சனங்கள், அரசியல் விளக்கங்கள் போன்ற நிகழ்ச்சிகளைப் பெருக்க வேண்டும்.

- இளைஞர்களை அரசியலில் ஈர்க்கும் திறமையான விவாதங்கள், உண்மையான தகவல்கள் வழங்கப்பட வேண்டும்.

(இ) சமூக அமைப்புகளின் பங்கு

- நூலகங்கள் கிராமம் முதல் நகரம் வரை புதுப்பிக்கப்பட வேண்டும்.

- வாசிப்பு பயணங்கள், புத்தக கண்காட்சிகள், அரசியல் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட வேண்டும்.

- சமூகச் செயல்பாடுகளில் இளைஞர்களை பங்கேற்கச் செய்தல் – உதாரணம்: சுற்றுச்சூழல், நலச்சங்கங்கள்.

(ஈ) பெற்றோரின் பங்கு

- குழந்தைகளுடன் சேர்ந்து வாசிக்கும் பழக்கம் கொண்டுவர வேண்டும்.

- வீடுகளில் ஒரு சிறிய நூலகம் அமைத்தல்.

- குழந்தையின் கேள்விகளுக்கு அரசியல் அடிப்படையிலான விளக்கங்களை தருதல்.

(உ) அரசியல்வாதிகளின் பங்கு

- இளைஞர்களை விளம்பரத்திற்காக அல்ல, சிந்தனைக்காக ஈர்க்க வேண்டும்.

- கூட்டங்களில் மக்களின் உயிர் பாதுகாப்பை முதன்மையாகக் கொள்ள வேண்டும்.

- கரூர் சம்பவம் போன்றவை இனி நிகழாதபடி, கூட்டநிர்வாகத்தில் தகுந்த அறிவுறுத்தல்கள் வழங்க வேண்டும்.

வாசிப்பு மூலம் அரசியல் விழிப்புணர்வு பெறும் வழி

வாசிப்பது அரசியலை புரிந்து கொள்வதற்கான முதல் படி.
ஒரு புத்தகத்தை வாசிக்கும் போது நம்மைச் சுற்றிய சமூகத்தின் பல அடுக்குகளைப் புரிந்து கொள்கிறோம். அரசியல் வரலாற்று நூல்கள், தலைவர்களின் சுயசரிதைகள், சமூக இயக்க வரலாறுகள் ஆகியவற்றை வாசிப்பது சிந்தனையை ஆழப்படுத்தும்.

வாசிப்பின் மூலம் இளைஞர்கள், வாதம், எதிர் வாதங்களை முன்வைப்பதற்கான திறன் பெறுவர், சமூக பிரச்சனைகளுக்கு தீர்வு காண முயல்வர்,உண்மையையும் பொய்யையும் பிரித்துப்பார்க்கக் கற்றுக்கொள்வர், ஒரு நல்ல குடிமகனாக உருவாகுவர்.

கரூர் சம்பவத்தின் பாடம்

கரூரில், 2025 செப்டம்பர் 27 அன்று நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் ஏற்பட்ட பேரிழப்பு, அதைச் சுற்றிய விவகாரங்கள், செய்திகள் — இவை அனைத்தும் இளம் தலைமுறையினருக்கான முக்கிய பாடங்களை தருகின்றன. கூட்ட நெரிசல் காரணமாக 41 பேர் உயிரிழப்பு—இது சாதாரண தவறல்ல;

கரூரில் நடந்த கூட்ட நெரிசல் மரணம் வெறும் அரசியல் தவறல்ல — அது அறிவியல் சிந்தனை, வாசிப்பு, விழிப்புணர்வு இல்லாமையின் விளைவு.

ஒரு கட்சியின் தலைவர் இப்போது வருவார், அப்போது வருவார் என்ற வதந்தியில் ஆயிரக்கணக்கானோர் காத்திருந்து ,அவர்களில் பெரும்பாலோர் "என்ன பேசப்போகிறார்?, என்ன அரசியல் சார் கோட்பாடுகளை விளக்கப்போகிறார்?" என்ற ஆர்வமே இன்றி, வெறும் தனக்கு பிடித்த திரைப்பட நடிகர் வந்திருக்கிறார், அவரைப் பார்க்க வேண்டும் என்ற அறிவிழந்த உணர்ச்சியின் உந்துதலில் வந்திருந்தனர்.

அந்த நிகழ்வில் உயிரிழந்தவர்களின் நினைவாக, நாம் ஒரு சமூக மாற்றத்தை தொடங்க வேண்டும்.

இளம்தலைமுறை நமது நாட்டின் நாளைய நம்பிக்கை.அவர்கள் வாசிப்பதை மறந்தால், சிந்தனை மறையும்.அவர்கள் நிகழ்கால அரசியலைப் புரிந்துகொள்ளாவிட்டால், எதிர்காலம் சிதையும்.

அதனால் வாசிப்பு பழக்கத்தையும் அரசியல் புரிதலையும் இணைத்து வளர்த்தல் நமது சமூக கடமை.நாம் இளைஞர்களுக்கு புத்தகங்களையும் பகுத்தறிவையும் கொடுக்க வேண்டும் — வெறும் வாக்குறுதிகளை அல்ல.

வாசிப்பது ஒரு பொழுதுபோக்கு அல்ல; அது ஒரு போராட்டம் — அறியாமைக்கு எதிரான போராட்டம். அந்தப் போராட்டத்தில் இளைஞர்கள் முன்வரிசையில் நிற்க வேண்டும்.

- சுந்தரவாணன் பாண்டியன்

Free Speech, Vulgarity and the Politics of Panic: Lessons from Karur Tragedy - Dhileepan Pakutharivu

The Karur crowd crush was a human tragedy — forty-one dead, scores injured — and a grim test of how a democracy confronts tragedy in the age of social media. Eyewitness accounts and video evidence make one thing clear: this was not sabotage, but chaos — a surge of humans compressed by excitement, expectation and the absence of discipline. It was the kind of frenzy that has, sadly, become too familiar in India.

Al Jazeera's report after the tragedy noted that stampedes and crowd crushes are "relatively common in India when large crowds assemble." In January, thirty pilgrims died at the Kumbh Mela in Haridwar. The pattern is consistent: our public spaces too often collapse under our own disorder. What begins as devotion or celebration ends in death and disbelief. It is not misfortune alone; it is an ingrained indiscipline, a carefree public culture that treats "safety" and "restraint" as optional virtues.

In Karur's aftermath, the State government did not lapse into inaction. A Commission of Inquiry headed by a retired High Court judge was promptly constituted. Senior officials briefed the press, released verified footage and outlined the precautionary measures that had been in place. Yet, within hours, social media produced its own colosseum: conspiracies of sabotage, doctored clips, political blame games. Misinformation spread faster than official truth. Grief was hijacked by rumour.

This vicious cycle is all too familiar — tragedy, speculation, accusation, arrest. We saw it after the Dehgam violence in Gujarat; we see it after every major mishap. In each case, social media amplifies chaos before institutions can even ascertain facts. The police register FIRs, platforms purge content and free expression becomes collateral damage. The Supreme Court has rightly warned that while freedom of speech is fundamental, it must coexist with dignity and public order. The challenge is to protect both liberty and responsibility — not one at the cost of the other.

The Jurisprudence of Restraint

Article 19(1)(a) guarantees freedom of expression; Article 19(2) allows reasonable restrictions in the interests of public order, morality and decency. Yet the Supreme Court, from *S. Rangarajan* to *Shreya Singhal*, has drawn an essential boundary: only speech that is proximate and imminent in causing violence can be restrained. The Court has also expressed concern over the rising vulgarity and obscenity in digital content — a space where art, humour, and abuse intermingle without restraint. Regulation is inevitable, but it must be proportionate and procedurally fair. The State must target incitement, not insult.

That principle, however, must meet messy reality. The law should pursue five simple rules.

- First, target incitement, not irritation. Penal law should intervene only when speech directly incites violence or public disorder.
- Second, preserve due process — arrest must never be the first response; investigation and judicial oversight must be the rule.
- Third, enforce platform accountability, not paternal censorship — clear takedown protocols, age-rating systems and independent appellate mechanisms are preferable to executive bans.
- Fourth, ensure rapid official communication to pre-empt rumours. Silence breeds conspiracy; verified updates restore public confidence.
- Finally, invest in media literacy. A society that cannot distinguish fact from falsehood will forever oscillate between hysteria and repression.

Of Youth, Culture and the Cinema Syndrome

Yet the lesson from Karur is not legal alone; it is civilisational. It speaks to something deeper — a generational drift in civic conduct and collective temperament. Tamil Nadu's young population is vibrant, energetic and expressive. Yet, it is also one that often mistakes noise for participation. Social media activism substitutes for civic engagement; hero worship for political thought. The line between reel and real has blurred and politics has too often fed this confusion rather than correcting it.

Here, two troubling questions arise. Why does public indiscipline recur with such weary predictability? And why has a generation reared in the age of technology and education lost its instinct for order, restraint and civic responsibility?

The answer lies partly in what our culture chooses to celebrates. In Tamil Nadu, as in much of India, the glamour of cinema has gradually eclipsed the spirit of informed and engaged citizenship among the youth. Our youth are shaped by the vistas of the screen — adulation for stars, imitation of style and a fascination with personality over principle. Politics, too, often mirrors cinema: dramatic, emotive, performative. When politics becomes theatre, citizens become spectators. The line between leadership and hero-worship blurs and discipline — that old republican virtue — vanishes.

This is not a denunciation of cinema, but a reminder of the balance our forebears so carefully sought to preserve. Perarignar Anna — himself a playwright before he became a politician — spoke of "Duty, Dignity and Discipline" as the three cardinal virtues of public life. Duty reminds the citizen of collective responsibility. Dignity demands that we uphold our rights while respecting those of others. Discipline preserves the liberty without which democracy descends into chaos. Kalaignar cultivated these virtues, shaping his cadres into agents of social transformation — a testament to the enduring efficacy of the Dravidian Model.

Yet, Gen Z, swayed by the new morals and distractions of media and the lure of easy fame, often drifts from the path of discipline. Still, these principles are far from quaint relics of a bygone era; they remain essential survival values for a modern republic. In Karur, all three were found wanting — among the organisers, the crowd and even the digital users who turned tragedy into a spectacle.

Education sans Rationality

Education provides skills; rationality provides judgement. One teaches how to read, the other teaches how to think. Without critical thinking — the capacity to question, to reason, to restrain impulse — even education can become a hollow credential.

Today's Gen Z lives in an age of perpetual distraction — instant opinions, fleeting solidarities and shallow outrage. Their world is curated by algorithms, not by books or discourse. Reading habits have declined; reflection has become rare. The tragedy of Karur was not merely of a stampede in space, but a stampede of the mind — a generation rushing without pause, without comprehension, without consequence.

But, the solution lies not in moral panic but in patient reconstruction. We must recalibrate civic education in schools, promote critical media literacy and revive spaces for deliberation — classrooms, libraries, local forums — where dissent and discipline can coexist. Simply put, our task is to make education an instrument of inquiry, not of indoctrination.

Preventing Another Karur

How, then, do we prevent another Karur? Technology and administration offer some answers: crowd-management drills, real-time surveillance and emergency communication protocols. But these are mechanical solutions to moral and social failures. The deeper reform must be cultural. We must rebuild the social ethic that values order, patience and respect for law. Crowds turn violent not out of malice, but from a void of leadership and direction. Political leaders, therefore, must exercise restraint — not merely to command applause, but to steer and guide the conduct of their cadres.

Every tragedy tests the maturity of a democracy. Thus, the first duty of the State is to save lives; the second, to save liberties. Between the mob and the censor lies the citizen — informed, rational, disciplined. Our public policy must strengthen that citizen.

Conclusion

As Soli Sorabjee once reminded us, *"one man's lyricism is obscene to another."* The same holds for speech itself: what is dissent to one ear may be disorder to another. Free speech is a cornerstone of democracy, but so too is the discipline that sustains it. When grief becomes propaganda and outrage substitutes for reason, we dishonour both the departed and the democratic ideal. The task of a liberal State is not to silence one in fear of the other, but to safeguard both within the bounds of reason.

If we remember Anna's injunction — Duty, Dignity, Discipline — and apply it to both governance and citizenship, we may yet transform grief into guidance. The best memorial to those who died is not another inquiry, but a society that values responsibility over recklessness, reflection over reaction and freedom grounded in reason.

** Dhileepan Pakutharivu is an advocate practicing before the Madras High Court*

The views expressed here are solely personal and should not be attributed in any manner to any professional institutions that the author is affiliated.

சினிமா மோக இளைஞர்களை வழிநடத்த தவறி விட்டதா தமிழ்நாடு?

- அ.ப.சிவா

இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாடு மற்றும் எப்பொழுதும் தனித்தன்மையுடன் தனித்து இயங்குகிறது இதற்கு அடிப்படை காரணம் திராவிட இயக்கம், அரசியல் தளத்திலும் சரி பண்பாட்டுத்தளத்திலும் சரி இந்திய ஒன்றியத்தின் ஏனைய மாநிலங்களில் இருந்து தமிழ்நாடு எப்பொழுதும் தனியாகவே தெரியும் மிகவும் முற்போக்கான சிந்தனை உடைய மக்களைக் கொண்ட ஒரு நிலப்பரப்பு நமது தமிழ்நாடு . நமது தமிழ் சமூகத்தின் சிந்தனை மரபு எப்போதும் ஆதிக்க எதிர்ப்பாகவே இருந்து வருகிறது ஆனால் இங்கு பொதுவாக நிலவுகிற ஒரு கருத்து தமிழ்நாட்டில் மட்டும்தான் தலைவர்களை திரையில் தேடுகிறார்கள் என்பதே இது குறித்து விரிவாக நாம் அலச வேண்டியுள்ளது.

நூற்றாண்டு கால வரலாறு கொண்டது திராவிடர் இயக்கம் அதே போல் நூற்றாண்டு கால வரலாறு ஆர்.எஸ்.எஸ் க்கும் உண்டு இந்திய ஒன்றியத்தில் தமிழ்நாடு தவிர்த்த மற்ற பகுதிகளில் கோலூன்றியது போல் ஆர்.எஸ்.எஸ் மற்றும் அதனுடைய இந்துத்துவா சித்தாந்தம் தமிழ்நாட்டில் எடுபடுவதில்லை, அதற்கு மிக முக்கிய காரணமாக விளங்குவது தமிழ்நாட்டின் தலைமகன் பெரியார் அவர்களுடைய பெரும் உழைப்பு தென் இநதிய நல உரிமைச் சங்கம், பார்ப்பனர் அல்லாதோர் இயக்கம், நீதிக்கட்சி என பல்வேறு வடிவங்கள் வடிவங்களில் பரிணமித்து திராவிடர் கழகமாக சித்தாந்த அமைப்பாகவும் அச் சித்தாந்தத்தின் அடிப்படையில் வெகு மக்களின் நம்பிக்கைக்கு எதிரான சிந்தனைப் போக்குடன் அதே வேளையில் வெகு மக்களின் நலனுக்காக உழைக்கிற மாபெரும் அரசியல் இயக்கமாக திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழ்நாட்டில் உள்ளது, எனவே ஆர்.எஸ்.எஸ் இன் இந்துத்துவம் இங்கே எடுபடுவதில்லை.

இப்படியாக சித்தாந்த வலிமையுடைய ஒரு மாநில கட்சி இந்தியாவில் வேறு எங்கும் இல்லை எனவே இந்தியாவின் மற்ற பகுதிகள் போல் ராமரை காட்டி இங்கே ஓட்டு வாங்க விட முடியாது எனவே தான் பார்ப்பனியம் தமிழ்நாட்டில் வேறொரு ஆயுதத்தை கையில் எடுத்தது, அந்த ஆயுதம் தான் சினிமா...

திராவிட இயக்க கொள்கைகளை மக்களிடையே கொண்டு சேர்க்க பெரும்பங்காற்றியவை நாடகமும் திரைப்படமும் அதனால் தான் என்னவோ இயல்பாகவே திராவிட இயக்க தலைவர்கள், அறிஞர் அண்ணா தொடங்கி கலைஞர் தொடர்ந்து எம்ஜிஆர் ஜெயலலிதா வரை திரைத்துறையில் இருந்து வந்தவர்களே..

திராவிட முன்னேற்றக் கழகத்தை முதன் முதலில் இந்திய ஏகாதிபத்தியம் தனது சதியால் பிரித்தது என்பது ஒரு திரை கலைஞர் உதவியோடே.. திமுகவில் மிக முக்கிய தலைவராக மக்கள் அறிந்த முகமாக விளங்கிய எம்.ஜி.ஆர் அவர்களை இப்பொழுது இருக்கிற அழுத்தங்கள் போலவே சில அழுத்தங்களை கொடுத்து அப்போதைய இந்திரா காங்கிரஸ் தோற்றுவித்த இயக்கம் தான் ஆகிய அதிமுக சற்று ஏறக்குறைய 50 ஆண்டுகளுக்கு முன் அவர்கள் தொடங்கி வைத்ததை இன்றளவும் இந்திய ஏகாதிபத்தியத்தில் ஆட்சி கட்டிலில் அமர்ந்திருப்பவர்கள் செய்து வருகிறார்கள்.. கடந்த 50 ஆண்டுகால தமிழ்நாடு அரசியலில் எம்ஜிஆர் மறைவுக்கு பின் ஜெயலலிதா தலைவர் கலைஞர் இவர்களுடைய ஆட்சிகளின் போது கால் நூற்றாண்டுக்கு மேல் அரசியலில் ஈடுபட போவதாக பூச்சாண்டி காட்டிக் கொண்டே இருந்தவர் திரைப்பட நடிகர் ரஜினிகாந்த் அவர்கள் இவரின் இந்த நிலைப்பாடுக்கும் அடிப்படை காரணம் பார்ப்பனியமே.

இந்துத்துவத்தின் இந்த நீண்ட நெடிய முயற்சி எப்பொழுதும் திமுகவுக்கு எதிராகவே களம் இறக்க பயன்படும் இம்முயற்சியே பெரும்பாலும் தமிழ்நாட்டில் மிகவும் பிரபலமாக இருக்கிற திரை கலைஞர்களை அரசியலுக்கு இழுத்து வருவதில் பெரும்பங்காற்றும், அது உருவாக்குகிற புறத்தோற்றம் தான் தமிழ்நாட்டு மக்கள் தங்கள் தலைவர்களை திரையில் தேடுகிறார்கள் என்கிற பொதுக்கருத்து... இப்படியான , வலிமையுடைய ஒரு மாநில அரசியல் கட்சி வட மாநிலங்களில் இருந்திருக்குமேயானால் அமிதாப்பச்சனும் அரசியலுக்கு வந்திருப்பார்... தனிக்கட்சி தொடங்கி இருப்பார் இல்லையேல் ரஜினிகாந்த் போல் அரசியல் குதிப்பதாக சொல்லியே தனது காலத்தை கழித்து இருப்பார் என்பதை நிதர்சனம்.

சினிமா எனும் மிகப்பெரிய கலை இன்று பெரு வணிகமாக வளர்ந்து நிற்கிறது, இவ் வணிகம் தனது முதன்மை மூலதனமாக *HERO WORSHIP* என்பதே அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது எனவே தான் நான்கைந்து வெற்றி படங்கள் கொடுத்த நடிகர்கள் அனைவருக்கும் மிகப்பெரியதொரு பிம்பம் கட்டமைக்கப்பட்டு அதே தனது வணிக நோக்கத்திற்காக பல்வேறு தரப்பட்டோர் பயன்படுத்திக் கொள்கிறார்கள்... அப்படியாக உருவாக்கப்பட்ட நாயக பிம்பத்தை தனது அரசியல் லாபத்திற்காக மிக முக்கியமாக திமுகவை எதிர்ப்பதற்காகவும் திமுகவே ஆட்சியிலிருந்து அகற்றுவதற்காகவும் பார்ப்பனியம் மிக லாவகமாக அத்திரை கலைஞர்களை பயன்படுத்திக் கொள்ளும்.

ரஜினிகாந்த் அவர்கள் ஓய்வு பெற்று விட்ட பின்பு அவ்விடத்தை பூர்த்தி செய்ய இந்திய ஏகாதிபத்தியம் தேர்ந்தெடுத்த திரைக்கலைஞர் தான் திரு.விஜய் அவர்கள்.. ஒருவேளை ரஜினிகாந்த் அவர்கள் தனிக்கட்சி தொடங்கி தேர்தல் அரசியலில் ஈடுபட்டிருந்தால் கூட இதுபோன்ற விரும்பத்தகாத நிகழ்வுகள் தான் அன்றும் நடந்திருக்கும். அவரது காலகட்டம் என்பது சமூக ஊடகங்களின் ஆதிக்கம் இல்லாத காலகட்டம் நொடிக்கு நொடி வந்து விழுகிற பிரேக்கிங் நியூஸ் இல்லாத காலகட்டம் ஆகவே அவர் வெகுலாவகமாக இதிலிருந்து ரஜினியால் தப்பிக்க முடிந்தது.

தமிழ் திரை உலகில் ரஜினிகாந்த் அவர்களுக்கு அடுத்தபடியாக பெரும்பாலான இளைஞர்களை ரசிகர்களாக கொண்டு இயங்குகிற திரு. விஜய் அவர்கள் இந்த வேசத்துக்கு பொருத்தமாக இருப்பார் என திட்டமிட்டு பார்ப்பனியம் களம் இறக்கி உள்ளது... இது எம்ஜிஆர் காலமில்லை இப்பொழுதெல்லாம் ஒருவர் பொது வாழ்க்கையில் பொதுவெளியில் செயல்படும்பொழுது அவர் எந்த நோக்கத்திற்காக வருகிறார் அவருடைய இலக்கு என்ன என மிகத் தெளிவாக அக்குவேறு ஆணிவேராக பிரித்து மேய்ந்து விடுகிறது சமூக ஊடகங்கள் ஆகவே பெரும்பாலான இளைஞர்கள் இவ்விடயத்தில் தெளிவு பெற்றுள்ளார்கள்... ஆனாலும் அவரது ரசிகர்கள் அவருடைய நாயக பிம்பத்தில் கட்டுண்டு கிடக்கிற அடிமைகளாகவே இன்னும் இருக்கிறார்கள்.. கூடுதலாக இந்த தலைமுறை இளைஞர்களை பார்க்கையில் ஒருவித அச்சமும் நிலவுகிறது திரையில் இருப்பதை அப்படியே நம்பிக் கொண்டு அது தரையிலும் நடக்கும் என சுற்றித் திரிபவர்களை கடந்த தலைமுறை பார்க்கவில்லை, சமூக ஊடகங்கள் ஒவ்வொருவரையும் பொதுவெளியில் தங்களது நிலைப்பாட்டை எடுத்துச் சொல்ல மிகப்பெரிய ஒரு இடத்தை தருகிறது அதை பயன்படுத்திக் கொண்டு அவர்கள் கூறும் அவர்கள் பேசும் அரசியல் எல்லாம் காண சகிக்காதவையை.

இந்த விடயத்தில் இது போன்ற இளைஞர்களை தமிழ்நாடு மிகச் சரியாக கையாள தவற விட்டதா என கேட்டால் ஓரளவு கையாண்டு உள்ளது என்பதை சரியானதாக இருக்கும் இன்னும் கூடுதல் சவால்களை சந்திக்க பெரியார் அண்ணா கலைஞர் இவர்களது படையணிகள் தயாராக காத்திருக்கிறது ..1980 களின் தொடக்க முதல் இன்றுவரை ஆன கடந்த 50 ஆண்டுகளில் திராவிட இயக்கத் தலைவர்கள் மற்றும் தேர்தல் அரசியலில் இல்லாத பெரியாரிய இயக்க வாதிகள் செய்த தவறு அல்லது கவனமின்மை எது என்று சொன்னால் கடந்த தலைமுறை மக்களோடு ஜனரஞ்சகமாக இயங்கவில்லை என்பதே ஆகும் ..

1980 1990 களில் பிறந்த 30 முதல் 50 வயது வரை உள்ள இளைஞர்களில் தெளிவான திராவிட இயக்க சித்தாந்தத்தை அறிந்து கொள்கை பிடிப்புள்ள இளைஞர்கள் பலரை நாம் சமூக ஊடகங்களில் காண்கிறோம் பெரியார் அண்ணா கலைஞர் வழி மாபெரும் சிந்தனைகளை உள்வாங்கி சமரசம் அற்று அர்ப்பணிப்புடன் இயங்குகிற நிறைய பேர் வெள்ளிக்கிழமைகளில் முதல் நாள் முதல் காட்சி பார்த்துவிட்டு அது குறித்து தங்களது விமர்சனங்களை பகிர்வதாகவே உள்ளனர் ...ஆக இன்று இளைஞர்களின் நாடித்துடிப்பை அறிய LIVE ல் இருப்பது அவசியம் இதுபோன்றதொரு ஜனரஞ்சக நடவடிக்கையை கடந்த தலைமுறை எடுக்க தவறிவிட்டதே இன்றைய இளைஞர்களின் சினிமா மோகம் அதாவது திரைப்படத்தில் நடிக்கிற தங்களது ஹீரோவை தலைவராக நினைக்கிற ஒரு எண்ணம் அதற்கான அடிப்படை காரணம் என்று சொல்ல வேண்டும்

ஆகவே அதிகாரத்துக்கு எதிரான சித்தாந்தத்தை கொண்டு இயங்குகிற நாம் ஆற்றில் எதிர்நீச்சல் போடுபவர்களே நமது இயக்கமும் அது போலவே எதிர்நீச்சல் போடும் நாம் வெகு மக்களின் மன ஓட்டங்களை பிரதிபலித்துக் கொண்டு அவர்களுடன் சேர்ந்து இயந்து இயங்கி நம்முடைய கருத்துக்களை முன் வைக்க வேண்டும் நம்முடைய கடந்த தலைமுறை செய்ய தவறியதை நாமும் செய்யக்கூடாது என்பதை கரூர் மரணங்கள் நமக்கு கற்றுத் தருகிற பாடங்கள் இந்துத்துவா என்கிற ஆக்டோபஸ் தனது கரங்களை எவ்வளவு தூரம் இருக்கிறதோ அதே வேகத்தில் பெரியார் தடி மகொண்டு அதை அடித்து வீழ்த்துகிற பெரும்படை நம்மிடம் உண்டு நம்பிக்கை கொள்வோம் தமிழ்நாட்டில் தலைகுனிய விடமாட்டோம்..

- அ.ப.சிவா (98430 68294)

வாசிப்பு பழக்கம் இல்லாத, அரசியல் புரிதல் இல்லாத இளம் தலைமுறையை வழிநடத்துவது எப்படி? – அ.இன்பன்

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் கல்வி, கலாசாரம், சிந்தனை — இவற்றை மக்களிடம் கொண்டு சென்ற பெருமை திராவிட இயக்கத்திற்கே உரியது.

பெரியாரின் சிந்தனைகளில் ஆழ்ந்து உருவான திமுக இயக்கம் அறிவு, அக்கறை, சமூக மாற்றம் ஆகியவற்றின் அடித்தளமாக அமைந்தது. அந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியவர் பேரறிஞர் அண்ணா.

அறிவால் வழிநடத்திய தலைமுறை

பெரியார் உருவாக்கிய சிந்தனையின் அடித்தளத்தில், பேரறிஞர் அண்ணா திமுக இயக்கத்தை தொடங்கியபோது அவருக்கு வயது நாற்பது. அவருடன் இணைந்தவர்கள் கல்வியறிவும் சமூகப் பொறுப்பும் மிக்கவர்களாக இருந்தனர்.

"வன்முறையைத் தவிர்த்து, வறுமையை ஒழிப்போம்" — அண்ணாவின் தத்துவம் இன்றும் பொருந்தும்.

அண்ணா தனது இளைய சகாக்களுக்கு கடிதங்களின் வழியாக வாசித்த நூல்களையும், வாழ்க்கை அனுபவங்களையும் பகிர்ந்து, அறிவை மக்களிடம் பரப்பினார். அவரைத் தொடர்ந்து தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களும் கடிதங்களின் வழியே பண்பு, ஒழுக்கம், பொறுப்பு ஆகியவற்றை ஊட்டினர். இதன் விளைவாக — அறிவும் ஒழுக்கமும் கொண்ட சமூகச் சிந்தனை மிக்க தலைமுறை உருவானது.

இன்றைய தலைமுறையின் சவால்
இன்றைய இளைஞர்கள், குறிப்பாக நடிகர் விஜயின் ரசிகர் அடிப்படையிலான இளைஞர்கள், அந்தச் சமூகப் பண்பாட்டின் தொடர்ச்சியிலிருந்து விலகி வருகின்றனர். விஜய்க்கு வயது 52 ஆனாலும், அவரை பின்தொடரும் பலர் இன்னும் அரசியல் புரிதல் அல்லது சமூகப் பொறுப்பு உணர்வில்லாதவர்களாகவே உள்ளனர்.
மரங்களில், மின்கம்பங்களில், டிரான்ஸ்பார்மர்களில் ஏறி சாகசம் செய்யும் இளைஞர்கள் — அறிவின் குறை, வாசிப்பின் பற்று இல்லாமை, சிந்தனை ஆழம் இழப்பு ஆகியவற்றின் அடையாளங்களாக மாறியுள்ளனர்.

"வாசிப்பு பழக்கமின்றி வளர்ந்த தலைமுறை, வழிதவறிய சிந்தனையுடன் நடக்கின்றது."
விஜயும் இதை கண்டிக்கவோ, அவர்களை விழிப்புணர்வுடன் வழிநடத்தவோ முயற்சி செய்யாதது குறிப்பிடத்தக்கது.

வாசிப்பும் சமூக உணர்வும் குறைந்த நிலை

இன்றைய தலைமுறை கல்வியறிவு பெற்றிருந்தாலும், வாசிப்பு பழக்கம் மற்றும் சமூகப் பொறுப்பு உணர்வு குறைந்துள்ளது. "பசி என்றால் என்ன?", "போராட்டம் என்றால் என்ன?" என்பதையும் உணராத சூழலில் அவர்கள் வளர்ந்துள்ளனர்.

திராவிட இயக்கங்கள் உருவாக்கிய சமூக விழிப்புணர்வு மங்கிவிட்டது. தனியார் பள்ளிகள் கூட மதிப்பெண்களை மட்டுமே முக்கியப்படுத்தும் நிலையில், மாணவர்களுக்கு அரசியல் புரிதல் அல்லது சமூக நெறி வளர வழியில்லை.

மாற்றத்திற்கான வழி
இந்த நிலைமையை மாற்ற — அரசு, பெற்றோர், கல்வி நிறுவனங்கள் ஒருமித்த முயற்சி எடுக்க வேண்டியது அவசியம்.
செய்ய வேண்டியவை:

- பள்ளிகளில் வாசிப்பு கலாச்சாரத்தை ஊக்குவிக்க.
- இளைஞர்களை சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடுத்த.
- அரசியல் விழிப்புணர்வு மற்றும் சமூக நெறி பற்றிய விவாதங்களை ஊட்ட.

"வாசிப்பும் பொறுப்பும் தான் தலைமுறையை மாற்றும்."

முடிவுரை

தமிழ் சமூகத்துக்கு முன்னோடி இயக்கங்கள் அளித்த விழிப்புணர்வை மீண்டும் எழுப்புவது நம்முடைய கடமை. தவறுகளில் இருந்து கற்றுக்கொண்டு, அறிவும் பொறுப்பும் கொண்ட புதிய தலைமுறையை உருவாக்குவோம்.

"ஒரு தலைமுறை வாசிப்பை இழந்தால் — அடுத்த தலைமுறை திசையையும் இழக்கும்."

- அ.இன்பன்

கரூர் பெருந்துயரம் - ரவி செல்வராஜ்

விஜய் என்னும் ஒரு சினிமா நடிகர், சுமார் ரூ.200 கோடி சம்பளம் வாங்குமளவுக்கு சினிமா மார்க்கெட் உள்ள அந்நடிகர் ஒரு கட்சி துவங்கியுள்ளதாகவும், அந்த கட்சிக்கு தலைவராக அந்த நடிகர் இருப்பதாகவும், விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் வேறு சில நபர்களும் பொதுசெயலாளர் உள்ளிட்ட நிர்வாகிகளாக இருப்பதாகவும், அந்த கட்சி இரண்டாண்டுகளாக இருப்பதாகவும், ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வந்தன.

கடந்த இரண்டாண்டுகளில் மதுரை, திருச்சி போன்ற ஊர்களில் அக்கட்சி மாநாடுகள் நடத்தியதாகவும், அம்மாநாடுகளுக்கு பல லட்சக்கணக்கான தொண்டர்கள் வந்ததாகவும் கூறப்பட்டது. அக்கட்சித் தலைவரான அந்நடிகர் அவர் கூட்டிய கூட்டங்களில் அக்கட்சிக்கான கொள்கைகள் எதையும் கூறாமல் பெரியார், அண்ணா மற்றும் இன்னும் சில தலைவர்கள் பெயர்களைக் கூறி அவர்கள் தான் அக்கட்சிக்கு கொள்கைத் தலைவர்கள் என்று பேசி வந்ததோடு அவர் கூறிய தலைவர்களின் கொள்கைகளை பின்பற்றி அவர்கள் கூறிய பல்வேறு கொள்கைகளை சட்டமாக்கி மக்கள் நலன் ஒன்றே குறிக்கோள் என பணியாற்றி வரும் தி.மு.க.தான் தங்கள் எதிரி என்றும் அதேபோல ஒன்றியத்தை ஆண்டு வரும் பா.ஜ.க.தான் தங்கள் கொள்கை எதிரி என்றும் யாரோ எழுதிக் கொடுத்ததை ஏற்ற இறக்கத்தோடு உளறி நடித்து வந்தார்.

அந்நடிகரின் கட்சி பற்றியும், அக்கட்சி நடத்திய மாநாடுகள் கூட்டங்கள் பற்றியும் ஊடகங்கள் எவ்வளவோ கதறியும், அது தமிழ்நாட்டு அரசியலில் பெரிய தாக்கம் எதையும் ஏற்படுத்தவில்லை. தமிழ்நாட்டு பெரும்பான்மை மக்களிடமும் அது பெரிய வரவேற்பைப் பெறவில்லை. இதனை அறிந்த அந்த நடிகர் 2026-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலில் அவரது கட்சி போட்டியிட உள்ளதாகவும் அதற்காக தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு சனிக்கிழமையும் (பிற நாட்களில் அவர் நடிக்கும் படத்துக்கான சூட்டிங்குக்கு போய்விடுவார் போல) தான் குறிப்பிட்ட ஊர்களுக்கு வந்து பிரச்சாரம் செய்ய உள்ளதாகவும் அறிவித்து, அதன்படி சில ஊர்களுக்கு சென்று பிரச்சாரம் செய்தார்.

அவர் பிரச்சாரம் செய்யும் இடங்களிலெல்லாம் அவரது ரசிகர்கள் (தொண்டர்கள் அல்ல) மரங்களில் ஏறுவதும், டிரான்ஸ்பார்மர்களில் ஏறுவதும், உயரமான கட்டிடங்கள் சுவர்கள் ஆகியவற்றில் ஆபத்தான முறையில் ஏறி விளையாடுவதுமாக இருந்தார்கள். காவல்துறைக்கு எந்த ஊரிலும் ஒத்துழைப்பு கொடுக்காமல் ஓடுவதும், கூட்டம் முடிந்தவுடன் வாடகைக்கு எடுத்து வந்த நாற்காலிகள் மற்றும் தடுப்புகளை உடைப்பதும் என அராஜகம் செய்து வந்தார்கள்.

இதனை எல்லாம் அந்த கட்சியின் தலைவர் என்று கூறிக்கொண்ட அந்நடிகர் கண்டிக்கவும் இல்லை இதெல்லாம் தவறு என்று அறிவுறுத்தவும் இல்லை. மாறாக இதையெல்லாம் அந்நடிகர் ரசித்து வந்தார். ஒவ்வொரு கூட்டமும் முடிந்தவுடன் y பிரிவு பாதுகாப்புடன் நடிகர் சென்னைக்கு தனி விமானத்தில் சென்று விடுவார். கூட்டம் முடிந்த இடம் போர்க்களம் போல கிடக்கும்.

இப்படியே தான் புதுக்கட்சித் தலைவரான நடிகர் சென்ற ஊர்களிலெல்லாம் ரசிகர்களின் அராஜகம் தொடர்ந்ததோடு சில விபத்துகளும் உயிரிழப்புகளும் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டாலும், நடிகரின் தேர்தல் பிரச்சார நாடகம் தொடர்ந்தது.

இந்நிலையில் டிசம்பர் மாதம் செல்லவுள்ளதாக திட்டமிடப்பட்டிருந்த கரூர் நகருக்கு செப்டம்பர் 27-ஆம் தேதி செல்வதாக நடிகர் திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு அதற்கான போலீஸ் அனுமதியும் பெறப்பட்டது. அதன்படி நாமக்கல், கரூர் ஆகிய நகரங்களில் காலை 8.45 முதல் பிரச்சாரம் செய்ய

உள்ளதாகவும் மதியம் 12 மணிக்கு கரூரில் பிரச்சாரம் செய்வதாகவும் அக்கட்சி இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

2025, செப்டம்பர் மாதம் 27-ஆம் தேதி அந்நடிகர் காலை 8.45 மணிக்கு நாமக்கல்லில் கூட்டம் போட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் வீட்டில் இருந்தே பொறுமையாக காலை 8.50-க்குத்தான் கிளம்பினார். இதனால் கரூர் கூட்டத்திற்கு மதியம் 12.45 மணிக்கு வந்துவிட்டு, மதியம் 1.30-க்குள் கிளம்ப வேண்டியர், 6 மணி நேரம் தாமதமாக 7 மணியளவில் தான் வந்தார். அவர் தாமதமாக வந்ததால், மக்கள் கூட்டம் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்து, நிறையபேர் கூடி, வெளியேற நினைத்தவர்களை அக்கட்சியினர் வெளியேற அனுமதிக்காமல் தடுத்து வைத்ததுமே கூட்ட நெரிசலுக்குக் காரணமாக மாறியது.

அந்த கூட்ட நெரிசலில் ஏற்கனவே ஆறுமணி நேரத்துக்கும் மேலாக தண்ணீர் அருந்தாமல், உணவு அருந்தாமல், சிறுநீர் கழிக்க முடியாமல் வெளியேறவும் அனுமதிக்கப்படாமல், மூச்சுவிட முடியாமல் மயங்கி விழுந்தும், கூட்ட நெரிசலில் சிக்கி மிதிபட்டும் 39 பேர் உயரிழந்தார்கள். இந்த கூட்டத்திற்கு நடிகர் தாமதமாக வந்ததும், கூட்ட நெரிசலில் சிக்காமல் தப்பிக்க வெளியேற நினைத்தவர்களை அனுமதிக்காமல் தடுத்த அக்கட்சியினருமே உயிரிழப்புகளுக்கு முதல் காரணமாகும். (பிரச்சாரத்திற்கு அனுமதி வாங்கிய நேரம் மதியம் 3 முதல் இரவு 10-வரை என்று உயிரிழப்புக்குப் பின் தெரிவிக்கப்பட்டது)

பேருந்தின் முன்சீட்டில் அமர்ந்திருந்த அந்நடிகர், திருக்காம்புலியூர் சந்திப்பை தாண்டியதும், பேருந்தினுள் இருந்த லைட்டை ஆப் செய்துவிட்டு உள்ளே சென்றார். இதனால், சாலைநெடுக அவரைப் பார்க்க காத்திருந்தவர்கள், கூட்டம் நடக்கும் இடத்திற்கு சென்றால் பார்க்க முடியும் என நினைத்து, கூட்டம் நடக்கும் இடத்தை நோக்கி வந்துள்ளனர்.

அந்நடிகர் தன்னுடைய வாகனத்தின் கண்ணாடியை முன்பே இறக்கி இருந்தால், அவரை பார்த்த ரசிகர்கள் பலர் வெளியேறி இருப்பார்கள். ஆனால் நடிகர் கண்ணாடியை மூடிக்கொண்டு வந்தார். இதனால் ரசிகர்கள் அவர் முகத்தை பார்க்க வேண்டும் என்று வாகனம் பின் ஓடிவந்தார்கள். இதனால் கூட்டத்தின் அளவு அதிகரித்தது. வாகனம் அருகே கூட்டம் நிரம்பியதால், அதுவே தள்ளுமுள்ளுவிற்கு காரணமாக மாறி இத்தனை உயிரிழப்புகளுக்குக் காரணமானது.

அவ்வாறு தள்ளுமுள்ளு நடந்து நெரிசலில் சிக்கி மக்கள் மாண்டு கொண்டிருக்கும் பொழுதே நடிகரும், அந்த கட்சியின் நிர்வாகிகளும் பேச்சை முடித்துக் கொண்டு அவசரமாக திருச்சி விமானநிலையம் சென்று விட்டனர். திருச்சி விமானநிலையத்திலும், அடுத்த ஒன்றரை மணி நேரத்தில் அந்நடிகர் அடைந்த சென்னை விமானநிலையத்திலும் நிருபர்கள் மக்கள் மாண்டது குறித்து கேட்ட எக்கேள்விக்கும் பதிலளிக்காமல் பாதுகாவலர்களின் பாதுகாப்போடு காருக்குள் ஏறி நடிகர் தப்பியோடி விட்டார். இதுதான் இவரது கட்சியின் நோக்கம் என்பது போல இருந்தது மக்கள் இறந்ததை அறிந்தும் அவர் வீட்டுக்கு எடுத்த ஓட்டம்.

கரூரில் அத்துயரம் நிகழத் துவங்கி அது பற்றிய செய்திகள் வெளிவந்த அடுத்த சில நிமிடங்களில் கரூர் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் செந்தில் பாலாஜி அவர்கள் மருத்துவமனைக்கு விரைந்து காயமடைந்தவர்களுக்கு தேவையான உதவிகளை செய்தார். அதன்பின்னர் பக்கத்து மாவட்டங்களில் இருந்த அமைச்சர்கள் மகேஷ் பொய்யாமொழி, எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோரும் பல மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளும் மருத்துவமனைக்கு விரைந்து மக்களுக்கு தேவையான தண்ணீர், உணவு ஆகிய உதவிகளை செய்தனர்.

ஆனால் யாருக்காக யாரைப் பார்க்க மக்கள் கூடினார்களோ யாரால் இத்தனை உயிர்கள் பறிபோனதோ, அதற்கு மூலக் காரணமான அந்த நடிகர் சென்னைக்கு ஓடிவிட்டார். அந்த நடிகரின் கட்சியைச் சார்ந்த நிர்வாகிகள் ஒருவரும் அங்கு வரவில்லை. மொத்தமாக அந்த நடிகரின் கட்சி நடத்திய கூட்டத்தில் நிகழ்ந்த கூட்ட நெரிசலில் சிக்கி குழந்தைகள் பெண்கள் உள்ளிட்ட 41 தமிழ் மக்கள் உயிரிழந்தனர்.

அந்த நடிகரின் கூட்டத்தில் நிகழ்ந்த உயிரிழப்புகள் விபத்து போன்ற தோற்றமளித்தாலும், அது அந்நடிகர் வேண்டுமென்றே நிகழ்த்திய காலதாமதத்தால் நிகழ்ந்தது என்பதை மக்கள் அனைவரும் உணர்ந்துள்ளார்கள்.

சிறிதுகூட அரசியல் அறிவோ தெளிவோ அற்ற, ரசிக மனப்பான்மை மட்டுமே கொண்ட ஒரு கூட்டத்தை தொண்டர்கள் என்று நினைத்து கட்சி நடத்தும் அந்நடிகரின் அரசியல் அறிவு பூஜ்ஜியம். திட்டமிடும் தன்மை பூஜ்ஜியம். மக்கள் மரணித்து கீழே விழும்பொழுது பயந்து சென்னைக்கு ஓடியதால் அவரது மனிதாபிமானமும் பூஜ்ஜியம்.

எப்படியாவது இந்த மரணங்களை ஆளுங்கட்சி மேல் போட வேண்டும் என்று மூன்று நாட்களுக்குப் பின்னர் அவர் பேசிய வீடியோவில் இறந்தவர்களுக்கு இரங்கல் கூட தெரிவிக்காமல், யாரோ எழுதிக் கொடுத்த "சி.எம்.சார், பழி வாங்கணும்னா என்மேல் கை வையுங்கள், என் தொண்டர்கள் மேல் கை வைக்காதீர்கள்." என்று சினிமா வசனத்தை உளறிய கொடூரம் எல்லாம் இதுவரை தமிழ்நாடு அரசியல் சந்தித்திராதது.

இதுபோன்ற உயிரிழப்புகள் நிகழாமல் தடுக்க

உறுதியான சட்டங்கள் வேண்டும்.

1. இனி எந்த கட்சிக்கும் தெருமுனைக் கூட்டத்துக்கான அனுமதியை காவல்துறை வழங்கக் கூடாது.

2. சாலைகள், முச்சந்திகள், நாற்சந்திகள் எல்லாம் மக்கள் மற்றும் வாகனங்கள் மற்றும் ஆம்புலன்ஸ்கள் சென்று வரும் போக்குவரத்துக்கானது மற்றும் வணிகர்களின் வணிகத்துக்கானது என்பதால், நகரத்துக்குள் உள்ள எந்த சாலையிலும், தெருவிலும் அரசியல் கட்சிகள் சார்பில் நடத்தும் ரோட் ஷோ மற்றும் தெருமுனைக் கூட்டங்களுக்கு காவல்துறை அனுமதி வழங்கக் கூடாது.

3. எந்த கட்சியாவது பிரச்சாரம் செய்ய வேண்டுமென்றால், மேடை அமைத்து அவர்களது தொண்டர்களுக்கு அடையாள அட்டை கொடுத்து தனியார் மைதானத்திலோ, மண்டபத்திலோ பிரச்சாரம் செய்து கொள்ள வேண்டும்.

4. எந்த பிரச்சாரக் கூட்டத்திலும் தொண்டர்களோ, மக்களோ ஒருவர் மீது ஒருவர் உரசும்படியான நிலை இருக்கவே கூடாது.

5. ஒவ்வொருவரும் அமர்வதற்கான இருக்கை இருக்க வேண்டும்.

மக்களை அமரவைத்துப் பேசாத எந்த தலைவரும் - நடிகரும் பொதுமக்களுக்கும், நாட்டுக்கும் தேவையில்லை.

எல்லோருக்கும் ஒரே சட்டம் தான்.

தமிழ்நாட்டு மாணவர்கள் அவர்களுக்கான அரசியல் பேச வேண்டும் - லோனா வெங்கிட்

தமிழ்நாட்டில் 2012- 2020 வரை காலகட்டத்தில் திமுகவின் இருமுறை ஆட்சியிழப்புக்கு பிறகு,தமிழ்நாட்டின் வளர்ச்சி,இயங்குதலில் மொத்தமாகவே பின்னடைவை சந்தித்தது.சமூக அளவில் திமுகவின் தொடர் வளர்ச்சி திட்டங்கள் இல்லை.ஜெயலலிதா A1 க்ரிமினல் என தீர்ப்பு வந்த பின் எந்த செயல்பாடுகளும் மக்களுக்கானதாக அரசு நிர்வாகத்தில் இல்லை. ஏழை எளிய மக்கள் பேருந்துக்கு ஒரு நாள் பூவிற்ற,காய் விற்கும் கூலியை வாயிலும்,வயிற்றிலும் அடித்துக்கொண்டு ,கண்டக்டரிடம் டிக்கெட் வாங்கிய காட்சிகளை மதுரை பேருந்துகளில் பார்த்திருக்கிறேன்.

ஒன்றிய அரசின் தேசியக்கல்விக்கொள்கை, நீட் எனும் மருத்துவ நுழைவுத்தேர்வு இருமுனைக்கத்தியாக நம் மாணவர்கள் மீது திணிக்கப்பட்டது. அனிதா எனும் கிராமத்து தலித் மாணவி உச்சநீதிமன்றம் வரை தனக்கான கல்வி உரிமை கேட்டு சென்றாள் 1176 மதிப்பெண் வாங்கிய அவள் இன்று நம்மோடு மருத்துவராக இல்லை. மாறாக அவள் புகைப்படம் வைத்து நாம் நீட் எதிர்ப்பை இன்றும் பேசிக்கொண்டு தான் இருக்கிறோம்.

நமக்கான நீட் மறுக்கும் உரிமை இன்னும் பழங்குடியினப்பெண் குடியரசுத்தலைவர் முர்மு அவர்களின் ஒப்புதல் பெற்று கிடைக்கவில்லை.முதலிலேயே மருத்துவத்துறை நீட்டை எதிர்த்திருக்க வேண்டும்.Indian medical association நீட் எதிர்ப்புக்கு முதலில் நின்றிருக்க வேண்டும்.கம்யூனிஸ்ட் மாநிலங்கள் நீட்டை எதிர்த்திருக்க வேண்டும்.மாறாக கல்வி உரிமைக்கான தோழர்களும்,முற்போக்கு அமைப்புகளும் ,திமுகவும் தான் நீட்டை எதிர்த்தன.மருத்துவத்துறை அரசியலுக்கு அப்பால் வாழ்ந்து கொண்டிருந்ததால் தன் துறை மீது எறியப்பட்ட அம்பினை கவனிக்கவே இல்லை.

2014-2022 வரை திராவிட எழுச்சி காலம்..இந்த அநீதிக்கெதிராக பலர் அரசியல் தளத்தை கவனிக்கவும்,பேசவும் ,எழுதவும் அனிதாவுக்கு நீதி கேட்கவும் துவங்கினர். நீட்டால் இன்று வரை பல மாநிலங்களில் மாணவர்கள் இறந்திருக்கின்றனர்.

தேசியக்கல்விக்கொள்கையை உருவாக்கிய கஸ்தூரி ரங்கன் எனும் விஞ்ஞானியின் குழுவில் குழந்தைகள் ஆர்வலரோ,மனநல ஆலோசகரோ ,ஆசிரியரோ இன்றி ஒட்டுமொத்த இந்திய மாணவர்களுக்கான பொதுக்கல்விகொள்கையை குலக்கல்வி வடிவில் வடிவமைத்திருக்கிறார்கள்.கஸ்தூரி ரங்கன் இப்போது இறந்து விட்டார். அவரால் இங்கு மாணவர்கள் மீது தொடுக்கப்பட்ட அம்பு திமுக அரசால் தற்காலிகமாக தடுத்து வைக்கபட்டிருக்கிறது. 11 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு தமிழகத்தில் ரத்து செய்யப்பட்டுள்ளது.மாநிலக்கல்விக்கொள்கை வகுக்கின்றனர். இருமொழிக்கொள்கையை உறுதி செய்கின்றனர்.

கடந்த ஆண்டு தமிழ்நாட்டின் பல்கலைக்கழக விதிகளை ஆர்.எஸ்.எஸ் அதிகாரிகளை வைத்து திருத்தினர்.கல்லூரி படிப்பில் குலக்கல்வியை திணித்தனர்.படிக்க இயலாமல் எந்த வருடத்திலும் படிப்பிலிருந்து மாணவன் வெளியேற அனுமதிக்கப்பட்ட மாணவர் விரோத விதிகளை உள்ளடக்கியதும்,மாநில பல்கலைக்கழக உரிமைகளுக்கு எதிரானதாகவும் அது இருந்தது.

கல்விக்கு பின் செல்லும் வேலைவாய்ப்பு முழுவதும் எந்த காலத்திலும் நிரந்தரம் செய்ய மாட்டோம் என ஒப்புதல் பெற்று வழங்கும் தற்காலிக வேலைவாய்ப்பாக அரசுத்துறையில் இந்தியா முழுவதும் பரவலாக்கப்பட்டிருக்கிறது.அது தொழிலாளர் நல விரோதமான ஒப்பந்தம் ,அதை அரசுகளே செய்வதற்கு வசதியான தேசிய பணியாளர் முகவர் மையம் எனும் அமைப்பை மோடி 2020 இல் பாராளுமன்ற ஒப்புதலுடன் உருவாக்குறார்.அந்த அமைப்புக்கு அரசியலமைப்புக்கு எதிராக தொழிலாளர்க்கு பாலிசி உருவாக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

மொத்த பணிகளில் அரசு நிரந்தரப்பணியும்,அதிகாரிகளும் மிக சொற்பமே.மற்ற அனைவருக்கும் பணி பாதுகாப்பற்ற பணிச்சூழல் உள்ளது.

இந்த பின்னனியுடன் தான் அரசியலை இந்த தலைமுறையினர் அணுக வேண்டும்.இது தான் இங்கு இப்ப இருக்கும் வாழ்வியல் சூழல்.எளிய மக்கள் வாழ்வாதாரம்,மாணவர்களின் கல்வி உரிமை,உயர் கல்வி உரிமை,வேலைவாய்ப்பு ,சிறுபான்மையினர் வெறுப்பை விதைத்தல் என அனைத்திலும் ஆர்.எஸ் எஸ் ஊடுருவல்கள் உள்ளன.சிறுபான்மையினர் வாழ்வு இந்தியாவில் பாதுகாப்பற்றதாக உள்ளது.

2014 முதல் நடந்த திராவிட எழுச்சியால், பல விவாதங்கள், எழுத்து , பேச்சு , புத்தகங்கள் என அவதூறுகளை முறியடித்து திமுக ஆட்சிக்கு வந்தது. திமுகவால் இன்று பல பள்ளிகளில் காலை உணவுத்திட்டம் செயல்படுகிறது. உலகநாடுகள் அதை நடைமுறைப்படுத்த விரும்புகின்றனர்.

கூலியை கண்டக்டருக்கு கொடுத்த காலம் போய் பேருந்தில் உரிமை பயணம் செய்யும் பெண்களுக்கு கண்டக்டர் பணமில்லா பயணச்சீட்டு வழங்குகிறார்.

மாதமானால் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பத்தில் மாணவர்களின் காலை உணவு ,மேற்படிப்புக்கான திட்டம், செலவுகள், பெண்களுக்கு மாதம் ஆயிரம் என உரிமைத்தொகை, வயதானவர்கள் உரிமைத்தொகை, மாற்றுத்திறனாளி உரிமைத்தொகை , வேலைவாய்ப்பு பெறும் வரை உரிமைத்தொகை, மாதாந்திர மருந்துகள் என குடும்பத்துக்கு ரூ 6000 வரை அரசு உரிமை நிதி பெறுகின்றனர்.

மாணவர்களின் விளையாட்டு மேம்பாடுகளுக்கு உதயநிதிஸ்டாலின் தனிக்கவனம் செலுத்துவதால் அவர்களுக்கான வேலைவாய்ப்பு, ஊட்டச்சத்து என அனைத்தும் அரசு கவனம் பெறுகிறது.

இவை அனைத்தும் நமக்கு படிப்பதால் அரசியலை பின் தொடர்வதா தெரிகிறது. மாணவர்கள் அரசியலில் இருந்து அப்புறப்படுத்தி வளர்க்கப்பட்டால் அவர்கள் நடிகர்கள் பிம்பத்தில் விழுவதை நம்மால் தவிர்க்க முடியாது. விஜய்க்கும் ,விஜய் நிர்வாகிகளும் பெரியார் ,அம்பேத்கரை விளம்பரப்பலகை போல பயன்படுத்தினர். அவர்கள் பின்னால் சென்ற யார்க்கும் அந்த விளம்பரம் தாண்டி பெரியாரோ ,அம்பேத்கரோ சென்றடையாதது நமது பின்னடைவும் தான் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

5 ஆம் வகுப்பு வரை சோசியலிச பழக்கவழக்கங்களை பள்ளிகளில் நாம் கற்பிக்க வேண்டும். 6 ஆம் வகுப்பு முதல் அந்தந்த வாழ்வியலில் உள்ள அரசியல் வரலாறுகளும், நிகழ்காலமும் கற்பிக்கவும், அமைப்பாக உருவாக்கவும் வேண்டும். பள்ளிக்கல்வி தாண்டி திராவிட கதைகள் வாரம் ஒரு முறை படிக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

கல்லூரி மாணவர் அமைப்புகள் தேர்தல் அரசியலில் ப்ரச்சாரங்களில் பங்கேற்க அனுமதிக்கப்பட வேண்டும்.

அரசியல் சினிமா கதாநாயகர்களுக்கு இல்லை. நிஜவாழ்வின் எதார்த்தவாதிகளுக்கான தளம் எனும் புரிதலுக்குள் நாமும் சேர்ந்து தான் கொண்டுவர வேண்டும்.

திராவிட எழுச்சி வெல்லும் வரை முழு அரசியல், சமூக, பண்பாட்டு மாற்றம் வரும் வரை தாங்கிப்பிடிக்க மாணவர்கள்அரசியல்படுத்தப்படுதல் தேவையான மாற்றமாகும்.

கரூர் பெருந்துயர படிப்பினைகள் - *MURALIDHARAN PB*

முதலாவதாக, கரூரில் உயிரிழந்த நாற்பத்தோரு இன்னுயிர்களுக்கு நாம் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்வோம். ஈடு செய்ய முடியாதது மனித உயிர்கள். அதைப் பெற்ற நாம் முடிந்தவரை பாதுகாப்பாக வாழ்வதே அறிவுடைமை. இது மனிதர்களால் ஏற்பட்ட விபத்து. நடிகர்கள் என்பவர்கள் வானத்தில் இருந்து வந்தவர்கள் அல்லர். அவர்களும் நம்மைப் போன்ற மானுடர்கள். திரையில் தோன்றும் யாரும் நம்மைக் காட்டிலும் சிறப்பானவர்கள் இல்லை. அவர்களை திரையில் மட்டுமே ரசிப்போம். அவர்கள் கொள்கையற்ற அரசியல் பேசினால் புறந்தள்ளுவோம்.

இரண்டாவதாக,

கரூர் மட்டுமல்ல அந்த நடிகர் கூட்டிய கூட்டம் யாவுமே எந்த ஒரு வரம்புக்குள்ளும் வராத கூட்டமே. வெவ்வேறு மாவட்டங்களில் இருந்து அழைத்துவரப்பட்ட கூட்டம். பெருந்திரள் என்பது முறைப்படுத்தப்பட்ட மக்கள் கூடல். கரூரில் முறைப்படுத்தப்படாமல் கூடியது ஒரு கும்பல். இதற்கு முன்பாக நடந்த அந்த நடிகரின் அரசியல் கூட்டங்கள் நடந்தவை மொத்தம் அய்ந்து. அதில் பலதரப்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டனர். சில சமயம் உயிரிழப்புகள் கூட நடந்தது சோகம். முறைப்படுத்திய கூட்டங்களில் உயிரிழப்புகள் நடக்காவண்ணம் உயிர் பாதுகாக்கப்படும்.

மூன்றாவதாக,

கரூரில் நடந்தது விபத்து. அதுவும் எந்த முன்னேற்பாடின்றி நிகழ்வை நடத்தியவர்கள் செய்த தவறு. தண்ணீர், காற்று இல்லாமல் மக்களை காக்க வைத்தது பெரிய தவறு.அந்த துயரத்தை எளிதாக ஆளும் அரசின் அலட்சியம் என பந்தை ஆளுங்கட்சியின் பக்கம் வீச அது காட்டுத்தீயாக பற்றிக்கொள்ள அந்த விபத்துக்கு காரணம் அரசு தான் என கண், காது, மூக்கு என உருவம் வரைந்துவிட்டனர். இதற்கு பக்கபலமாக அனைத்து எதிரிகளும் ஒன்று சேர்ந்து அரசு பொறுப்பேற்க வேண்டும் என்பது எந்தவிதத்தில் அறம்? வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முதல்வர், அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் மற்றும் கட்சி ரீதியாக பதிலடிகள் தந்தது மட்டுமல்ல. முதல்வர் உள்ளிட்ட பெரும்பாலான அமைச்சர்கள் பாதிக்கப்பட்டவர்களை நேரடியாக சென்று நலம் விசாரித்து அரசின் பொறுப்பை உறுதிப்படுத்துகிறது. நீதி விசாரணையை ஓய்வுபெற்ற நீதிபதியை வைத்து ஆரமபித்து அரசு.

நான்காவதாக,

நிஜம் வேறு திரை வேறு என்பதை உணராத வரை தமிழ்நாடு தனிநபர் துதிபாடல்களை அதிகமாக காணும்.

ஐந்தாவதாக,

ஏட்டுக்கல்வி கூட்டுக்கு உதவாது என்பது தமிழன் பயன்படுத்தும் பழமொழி. அதுபோல கல்வியை கசடற கற்றால் இதுபோல கசப்பான அனுபவங்களை தவிர்க்க முடியும். சமூக ஊடகங்களை மட்டுமே நம்பிக்கைக்குரியதாக எண்ணாமல் தற்கால இளைஞர்கள் வாசிப்பை வழக்கமாக வைத்திருந்தால் ஆறுதலாக இருக்கும். கோடம்பாக்கத்து நடிகனை கோட்டையில் உட்கார வைக்க முயலமாட்டான். அவனுடைய ரசிகன் வாசிக்க மின்நூல்களை அதிகப்படுத்தினால் வாசிப்பை விரல் நுனியில் கொண்டு செல்லலாம்.

ஆறாவதாக,

படித்தால் மட்டும் போதாது. பகுத்தறிவையும் பாடங்களில் மற்றும் நடைமுறையில் கொண்டு வரவேண்டி காலத்தில் நாம் வாழ்கிறோம். பகுத்தறிவு இதுபோல சமயங்களில் பயன்தரும்.

ஏழாவதாக,

இன்றைய வளரும் தலைமையில் பலர் உணர்வுபூர்வமான விவரங்களை உள்வாங்கிக் கொள்கின்றனர். அறிவுப்பூர்வமாக சிந்திக்கவிடாமல் அவர்களது கவனச்சிதறல்களை பயன்படுத்திடுவிதமாக செய்திகள் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. எது உண்மை எது பொய் எது சரி எது தவறு என்று எண்ணவிடாமல் காட்சி ஊடகங்கள், சமூக வலைதளங்கள், தேடுபொறிகள் எல்லாமே மெய்யான தகவல்களை மட்டுமே தருகின்றனவா என்பதை அலசாமல் கண்களால் காண்பது மட்டுமே மெய்யான விவரம் என உறுதியாக நம்புகிறது இன்றைய இளையதலைமுறை. இது ஆபத்தானது.

எட்டாவதாக,

கடமை, என்றால் என்ன? நமக்கான கடமை எது என்பதை தலைவன் கூறிட வேண்டும். ஆட்டு மந்தைகளைப் போன்று ஒரு ஆடு சென்றாலும் அதையே பின்பற்றாமல் அறிவின் வாயிலாக சிந்தித்து பணியாற்று. கண்ணியம் எந்த இடத்திலும் கண்ணியமாக நடந்து மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக சிறந்து விளங்கவேண்டும். கட்டுப்பாடு என்பது தனிமனித ஒழுக்கத்தில் இருந்து ஆரம்பிக்கிறது. தான்தோன்றிகளாக இருத்தல் கூடாது.இவைமூன்றும் பேரறிஞர் அண்ணா அவர்கள் கற்றுத்தந்தது. தமிழன் அதை கடைபிடிக்காமல் போனால் கரூர் போன்ற துயரங்கள் நடக்கும்.

ஒன்பதாவதாக,

என்றாவது ரயிலுக்கு போகிறவன் தாமதமாக போவானா? அந்த எண்ணம் எல்லா தலைவர்களுக்கும் வரவேண்டும். நேரந்தவறாமை என்பது ஒரு பழக்கம் மற்றம் அல்ல நற்பண்பும் கூட அதைக் கடைபிடித்தால் அனைவருக்கும் நன்மை. நேரம் தவறி செல்பவன் மற்றவர்களை அலட்சியமாக கருதுபவன்.ஒரு முறை நேரம் தவறலாம் அதையே வழமையாக்கிக் கொண்டு மற்றவர்கள் காத்திருக்கட்டுமே என்ற எண்ணத்தில் செய்யும் தவறுகளால் இதுபோல தேவையற்ற நிகழ்வுகள் நடக்கும். கும்பல் கலாச்சாரம் மிக அருவருக்கத்தக்கது. பொது இடங்களில் மக்கள் கூடுவதற்கு முன்பு தேவையான அடிப்படைகளை அந்தந்த இயக்கங்கள் செய்துகொடுக்க வேண்டும். தண்ணீர் தாகத்தையும் இயற்கையின் அழைப்பையும் தவிர்க்க முடியாது. எல்லாவற்றையுமே அரசு செய்து தரமுடியாது.

இவையெல்லாம் கவனத்தில் கொண்டு ஆயிரக் கணக்கான மக்கள் கூடும் இடங்களில் அதீத அக்கறையோடு செயல்படுத்த வேண்டும்.

பத்தாவதாக,

ஒன்றை சேர்த்துக்கொள்ளவேண்டும். தலைவன் என்பவன் தனது வெற்றிக்கும் தோல்விக்கு தானே பொறுப்பேற்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களை விட்டுவிட்டு பாதியலேயே ஓடிவிடக்கூடாது. குறைந்தபட்சமாக மற்றவர்கள் மீது பழி போடாமல் தன்னை நம்பி வந்த மக்கள், அப்பாவிகள் காயமடைந்த குடும்பங்களுக்கு ஆறுதல் கூற வேண்டும். இழந்த உயிர்களுக்கு அனுதாபம் கூற வேண்டும். இயன்ற மட்டும் பொருட்கள் தந்து உதவிட வேண்டும். எனக்கு கூட்டம் கூட்ட மட்டும் தெரியும். அவர்களுக்கு ஆபத்து வந்தால் காணாமல் போய்விடுவேன் என்ற செயலை ஒரு நல்ல தலைவன் செய்யவேமாட்டான். அவ்வாறு செய்தால் அவன் தலைவனே இல்லை. வீட்டுக்குள்ளே மூடங்கிக்கிடந்து யாரையும் சந்திக்காமல் அரசாங்கத்தை குறை சொல்பவன் தலைவனா ? அத்தலைவனைத் தவிர அனைவரும் வந்தாகிவிட்டது இழப்பீடாக பணம் தந்திடுவேன், பாதிக்கப்பட்ட குடும்பங்களை தத்தெடுப்பேன் என கூறிவிட்டு அதனை செயல்படுத்த தவறியவன் தலைவனா? அவனை நம்பி பின்னால் போனால் என்ன ஆகும் என்பதை இந்த கசப்பான கரூர் நிகழ்வு ஒரு எடுத்துக்காட்டு.

நிறைவாக,

இதற்கு முன்னதாக அரசியல் கூட்டங்களில் இதுபோல நடந்தது இல்லையா? உயிரிழப்புகள் ஏற்படவே இல்லையா? எத்தனையோ கட்சிகள் நடத்திய எத்தனையோ கூட்டங்களிலும் பயணத்தின் போதும் விபத்துகளால் இதுபோல துயரங்கள் நடந்துள்ளது. ஆனால் தலைமை பொறுப்பில் உள்ளவர்கள் தன்னை நம்பி வந்தவர்களை நட்டாற்றில் விட்டுவிடவில்லை. அவர்களுக்கு உறுதுணையாக நின்றனர். நடந்தது நடந்துவிட்டது நான் இருக்கிறேன் என ஆறுதல் கூறுபவன் நல்ல தலைவன். காணொலியில் பேசுபவன் தலைவனாக ஏற்றுக்கொண்டால் அவனை நம்பி இருக்கும் கூட்டம் வீணான கூட்டம். மண் குதிர்களை நம்பி வாழ்வை இழக்க வேண்டாம்.

MURALIDHARAN PB
INTUITION REALITY
33/37 Kandan Street,
Perambur
CHENNAI-600011
INDIA
92821 26535

வாசிப்பு பழக்கம் இல்லாத, அரசியல் புரிதல் இல்லாத இளம் தலைமுறையை வழிநடத்துவது எப்படி? - மு. சுமதி

கரூர் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த, அனைவருக்கும் அஞ்சலியையும், அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது" எனும் பழமொழிக்கேற்ப, ஏட்டுக்கல்வி மட்டுமே கற்றுத் தேர்ந்த தலைமுறையின் தலையெழுத்து தான் இதுவோ? என நெஞ்சம் பதறுகிறது. 41 உயிர்களை துச்சமாக மதித்து, 41 நாள் கழித்து, மீண்டும் கூட்டத்திற்கு அழைத்தால், செல்லத்தான் செய்வார்களோ இந்த GenZ அறிவாளிகள்? இது GenZ தலைமுறையின் பிழையா இல்லை 80's – 90's பெற்றோர்களின் பிள்ளை வளர்ப்பின் பிழையா என்பது எனக்கு இன்னும் தெளிவாகவில்லை.

பாட புத்தச் சுமையை ஏற்றிய genz பெற்றோர் பிற புத்தகங்களையும், செய்தித் தாள்களையும் இவர்கள் கண்களில் காட்டவே இல்லையோ? தன்னைச் சுற்றி இருப்பவர்களிடம் அடிப்படை அக்கறை காட்டுவதில் கூட அக்கறை இல்லாத தலைமுறையையா வளர்த்து வைத்திருக்கிறோம்? "அங்கே என் முன்னாடி 3 பேர் மயங்கி விழுந்தாங்க, இன்னும் 3 பேர் out னு நினைக்கிறேன்" இதையெல்லாம் எப்படி சிரித்துக் கொண்டு சொல்ல முடியும்? அப்படி பேசுவது எவ்வளவு முட்டாள்த்தனம்.

குழந்தைகளுக்கு புத்தகங்களை அறிமுகப்படுத்துங்கள். அது பல வாசல்களை திறந்து வைக்கும். நல்லது எது கெட்டது எது என பகுப்பாய்வதற்கான அறிவையும், புரிதலையும் தரும். முக்கியமாக சுயசிந்தனை, சுயமதிப்பீடு ஆகியவற்றை அதிகப்படுத்தும். குழந்தை பருவத்தில் பல்வேறு கதை புத்தகங்களை படிக்கக் கொடுங்கள். கதைகளை படிக்கும் போதுதான் பல்வேறு கதாப்பாத்திரங்களும், அதன் கோணங்களும் புரிய ஆரம்பிக்கும். நமக்கு ஒரு கருத்து இருப்பது போல, எதிராளிக்கும் கருத்து இருக்கும். சில நேரங்களில், நமது கருத்து தவறாகவும், எதிராளி மிகச் சரியாகவும் இருக்கலாம் என்பதெல்லாம் விளங்கும். எப்போதும் நாம் அறத்தின் பக்கம் நிற்க வேண்டும் என்ற நியாயம் புரியும். நூலகங்களுக்கு அழைத்துச் செல்லுங்கள். மெதுவாக அவர்களே பலப்பல புத்தகங்களையும், ஆசிரியர்களையும் கண்டடைவார்கள். அப்போது தான், ஒரு தலைவனையோ, கட்சியையோ பின்தொடர்வதற்கு அடிப்படை காரணமாவது அவர்களுக்கு இருக்கும். அரசியல் கற்கவும், பேசவும் அவர்களை ஊக்கப்படுத்துங்கள். பழைய அரசியல் கதைகளை பேசுங்கள். வரலாற்றை அறிந்து கொள்ள உதவுங்கள். நியாய , அநியாயங்களை அவர்களே முடிவு செய்யட்டும். பிடித்தவர் என்பதற்காக யார் மீதும் பைத்தியம் பிடித்து சுற்ற வெண்டியதில்லை என்பதை உணரச் செய்யுங்கள். மனித உயிர்கள் எவ்வளவு முக்கியம் என்பதை அறிவுறுத்துங்கள். வீட்டில் புத்தகம் பற்றி உரையாடுங்கள். நிச்சயமாக அரசியல் பேசுங்கள். உங்கள் மகனோ/மகளோ, நீங்கள் சார்ந்திருக்கும் கட்சியை ஆதரிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்களை பேசச் செய்யுங்கள். விவாதங்கள் வீட்டிலிருந்தே துவங்கட்டும்.
இளைய செல்வங்களே,

காலம் பொன் போன்றது. ரீல்ஸ் பார்த்துக் கொண்டும், ரீல் சுற்றுவதை பார்த்துக் கொண்டும் இருந்தால், அறிவோடு சேர்த்து, வாழ்க்கையையும் இழக்க நேரிடும். இன்றைய இணைய உலகில் உங்கள் முன் உலகத்தில் உள்ள அனைத்தும் படைக்கப்பட்டிருக்கிறது. புத்தித் தெளிவோடு தேவையானதை மட்டும் தேவையான அளவில் மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள். கைப்பேசியை கொஞ்சம் கீழே வைத்து விட்டு, நிஜ உலகை சிறிது நோக்குங்கள். வருங்காலத்தை வடிவமைக்க போகிறவர்கள் நீங்கள் தான்.

"உங்களுக்கு கல்வியைத் தருகிறோம். படிப்பு தான் உங்கள் முழு முதற் கடமை. அதில் கவனம் செலுத்துங்கள். படித்து முடித்து எங்கள் கட்சியை பின்பற்ற வேண்டும் என்பதில்லை. பகுதாய்ந்து உங்கள் அறிவால் சிந்தித்து எது சரியோ அதைப் பின்பற்றுங்கள்" என்று கல்வித் துறை அமைச்சர் பேசுகிறார். "கல்விக்கு எதிராக கலகம் செய்பவர்களை , கண்டுகொள்ளாமல் நீ கல்வியை நோக்கி ஓடிக்கொண்டே இரு. உனக்கு மதிய உணவோடு காலை உணவையும் சேர்த்தளித்து உன் ஓட்டத்திற்கு ஊட்டம் அளிக்கிறேன் " என்கிறார் முதல்வர். சரியான வழிகாட்டிகள் அமைந்திருக்கிறார்கள். நாளை உங்கள் அறிவால், உங்கள் பகுத்தறிவால் உயர்ந்து அவர்களையே நீங்கள் கேள்வி கேட்டாலும் பெருமையாய் நெஞ்சுயர்த்தி பதில் சொல்வார்கள் தவிர ஓடி ஒளிய மாட்டார்கள்.

தமிழ்நாட்டை சூழ்ந்திருக்கும் ஆபத்து - ஹாஜா பின் பாவா

ஒரு சம்பவம் நடத்தப்படுகிறது. அதற்கான காரண காரியங்கள் என்னவென்றே ஆராயப்படாமல் உடனடியாக ஆளுங்கட்சியின் மீது குற்றம் சுமத்தப்படுகிறது.

மேலும் அக்கட்சியைப்பற்றி,பொய்கதைகளை,பொய்யுரைகளைப் பரப்புவது என ஒரு கட்சி மட்டும் இங்கு குறி வைக்கப்படுகிறது.

இதில் கொள்கை எதிரிகள்,எதிர்க்கட்சி காரர்கள், சித்தாந்த எதிரிகள் இன்னும் அறமே இல்லாதா பத்திரிகையாளர்கள் என எல்லோரும் கூட்டு சேர்ந்து ஒருமித்து நின்று ஒற்றைக் கட்சியை விமர்சிக்கிறார்கள்.

இல்லை அவதூறு பரப்புகிறார்கள், என்றால் ஏன்?
அக்கட்சி மட்டும் குறி வைத்து தாக்கப்படுவது எதனால்?

வாய்ப்பு கிடைத்து அரசமைத்த நாள் முதல் இன்று வரை திராவிட கட்சிகள் மட்டுமே மாறி மாறி தமிழகத்தை ஆண்டு வந்திருக்கிறது. அந்த வாய்ப்பை மக்கள் திராவிட கட்சிகளுக்கு மட்டுமே கொடுத்திருக்கிறார்கள். மக்கள் இதுவரை மாற்றி யோசித்ததே இல்லை.

இதுவே சித்தாந்த எதிரிகளுக்கும் கொள்கை எதிரிகளுக்கும் கண்ணை உறுத்துகிறது.அவர்களை கோபம் கொள்ள செய்கிறது. ஏதேனும் ஒரு வழியில் தமிழ்நாட்டை ஆண்டு விட மாட்டோமா என்று முயற்சிக்கவும் வைக்கிறது. அதற்காக அவர்கள் எதை செய்யவும் காத்திருக்கிறார்கள்.

பாசிச,சனாதன,சித்தாந்த வாதிகளால் தங்களால் நேரடியாக ஆள முடியாமல் போனதால் வாடகைக்கு ஆல் அமர்த்தி கூலி அடிமைகளை கொண்டு இந்த தமிழ்நாட்டில் குழப்பம் செய்தேனும் ஆட்சியை மறைமுகமாக பிடித்து விட வேண்டுமென முயற்சிக்கிறார்கள்.

அம்முயற்சியிலொரு அங்கமாக ஒரு திராவிட கட்சியை தங்கள் வசமாக்கி,அடிமையாக்கி கொண்டார்கள்.

மற்றுமொரு கட்சியோ, தொடர்ந்து பாசிச,சனாதான கொள்கைகளை மக்களிடம் தோலுரித்து,வெளிச்சம் போட்டு காட்டி, தாங்களின் ஆட்சிக் கனவை நிறைவேற்ற முடியாமல் தடுக்கும் திமுக. ஆகவெ தங்களின் எதிரி அதை வீழ்த்தி விட வேண்டும் என பாசிச குழு பல திட்டங்களை செயல்படித்துகிறது.

கூலி அடிமைகளை கொண்டு குழப்பம் செய்தேனும் ஆட்சி கட்டிலில் அமர்ந்து விட வேண்டுமென துடிக்கிறது. அதற்காக களம் இறக்கப்பட்டு இருக்கும் ஒரு கூலி அடிமைதான் இந்த திரை நடிகர்.

இவர் ஒரு கட்சிக்கு தலைவராக்கப்படுகிறார்.ஒரு தற்குறி தலைவன் ஆனால் என்னவெல்லாம் நடக்கும் என்பதற்கு இவர் மற்றும் இவரின் கடந்த கால செயல்பாடுகளெ சாட்சி.ஒரு கூட்டத்தை வழிநடத்த முடியாத தலைவன் அதை கட்டுப்படுத்த இயலாத ஒருவன் இந்த நாட்டை ஆள துடிப்பதும் இந்த மக்களை ஆட்சி செய்ய நினைப்பதும்தான் உலகின் மிகப்பெரிய துயரம்.

ஒரு நாட்டை ஆளத் துடிப்பவன் தனக்கான கூட்டத்தை ஆளும் திறமையை பெற்றிருக்க வேண்டும்.

திராவிட கட்சிகள் தொடர்ந்து தமிழ்நாட்டை ஆண்டு கொண்டிருக்கிறது என்றால் அதன் பின்னே அவர்களின் பெரும் உழைப்பும்,தயாரிப்புகளும் இருக்கிறது. திராவிட தலைவர்கள்,அவர்களின் பேச்சு, எழுத்தின் வாயிலாக தொண்டர்களை ஈர்த்தார்கள். அதைக்கொண்டு அவர்களை தயார் படுத்தினார்கள்.

இல்லை தொண்டர்களை தயாரித்தார்கள்.
தொண்டர்களை படிக்கத் தூண்டினார்கள்.

அதன் விளைவாக தொண்டர்கள் செம்மைப் படுத்தப்பட்டார்கள். தொண்டன் மெருகேற்றப் பட்டான்.

மேலும் தொண்டர்களை மெருகேற்ற, கட்சிக்கான கொள்கைகள் வகுக்கப்பட்டது, அந்த கடமையை செய்ய கண்ணியம் காத்திட பயிற்சி அளிக்கப்பட்டது. இத்தகைய பயிற்சிகள்கொண்டு தொண்டர்களிடம் கட்டுப்பாடு வளர்க்கப்பட்டது பின்னர் அவர்கள் உதவியுடன் ஆட்சி அமைக்கப்பட்டது.

திராவிட ஆட்சி அமைத்து இத்தனை ஆண்டுகளானாலும்,தங்களின் கட்சி கட்டமைப்போடு இருப்பதற்கும்,தொண்டர்கள் கட்டுப்பாடோடு நடந்து கொள்வதற்கும் திராவிட தலைவர்களின் உழைப்பும்,தயாரிப்புகளும் ஏராளம்..அவர்கள்,அவர்களின் தொண்டர்களை தயார்படுத்திய விதம் அறிவுபூர்வமானது. அது ஒரு கொள்கை கோட்பாடாக உருவாக்கப்பட்டுள்ளது. இன்றும் அவர்கள் தொண்டர்களுக்கு பயிற்சி அளிப்பதை,பயிற்சி பட்டறைகள் நடத்துவதை,கொள்கை வகுப்பு எடுப்பதை நிறுத்தவில்லை இன்னும் தொடர்கிறது.

ஆனால் இன்று உருவாகும் திரைத்தலைவர்கள் தங்களின் புகழ் வெளிச்சம் மட்டுமே இந்த தமிழ்நாட்டையும் தமிழ் மக்களையும் ஆண்டு விட போதுமானது என்று கனவு காண்கிறார்கள்.அவர்களின் ரசிக கூட்டமும் திரையில் பார்த்த கற்பனை காட்சி பிம்பங்களை நிஜமான நம்பி தன் தலைவனை கடவுள் போல் பாவித்து எந்த கவலையும் இல்லாமல் தான்தோன்றித்தனமாக இருக்கக்கூடிய ஒரு கட்டுப்பாடற்ற போதைமனநிலையுள்ள ஒரு கூட்டம்.இவர்களுக்கு பெரும் கொண்டாட்ட மன நிலையும் உற்சாகமும் மட்டுமே முக்கியம். அதற்காக எத்தகைய அழிவை ஏற்படுத்துவதற்க்கும் ஆபத்தை எதிர் கொள்வதற்கும் தயாராகிறார்கள். ஏனெனில் இந்த கும்பல், சமூகப் போராட்டங்கள் அறிவார்ந்த செயல்பாடுகள்,விவாதங்கள் கல்வி போன்றவற்றால் உருவாக்கப்பட்ட கூட்டம் அல்ல.

இவர்களை கட்டுப்படுத்த வேண்டிய தலைவனும் இந்த கும்பல் போதையில் மிதக்கிறார் இந்த கட்டுப்பாடற்ற கூட்டம் தனக்காகவே பிறந்திருப்பது போன்றும் தனக்காகவே படைக்கப்பட்டிருக்கிறது என்றும் நினைத்துக் கொண்டு அந்த புகழ் போதையில் இரக்கமற்ற மனிதராக திகழ்கிறார்.இதனால் இவரையும் இவரது தொண்டர்களளையும் அச்சத்துடன் பார்க்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.தமிழ்நாட்டில் இதுவரை இவர்களின் கடந்த்த கால செயல்கள் அதன் விளைவுகள் தமிழ் நாட்டை அச்சம் கொள்ள செய்கிறது.

இவர்களால், சமீப காலமாக தமிழ்நாடு மக்களும் சந்தித்திருக்கும் பிரச்சினை என்பது மிக ஆபத்தான சூழ்நிலையை நாட்டிற்கும் மக்களுக்கும் ஏற்படுத்தி விடுமோ என்ற பெரும் பயத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த கும்பலின் நாற்காலி ஆசை என்பது அவர்களுடையது மட்டுமல்ல, இவர்களை கட்டுப்பாட்டில் வைத்துள்ள பாசிச சனாதான சித்தாந்த வெறியர்களாள் கட்டமைக்கப்பட்டுள்ள ஆசைதான் இது.

இவர்கள்தான் அவர்களை மறைமுகமாக தூண்டி ரசிக வெறியை தூபம் மிட்டு இருக்கும் ஆட்சியாளர்களுக்கு பிரச்சனையை ஏற்படுத்தி, அவர்களை பற்றி மக்களிடம் திரிக்கப்பட்ட அல்லது உண்டாக்கப்பட்ட வதந்திகளை பரப்பி ஆட்சியாளர்களுக்கு எதிரான மனோபாவத்தை ஏற்படுத்தி எப்படி எனும் நாற்காலியை பிடித்து விட வேண்டும் என்று துடிக்கிறார்கள்.ரசிகபோதையில் அவர்களை அட்டுவித்து காரியம் சாதிக்க துடிக்கறார்ள்.
அதீத போதை ஒன்று வடிந்து விடும் அல்லது முடிந்து விடும். ஒரு காலகட்டத்தில் ரசிகனுக்கு அது சலித்து விடும் அல்லது அதுவே அவர்களை அழித்தும் விடலாம். சலிக்கின்ற போது அவர்கள் அவரை விட்டு விடலாம்.அதீத உற்சாகம் அளவுக்கு அதிகமான போதை என்றும் நிரந்தரமானது அல்ல.

கவலை என்பது விஜய் பற்றியோ அவரது ரசிகர்களைப் பற்றியதோ அல்ல. அவர்கள் ஒரு காலகட்டத்தில் ஒடுங்கி விடுவார்கள் அல்லது ஒடுக்கப்பட்டு விடுவார்கள். ஆனால் இன்று அவர்களை கையில் எடுத்திருக்கும் இந்த நாசிச சக்தி தமிழகத்திற்கு கேடானது நாம் கவலைப்பட வேண்டியதும் கட்டுப்படுத்த வேண்டியதும் அவர்களைத்தான். ஏனெனில் இவர்கள் இன்று விஜய் நாளை அஜய் அடுத்த நாள் வேறொருவர் என்று ஆட்களை மாற்றிக்கொண்டு இதே நாசகர வேலைகளை செய்துக் கொண்டேயிருப்பார்கள்.

இதை நிகழ்த்த இந்த சித்தாந்த எதிரிகளுக்கும் ஆட்சி அதிகார வெறியர்களுக்கும் துணையாக நிற்பது அறம் என்பது கிஞ்சித்தும் இல்லாத பத்திரிக்கையாளர்களும் இன்னும் இந்த நாட்டின் அதிகாரத்திலிருக்கும் சிலரும்தான். இவர்களின் துணையோடு இவர்கள் பரப்புகின்ற பொய்களும் கட்டவிழ்த்து விடக் கூடிய வதந்திகளும் மிக பேராபத்தை ஏற்படுத்தக் கூடியவை. இன்று நாம் எதிர்கொண்டிருக்கும் இந்த விடயம் முன் எப்போதும் இல்லாத ஒரு புதுவித பிரச்சனை.

தமிழ்நாட்டின் அரசியல் பாரம்பரியம் என்பது,பல சித்தாந்த போர்களை நிகழ்த்தி,அதில் வெற்றி பெற்று சர்வாதிகார ஆட்சியாளர்களை கடந்து இன்னும் ஜாதிய வர்க்க வேறுபாட்டாளர்களை கட்டுப்படுத்தி நிற்பது.

ஆனால், இன்று ஏற்பட்டுள்ள இந்த அச்சுறுத்தல் திமுகவிற்கும்,அதன் அரசியலுக்கும் மட்டும் விடப்பட்ட சவால் அல்ல. இது இந்த நாட்டிற்க்கும் தமிழ் சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கும் பேராபத்து.

இதை இந்த சமூகம் தனது பிரச்சினையாக எதிர்கொள்ள தவறினால் ஒரு கட்டுப்பாடற்ற கருணையற்ற கூட்டத்திடம் இந்த தமிழ்நாட்டின் எதிர்காலம் அகப்பட்டு விடக்கூடும்.

அதன் அபாயம் எப்படி இருக்கும் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
அந்தக் கூட்டம் தார்மீக பொறுப்பற்றவர்கள்,தற்குறிகள், மனிதநேயம் வடிந்து போனவர்கள் இவர்களிடம் இந்த நாட்டை ஆளும் பொறுப்பை ஒப்படைத்தால் நாட்டு மக்கள் நிலை என்ன ஆகும்?

திராவிட இயக்கவாதிகளான நம் பொறுப்பு இந்த கும்பலை பற்றி வெளிச்சம் போட்டு காட்டுவதும், இவர்களை மக்களிடத்தில் கொண்டு செல்வதும்தான்.

இவர்களை நாம் விளையாட்டாக எடுத்துக் கொள்ளாமல் தீவிரமாக கண்காணித்து அவர்களின் இயக்கமுறை,பிரச்சாரம்,செயல்படு போன்றவற்றை ஆராய்ந்து அதற்கான பதிலடி உடனடியாக செய்யப்பட வேண்டும் இல்லாவிட்டால் தமிழ்நாட்டில் சீரிய அரசியல் செம்மைக்கு பங்கம் உண்டாகி விடும்.இது நாட்டிற்கு நமது திராவிட அரசியலுக்கும் ஆபத்தானதாக முடிந்துவிடும்.

- ஹாஜா பின் பாவா

When Corporate Vision Meets Political Virtue – Prem Murugan

Introduction

In today's interconnected world, the boundaries between the corporate boardroom and the political assembly are increasingly blurred. Corporations are judged not only by their profits but also by their ethics, inclusivity, and social contribution. Likewise, political parties are assessed not merely by their electoral victories but by how they uphold democracy, integrity, and public trust. While one sector strives for innovation and financial growth, the other pursues policy and public welfare. Yet, lower than these distinctions lies a remarkable similarity — both operate through a framework of purpose, values, and discipline.

In corporate management, the guiding trinity is **Vision–Mission–Objectives (VMO)**; in politics and public life, the moral foundation rests on **Duty–Dignity–Discipline (DDD)**. When viewed side by side, they form a powerful synergy that unites strategy with morality, and efficiency with empathy.
This article attempts a comparative analysis to highlight synergistic aspects of political leadership and ideology, focusing on how Mr. C. N. Annadurai (Founder of the Dravidian Progressive Front, later Dravida Munnetra Kazhagam, and former Chief Minister of Tamil Nadu) established the 3D principles as core values for the party and its cadres over half a century ago. In the context of engaging young people in politics, this study aims to illustrate how these values guided party members and set them on the right path. Furthermore, considering that the last two generations have been fully exposed to corporate culture, I draw parallels between these historical principles and contemporary models such as VMO and DDD.

CN Annadurai's Perspective: The Politics of Purpose and People

C. N. Annadurai, affectionately known as Anna, offers a profound Indian perspective on the philosophy of leadership. As the founding leader of the Dravidian Progressive Front and a visionary Chief Minister of Tamil Nadu, Anna harmonized moral virtue with administrative vision, demonstrating that governance and professional principles can coexist when rooted in the welfare of the people. His emphasis on the 3D principles guided party cadres across the state, shaping them into what he termed "professionals in politics." From the perspective of the common person, professional ethics and politics are often seen as contrasting spheres. However, for a rationalist like Anna, they are complementary values that every human should uphold.

Anna's synthesis of rational thought, cultural pride, and ethical duty parallels the triad this article explores. Just as the corporate world measures success through innovation and productivity, Anna reminds us that political virtue must measure success through inclusion, equity, and empowerment.

Vision and Duty: The Power of Purpose

Every enduring enterprise begins with a **VISION** — a clear, aspiring image of the future. Vision gives life meaning; it aligns the organization's energy and defines its reason for existence. As Peter Drucker (1954) observed, "Vision is the compass that defines the future course of an enterprise." It is not about what the organization is today, but what it aspires to become tomorrow.

In politics, **DUTY** serves the same function. It is the unwavering sense of responsibility toward the people and the nation. For a political leader, duty is not merely a task; it is a moral obligation. Mahatma Gandhi believed that "service without duty is ambition, not leadership." Duty demands selflessness, reminding leaders that the ultimate purpose of governance is service, not power.

When corporations operate with a vision rooted in social responsibility, and when political institutions fulfill their duties with foresight and sincerity, both transform from mere systems of control into instruments of collective progress.

Anna believed that duty to the people is the highest form of service. He often said, *"A ruler is not a master, but the servant of the people."* This resonates directly with the idea of **Duty as Vision** — governance that sees beyond power to the moral obligation of upliftment. Considering the vision as torch bearing, that passes on to various leaders and today the vision (Duty) is strongly hold by the current Chief Minister Hon'bl. MK Stalin Avl. In essence, **Vision defines the 'why,' and Duty defines the 'must.'** Together, they give institutions, whether commercial or political — a moral compass to navigate the complexities of modern life.

Mission and Dignity: The Ethics of Action

If vision defines where an organization wants to go, the **mission** defines how it will get there. It expresses identity, values, and methods. Collins and Porras, in *Built to Last* (1994), call it "the core ideology that never changes." A mission reflects the company's conscience — the ethics behind its execution.

Similarly, in political life, **dignity** shapes how duty is performed. Dignity ensures that public service is conducted with respect, fairness, and compassion. It transforms political behavior from mere competition to constructive cooperation.

Nelson Mandela embodied this principle. “One’s dignity may be assaulted, vandalized, and cruelly mocked,” he said, “but it can never be taken away unless it is surrendered.” His words remind us that dignity is not about rank but about the grace with which one handles responsibility.

In the same way, a company that upholds human dignity — by treating employees, customers, and communities with respect — practices **corporate morality**. Both Mission and Dignity stand for **values in motion** — the inner strength that defines *how* the purpose is pursued, not just *what* is pursued. Equally, Anna has upheld **dignity** as the foundation of democratic participation. For him, politics was not a privilege of the elite but a dignified arena where every citizen, regardless of caste or class, had a voice. Hence he made a comment as follows.

Dear Brother,
Go to the People,
Live among them,
Learn from them,
Serve them,
Plan with them,
Start with what they know,
Build with what they have…

I will strongly comment that as **Morale or Fundamental Principal for a Politician** (but not limited to). In the corporate era, people often comments about his/her Bosses reminds and a ficitional quote what if Anna writes to the managerial role people in corporate era,

Dear Manager,
Read the industry,
Understand the market,
Talk with your team,
Mutually learn together,
Plan with them,
Start with what they know,
Build together what market wants,
Attain the Success!!!

Objectives and Discipline: The Framework of Action

In management, **objectives** translate vision and mission into measurable results. They are concrete, time-bound goals that bring strategy to life. Without clear objectives, even the grandest vision remains a dream. Henry Mintzberg once wrote that objectives are “the bridge between dreams and deeds.”

In political life, the equivalent force is **discipline**. Discipline ensures coherence, unity, and focus within an organization. It aligns individual actions with collective purpose. A political movement, however noble, cannot succeed without order and accountability.

Dr. Kalam beautifully captured this truth: “Great missions are achieved only through disciplined minds.” Whether it is a scientific mission or a social reform, discipline provides the structure through which ideas turn into impact.

Anna valued discipline not as rigidity, but as self-restraint in service of the collective good. Under his leadership, the movement practiced organizational discipline that enabled it to convert ideology into governance. This discipline made his cadres to deal with empathy not just simply react emotionally by trigger agony, pain and angry. His administrative reforms from free education to public accountability reflected **objectives executed through disciplined governance.** In both spheres, objectives and discipline serve as the frameworks of execution - converting moral intention into measurable transformation.

When leaders and employees uphold dignity, mutual respect and fairness flourish, creating a culture where objectives can be pursued with integrity and cooperation. At the same time, ambitious goals test this dignity, revealing an organization’s true character when it achieves results without compromising ethical or human values. Limitations serve as necessary guardrails, ensuring that dignity is not sacrificed in the pursuit of objectives—preventing overwork, discrimination, or unethical shortcuts. Together, dignity defines how we act, objectives define what we strive for, and limitations define how far we may go, forming a balanced triangle of value, vision, and virtue that sustains both people and purpose.

The Triadic Harmony: Duty, Dignity, and Discipline

The convergence of these leaders' philosophies underscores the importance of a triadic harmony in leadership:

- **Duty**: Providing direction to action, ensuring that leadership is purpose-driven and focused on the welfare of the people.
- **Dignity**: Infusing depth into the mission, ensuring that policies and actions respect the rights and aspirations of all citizens.
- **Discipline**: Giving life to objectives, ensuring that goals are achieved through structured and ethical means.

Both the Corporate and Political systems rely on the alignment of **purpose, values, and performance**. A corporation without ethics risks exploitation; a political party without dignity risks authoritarianism. But when both embrace their moral core; they become instruments of human advancement.

Why This Connection Matters Today

In today's Tamil Nadu, the boundaries between politics, governance, and social responsibility are increasingly intertwined. Political leaders are expected to act with efficiency, transparency, and accountability, while the citizenry—especially the youth—demands ethical, value-driven action. The recent Karur stampede is a stark reminder that leadership must prioritize human life, dignity, and social welfare above all else. C.K. Prahalad's concept of "*inclusive capitalism*" and Amartya Sen's "*development as freedom*" remind us that progress is only meaningful when it benefits everyone. Similarly, Anna's politics of self-respect, ethical duty, and public service emphasized that true leadership is measured not by power or position, but by the welfare of the people and the dignity of labor.

For young people entering the political arena, this moment is a call to action: to be leaders who are both valued and value-driven. In a state rich with political heritage, the challenge is to cultivate a generation that upholds integrity, compassion, and civic responsibility—ensuring that Tamil Nadu's political life is not only vibrant but also ethically grounded.

The Road Ahead: Toward Ethical Political Leadership

Political leadership is more than holding office or managing public events—it is a solemn commitment to the welfare, safety, and dignity of the people. The tragic Karur stampede reminds us how quickly disorder and negligence can turn a public gathering into a catastrophe, costing lives and undermining trust in political institutions. Such events demand not only foresight and organization from leaders but also responsibility and awareness from every individual in the crowd.

Anna's philosophy provides enduring guidance in this context. Through his 3D principles he demonstrated that politics can be a profession of moral purpose rather than mere power. Duty gives direction to action, ensuring that every political initiative serves the people's welfare. Dignity ensures that service is rooted in respect for human life, labor, and cultural identity. Discipline brings coherence and order, transforming ideals into effective, actionable governance. His 3D approach to leadership effectively guided party cadres during pivotal movements such as the Anti-Hindi Agitation, drought relief campaigns, and the abolition of the Kula Kalvi (hereditary education) Scheme—movements that arose in response to entrenched Brahminical hegemony. These movements achieved enormous success due to patience and disciplined action. Anna and his chief disciples, many of whom were renowned literary figures and orators, traveled extensively across villages and towns to understand local conditions and conduct public gatherings that educated and empowered the common people. They spoke about their ideology, vision, and the mission of the party without

criticizing the ruling or dominant parties. This approach clearly demonstrates that the Dravidian Progressive Front (DPF) what media actually titled as DMK, sought to empower people by addressing their needs rather than spreading propaganda rooted in hatred.

Leaders must internalize these values, structuring political life around careful planning, ethical decision-making, and a genuine concern for citizens' wellbeing. Public gatherings and rallies, while vital to democracy, must be meticulously managed, prioritizing safety, accessibility, and transparency. Equally, citizens have a critical role: remaining vigilant, following instructions, and cultivating awareness in crowded spaces. Ethical political life is a shared responsibility, where both leadership and citizenry act with foresight, care, and accountability.

For the youth entering Tamil Nadu's political arena, this moment is a call to embody values over popularity, principle over spectacle. A generation shaped by integrity, empathy, and responsibility can transform politics from a contest of influence into a forum of trust, progress, and dignity. In this balance—between visionary leadership and conscientious citizenship—lies the hope for a political culture that honors life, uplifts society, and ensures that public service remains a calling, not merely a career.

His preceders Kalaignar M. Karunanidhi and Puratchi Thalaivar MG Ramachandran, continued the legacy of ethical leadership that ensures governance was inclusive and characterized by a deep sympathize, empathize for the common people respectively. Currently, the current Chief Minister of Tamil Nadu Thiru. M.K. Stalin Avl., encourages public participation in decision-making processes by ensuring that the voices of the people are heard and their needs addressed.

A Call to Action for the Youth

For the youth of Tamil Nadu, this legacy of ethical leadership serves as a beacon. This ethical leadership of Regional Party has conquered the state when the entire country is ruled by a National Party and their ally. This leadership has defeated a Zamindari King by a Horse Carter. The entire victory has been claimed by the youngsters who were layman not by the elders whom were settled. The leadership has motivated to be a 24*7 fellow for the people and to be in the ground, not a weekend or hybrid mode politics.

In a time when political discourse can often be divisive and self-serving, the principles of Duty, Dignity, and Discipline offer a path forward. Young individuals are called to engage in politics not for personal gain but to serve the community, uphold justice, and work towards an inclusive society.

Winding up, the ethical political leadership exemplified by Anna provides a roadmap for future leaders not today but ever in Tamilnadu Politics. By adhering to the principles of Duty, Dignity, and Discipline, political leadership can become a transformative force, fostering a society that values integrity, justice, and the collective good.

References

- Annadurai, C.N. (1963). *Valimai Tharum Arasiyal (Politics That Empowers).*
- Collins, J., & Porras, J. (1994). *Built to Last: Successful Habits of Visionary Companies.*
- Drucker, P. F. (1954). *The Practice of Management.*
- Mandela, N. (1994). *Long Walk to Freedom.*
- Samas (Ed.). (2019). **Māperum Tamiḻk kaṉavu** (Great Tamil Dream).
- Sen, A. (1999). *Development as Freedom.*

வைப் கலாச்சாரம்தான் இந்த வைப்ரேஷனுக்கு காரணம் - ராஜா ராஜேந்திரன்

1.) குறுகலான இடத்தைத் தந்தார்கள்.

2.) போதுமான பாதுகாப்பு இல்லை (காவலர்கள் குறைவு)

3.) மின்சாரத்தை வேண்டுமென்றே அணைத்ததுதான் தவறு !

மேற்கண்ட குற்றச்சாட்டுகள் தவெக மற்றும் அவர்களுடைய குபீர் ஆதரவாளர்களால் வைக்கப்படுபவை. உணர்ச்சிக் கொந்தளிப்பில் அவர்கள் இப்படித்தான் வாந்தி எடுப்பார்கள்.

நான் நியுஸ் தமிழ் 24 × 7 லைவ் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் விஜய் பேருந்து உள்ளே வந்து நிலைகொள்ளும் முன்பே நெல்சன் வழங்கிக் கொண்டிருந்த நேரலை விமர்சனம் ஓடிக்கொண்டிருந்தது !

மிக மிக நெரிசல் கொண்ட அந்த இறுக்கமான கூட்டத்தில் பலர் குழந்தைகளுடன் நின்றுக் கொண்டிருந்ததை கேமராமேன் காட்டிக் கொண்டே இருந்தார். தோளிலிருந்து அந்தக் குழந்தை சரிந்தால் முதலில் அது தரையில் விழாமல் வேறு யாரோ தோளின் மீதுதான் விழும். அவ்வளவு நெரிசல். ஒருவேளை விழுந்து அந்தக் குழந்தை தரையைத் தொட்டால், நம்புங்கள், அந்தக் குழந்தையின் தந்தை குனிந்து அந்தக் குழந்தையைத் தூக்கவே முடியாது!

சரி. இப்படி ஒரு கூட்டத்திற்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமானால் போலிஸ் என்ன செய்யும் ? 100 பேர் நிற்க வேண்டிய இடத்தில் 200 பேர் நின்றிருந்தால், அதற்கு மேல் அங்கு யாரும் கூடவிடாமல் தடுப்பார்கள். நீ தடுத்தா என்ன சொல்வ ? என்ன பயந்துட்டியா சி எம் அங்கிள்ன்னு கேப்பல்ல ?

10000 பேர் வருவார்கள் என்று சொன்னதால 500 காவலர்களை பாதுகாப்புக்கு நியமித்திருக்கிறார்கள். நேரம் மாலை 3 மணி என்று ஃபிக்ஸ் செய்யப்பட்டிருக்கு. விஜய் பிரத்யேகமாக நண்பகல் 12 க்கே கரூர் வருவதாகப் பதிவிடுகிறார். எனவே கூட்டம் காலை எட்டு மணியிலிருந்தே எங்கெங்கிருந்தோ இருந்து குவிய ஆரம்பித்துள்ளது. மாலை ஏழு மணி அளவில் விஜய் அங்கு வந்தபோது 10000 மும்மடங்கிற்கும் மேலாகி விட்டது !

காவல்துறை தாமே 500 ஐ 5000 என உயர்த்திவிட முடியாது. அதற்கான முன்னேற்பாடுகள் இல்லாமல் எங்கிருந்தும் அவ்வளவு காவலர்களை கொண்டு வந்து குவிக்க முடியாது. எனில், கூட்டத்தை திரட்டியவர்கள்தான் காவலர்களுக்கு இணையாக பாதுகாப்பு வாலண்டியர்களை நியமித்திருக்க வேண்டும். மெரினாவில் ஜல்லிக்கட்டு போராட்டம் நிகழ்ந்தபோது, கல்லூரி மாணவர்கள், போராளிகளே வாலண்டியர்களாக பணியாற்றினர். அவர்கள் போக்குவரத்து, நெரிசல் ஏற்படாத நெறிமுறைகளை காவல்துறை அதிகாரிகளின் யோசனைக்கேற்ப செய்தனர். காவலர்களுக்கு வேலை இலகுவானது. அத்தோடு அவர்கள் நிற்கவில்லை. தூய்மை பணியாளர்களாகவும் செயல்பட்டனர். ஒரு குப்பை கீழே விழுந்தாலும் அதை உடனடியாக அகற்றினார்கள். கூட்டத்தில் யாரேனும் காணாமல் போனால் முறையான தொடர்பு வசதிகளுடனான கண்காணிப்பு அமைப்புகளை ஏற்படுத்தினார்கள் ! நீங்களே சொல்லுங்க. த வெ க ஒரு கூட்டம் நடந்து முடிஞ்சி போனா அந்த இடம் ஏன் போர்க்களம் போல

அத்தனை செருப்புகள், கொடிகள், குப்பைகளுடன் உள்ளது ? யார் அதை அகற்ற வேண்டும் ? ஏன் அவர்கள் நின்ற இடத்தின் அத்தனை கடை, வீடுகள், கோயில் உட்பட அனைத்தும் சேதமாகின்றன ? ஒரு கூரையாவது அவர்கள் கடந்தபின் மேலே நிற்குமா ? பாகுபலியில் காளகேய கூட்டத்துக்குச் சொல்லப்படும் உவமைகளை விஞ்சி அல்லவா இந்தத் தற்குறிகள் கடந்த இடத்தின் நிலை உள்ளது ?

நெல்சன் அந்த நெரிசலை பேசிக்கொண்டிருந்த போதே கேமரா கோணம் ஒரு மின்கம்பத்தைக் காட்டுகிறது. மேலே ஏழெட்டு இளைஞர்கள் ஏறிக் கொண்டிருந்தனர். அய்யோ கரண்ட் இருக்கே என்று இங்கிருந்து பதறுகிறார் நெல்சன். ஆனால் அங்கு யாருக்கும் எந்தப் பதட்டமும் இல்லை.

மேலே நூத்துக்கணக்கான வயர் போது, எதுல மின்சாரம் வரும்ன்னு எப்படி தெரியும் ? இவர்களையெல்லாம் கண்ட்ரோல் பண்ண யாருமில்லையா என்று நாமடையும் பதற்றம் அங்கு வேறாருக்கும் இல்லை. காவலர்கள் நெரிசலைப் பார்ப்பார்களா ? ஏறும் இவர்களைத் தடுப்பார்களா ?

இங்கதான் ஒரு ஆவணக் காட்சி.
விஜய் பேருந்து அங்கு வந்து நிலைத்து பேச ஆரம்பித்த பொழுதே மூன்று ஆம்புலன்ஸ்கள் அங்கிருந்து பாதிக்கப்பட்டவர்களைச் சுமந்து மருத்துவமனைக்கு விரைய எத்தனிக்கிறது. பேருந்தைச் சூழ்ந்து நின்ற எவனும் வழிவிடவில்லை. விஜய் சொன்ன பிறகே வழிவிட்டனர். நல்லவேளை, இவனும் எடப்பாடி, சீமானைப் போல உளறவில்லை. ஆனால் இவன்கள் அடங்கவில்லை. ஏன்னா விஜய்யை பார்க்க வேண்டும், அதுவும் அருகிலிருந்து பார்க்க வேண்டும், முடிந்தால் தொட்டுவிட வேண்டும் என்று இன்னும் நெருக்க, போலிஸ் லேசாக தடியடி நடத்தித்தான் ஆம்புலன்ஸ் நகர வழி கிடைத்தது ! இதையெல்லாம் அறிந்தோ, அறியாமலோ, நிலையின் வீரியம் புரியாமலோ அந்த ஆம்புலன்ஸைப் பார்த்து விஜய் என்ன சொன்னார் தெரியுமா ?
என்னய்யா ஆம்புலன்ஸ்ல நம்ம கொடி இருக்கு ?
நான் சொல்லும் அனைத்தும் காட்சிகளாக பதியப்பட்டுள்ளன.
ஒரு பெண் குழந்தை காணவில்லை என ஆதவ் அர்ஜுன் பதட்டத்துட்டன் விஜய் காதில் சொல்ல, அதில் மைக்கில் சொன்ன விஜய், தன் தொண்டர்களை தேடி தரச் சொல்கிறார். எல்லாம் கண் முன் நிகழ்ந்தவைகள்தான். குறைந்தபட்சம் அவர்களுடைய தலைமை நிர்வாகிகளான ஆதவ், புஸ்ஸி போன்றோர் உடனடியாக களத்திலிறங்கி இன்னும் பல ஆம்புலன்ஸ்களை வர வைத்து ... ப்ச், அதை இப்ப பேசி என்ன ஆகப்போகுது ?

நாங்க கூடும் போது மின்சாரத்தை துண்டிங்க என்று கேட்பதே அவர்கள்தான். பழியை தலைவனே போடும் போது அல்லக்கைகள் போடாதா ?
கரூரே குறுகலாத்தான் இருக்கும். இப்ப இன்னும் குறுகிப்போச்சு என்கிறார் கரூர்வாசி நண்பர் தயாநிதி. இவன்களுக்கு இடத்தையும் choose பண்ணத் தெரியல. அல்லது தேர்ந்தெடுத்து கொடுக்கும் இடம் இன்னும் கூட்ட நெரிசலாகி சாவு விழும்ன்னு அதை போலிஸ் ரிஜக்ட் பண்ணுது. அப்புறம் பல கண்டிஷன்களோடு தருது. எந்தக் கண்டிஷன்களையும் இவன்க கேட்பது இல்லை. குழந்தைகள், முதியோர் கூட்டத்துக்கு வராதீங்கன்னு சொன்னாலும் கண்டுக்கறதில்ல.
ஒரு கொடுந்துயரம் நிகழ்ந்தபின் அரசுதான் காரணம்ன்னு சொல்றதுல மட்டும் உஷாரா இருக்காய்ங்க ?

எரியும் நெருப்பில் நெய்யூற்ற வரும் எடப்பாடியார் போன்ற எதிர்கட்சியினரும் பாதுகாப்பு குறைபாடு என்றுதான் கூறுகின்றனர். ஆம்புலன்ஸ்களுக்கு வழிவிடாத முதற்காரணி இவர்தான். இவருக்கெல்லாம் கொஞ்சம் கூட உறுத்தாதா ? கூட்ட நெரிசல் சாவுகளுக்கு புகழ்பெற்ற அரசு அதிமுக அரசுதானே ? அவர் மெரினா விமான சாகச நிகழ்ச்சியிலும் என்று இழுக்கிறார். அதில் இறந்தவர்கள் நெரிசலிலா இறந்தனர் ? தறுதலைகளின் தலைவன் என்று உயிர்மைக்கு கட்டுரை எழுதியுள்ளேன். இன்னும் அச்சேறவில்லை. அதில் இந்தத் தற்குறிகள் செய்யும் அராஜகங்கள், இவர்களால் என்னென்ன நிகழும், ஏன் என்றெல்லாம் விளக்கியுள்ளேன். அதில் GenZ க்களின் வைப் கலாச்சாரம் பற்றியும் எழுதியுள்ளேன். அந்த வைப் கலாச்சாரம்தான் இந்த வைப்ரேஷனுக்கு காரணம் !!!

- ராஜா ராஜேந்திரன்

வாசிப்பு பழக்கம் இல்லாத, அரசியல் புரிதல் இல்லாத இளம் தலைமுறையை வழிநடத்துவது எப்படி? - லதா. எம்

ஒரு நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக இளம் தலைமுறையினரே இருக்கின்றனர். அறிவுபூர்வமான விழிப்புணர்வு, சமூகத்தின் மீதான பொறுப்புணர்வு ஆகிய இரண்டும் ஒரு குடிமகனுக்கு இன்றியமையாதவை. இந்த விழிப்புணர்வுக்கு வாசிப்புப் பழக்கம் அடித்தளமாகவும், அரசியல் புரிதல் அதன் திசைகாட்டியாகவும் அமைகின்றன. ஆனால், இன்றைய அதிநவீன டிஜிட்டல் உலகில், இளம் தலைமுறையினர் பலர் ஆழமான வாசிப்பிலிருந்தும், அதன் விளைவாக அரசியல் மற்றும் சமூகப் புரிதலிலிருந்தும் விலகி நிற்பது சமுதாயத்திற்கு ஒரு பெரும் சவாலாக உள்ளது. இத்தகைய இளைஞர்களைச் சரியான பாதையில் வழிநடத்தி, பொறுப்புள்ள குடிமக்களாக மாற்றுவதற்கு ஒரு விரிவான மற்றும் நுட்பமான அணுகுமுறை தேவைப்படுகிறது.

இளம் தலைமுறையினரின் வாசிப்புப் பழக்கம் குறைவதற்கு முதன்மையான காரணம், ஸ்மார்ட்போன்கள் மற்றும் சமூக ஊடகங்களின் ஆதிக்கம் திரைகளில் செலவிடும் அதிக நேரம், இவர்களை விரைவான தகவல்களுக்குப் பழக்கிவிட்டது. ஒரு முழுப் புத்தகத்தையோ, ஒரு நீண்ட கட்டுரையையோ படிப்பதற்குத் தேவையான பொறுமையோ, கவன ஒருமைப்பாடோ அவர்களிடம் இருப்பதில்லை. தகவல்களைத் துண்டுகளாகவும், எளிதில் ஜீரணிக்கக் கூடிய வடிவத்திலும் மட்டுமே உட்கொள்ள அவர்கள் பழகிவிட்டனர். மேலும், வாசிப்பு என்பது ஒரு சுகமான பொழுதுபோக்கு என்பதிலிருந்து விலகி, தேர்வுக்கான சுமையாகவோ அல்லது பழங்காலப் பழக்கமாகவோ அவர்கள் மனதில் பதிந்துவிட்டது. இந்த டிஜிட்டல் சூழல்தான், அவர்களுக்கு வாசிப்பின் அவசியத்தை உணர்த்துவதை மிகக் கடினமாக்கியுள்ளது.

வாசிப்புப் பழக்கம் இல்லாததால், ஒரு நாட்டின் வரலாறு, தத்துவம், பொருளாதாரம் மற்றும் அரசியல் கோட்பாடுகள் குறித்த ஆழமான புரிதலும் இல்லாமல் போகிறது. இதனால்தான், இளைஞர்கள் அரசியலில் ஆர்வம் காட்டுவதில்லை. இன்றைய அரசியல்வாதிகள் மீதான சலிப்பு, ஊழல் குறித்த பொதுவான கருத்து போன்றவை சேர்ந்து, 'அரசியல் ஒரு சாக்கடை' என்ற எண்ணத்தை இளைஞர்கள் மத்தியில் வலுப்படுத்தியுள்ளது.

அரசியல் புரிதல் இன்மையின் மிக அபாயகரமான விளைவு, அவர்கள் தவறான அரசியல் முடிவுகளை எடுப்பதாகும். தேர்தல் நேரத்தில் பணத்துக்காகவோ, சமூக ஊடகங்களில் பரவும் பொய்ச் செய்திகளை நம்பியோ வாக்களிக்கும் நிலை உருவாகிறது. தங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுக்கும், நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் அரசியல் முடிவுகளே அடிப்படை என்பதை அவர்கள் உணராமல் போகிறார்கள். இதனால், ஜனநாயகத்தின் உயிர் நாடியான இளைஞர்கள், தங்கள் உரிமையையும் கடமையையும் முறையாகச் செலுத்தத் தவறிவிடுகிறார்கள்.

இளம் தலைமுறையினரை வழிநடத்த நாம் முதலில் செய்ய வேண்டியது, வாசிப்பை ஒரு தண்டனையாகக் காட்டாமல், ஆர்வமூட்டும் அனுபவமாக அவர்களுக்கு மீண்டும் அறிமுகப்படுத்துவதுதான்.

அவர்களுக்குப் பிடித்தமான பொழுதுபோக்குகள் (சினிமா, விளையாட்டு), அறிவியல், சாகசக் கதைகள் அல்லது புனைவுகள் ஆகியவற்றில் உள்ள குறுகிய, இலகுவான வாசிப்புப் பொருட்களுடன் ஆரம்பிக்க வேண்டும். வாசிப்பு என்பது ஒரு சாளரம்; அது அவர்கள் ஆர்வமுள்ள உலகைத் திறந்து காட்டும் என்பதை உணர வைக்க வேண்டும்.
நவீன வடிவங்களைப் பயன்படுத்துதல்: இ-புத்தகங்கள், ஆடியோ புத்தகங்கள் மற்றும் தரமான டிஜிட்டல் இதழ்களை ஊக்குவிக்கலாம். தொழில் நுட்பத்தை வெறுக்காமல், அதையே வாசிப்பின் கருவியாக மாற்றுவதன் மூலம், அவர்கள் தங்கள் அன்றாடப் பழக்கத்திலிருந்து விலகாமல் வாசிப்புக்குள் நுழைய முடியும்
முன்மாதிரிகளை உருவாக்குதல்: பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மூத்தவர்கள் தாங்களே புத்தகம் வாசிப்பதைப் பழக்கப்படுத்திக் கொண்டு, அதை ஒரு குடும்ப அல்லது சமூகச் செயல் போலக் காட்ட வேண்டும். நீங்கள் வாசிப்பதைப் பார்த்தால், அவர்களுக்கும் வாசிக்கும் ஆர்வம் இயல்பாகவே உண்டாகும்.

விவாதக் குழுக்கள்:ஒரு புத்தகத்தை அல்லது கட்டுரையைப் படித்தபின், அதைப் பற்றி நண்பர்களுடன் விவாதிக்கும் "புத்தகக் குழுக்களை" (Book Clubs) உருவாக்கலாம். இது வாசிப்பை ஒரு சமூக நடவடிக்கையாகவும், தகவல் தொடர்பை மேம்படுத்தும் தளமாகவும் மாற்றும்.

அரசியல் என்பது ஆட்சியாளர்கள் குறித்ததல்ல, ஒரு குடிமகனின் சக்தி குறித்ததாக அவர்களுக்குப் புரியவைக்க வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகள் எடுக்கும் முடிவுகள், சாலைப் போக்குவரத்து, கல்விக்கான நிதி, அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு என அனைத்தும் அரசியல் சார்ந்த முடிவுகள்தான் என்பதை நிஜ உதாரணங்களுடன் விளக்க வேண்டும். "நான் ஏன் வாக்களிக்க வேண்டும்?" என்ற கேள்விக்குப் பதிலாக, "என் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த நான் ஏன் முடிவெடுக்க வேண்டும்?" என்ற கோணத்தில் சிந்திக்க வைக்க வேண்டும்.
விமர்சனச் சிந்தனையை வளர்த்தல்: சமூக ஊடகங்களில் வரும் ஒரு செய்தி அல்லது அரசியல் பரப்புரையின் உண்மைத்தன்மையை ஆராய அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். ஒரு தலைவரின் பேச்சை மட்டும் நம்பாமல், அதற்கான புள்ளிவிவரங்கள், மாற்றுப் பார்வைகள் ஆகியவற்றையும் தேடிப் படிக்க ஊக்குவிக்க வேண்டும். இதுவே விமர்சனப் பகுப்பாய்வு (Critical Analysis திறனின் அடித்தளம்.

பள்ளித் தேர்தல்கள், இளைஞர் மாநாடுகள், அல்லது பொது மக்கள் குறைகேட்கும் கூட்டங்களில் பங்கேற்க அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். சிறிய அளவில் கூட தங்கள் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் முன்வைக்கப் பழக்குவதன் மூலம், அரசியல் என்பது வெறும் அதிகாரவர்க்கம் அல்ல, அது மக்கள் பங்கேற்புக்கான தளம் என்பதை உணர்வார்கள்.
வரலாற்றின் வழிகாட்டுதல் நாட்டின் சுதந்திரப் போராட்டம், அரசியல் தலைவர்களின் தியாகங்கள், உலகளாவிய போராட்டங்கள் ஆகியவை குறித்த புத்தகங்களைப் படிக்கக் கொடுத்து, ஒரு தேசத்தை உருவாக்குவதில் விழிப்புணர்வுள்ள இளைஞர்களின் பங்கு எவ்வளவு முக்கியம் என்பதை உணர்த்த வேண்டும்.

வாசிப்புப் பழக்கம் இல்லாத, அரசியல் புரிதல் அற்ற இளம் தலைமுறையினரை வழிநடத்துவது என்பது, அவர்களது உலகைத் திறக்க உதவும் சாவியைத் தருவதாகும். நாம் அவர்களை வெறுமனே குறை கூறுவதற்குப் பதிலாக, அவர்களுக்குப் பொறுமையுடன் வழிகாட்ட வேண்டும். வாசிப்பின் மூலம் பெற்ற அறிவாற்றலையும், விமர்சனப் பகுப்பாய்வுத் திறனையும் கொண்டு, அவர்கள் அரசியல் சூழலைப் புரிந்து கொள்வார்கள். அப்போதுதான், அவர்கள் தனிப்பட்ட வாழ்க்கைக்கும், சமூகத்துக்கும் தேவையான சரியான முடிவுகளை எடுக்கும் ஆற்றல்மிக்க குடிமக்களாக உருவெடுப்பார்கள். வாசிக்கும், சிந்திக்கும், விவாதிக்கும் இளம் தலைமுறையைக் கட்டியெழுப்புவதே ஒரு வலிமையான தேசத்தின் அடித்தளம் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து செயல்பட வேண்டும்.

ஜென் Z தலைமுறையின் மனநிலையை புரிந்து கொள்வது எப்படி? - ஜெ.வெ.நவீன்

ஜென் Z தலைமுறை என்றால் என்ன?

இதற்கு பல்வேறு விளக்கங்கள் கூறப்பட்டாலும் அடிப்படையில் 2000ம ஆண்டிற்குப் பிறகு பிறந்தவர்கள், தற்போது 18ல் இருந்து 25 வயதிற்குள் உள்ளவர்கள் என நாம் எடுத்துக் கொள்ளலாம். குறிப்பாக, பள்ளி அல்லது கல்லூரி படிப்பில் இருப்பவர்கள், அல்லது வேலை தேடிக் கொண்டிருப்பவர்கள் எனக் கொள்ளலாம்.
மொத்தமாகச் சொன்னால் தங்கள் சொந்தக்காலில் இன்னும் நிற்கத் தொடங்காதவர்கள், தாங்கள் வேலை செய்தால் தான் குடும்பம் நடக்கும் என்ற நிலையில் இல்லாதவர்கள் என்ற இடத்திலிருந்து இவர்களை நாம் புரிந்து கொள்ளலாம்.

ஜென் சி மீதான விமர்சனங்கள்

இந்த ஜென் Z தலைமுறையின் மனநிலை குறித்து பல்வேறு விமர்சனங்கள் கூறப்படுகின்றன, குறிப்பாக சோம்பேறிகள், சுயநலவாதிகள், தங்களைத் தவிர வேறு எதைப் பற்றியும் பொருட்படுத்தாதவர்கள், தன்னைச் சுற்றி சமூகத்தில் என்ன நடக்கிறது என்பதை உணராதவர்கள், அதைப் பற்றி கருத்து இல்லாதவர்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த விமர்சனத்தை சொல்பவர்கள் யார் என்று பார்த்தால் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள், ஜென் சி யின் மொழியிலேயே சொல்வதானால் பூமர் தலைமுறையினரால் இந்த கருத்து சொல்லப்படுகிறது.

இது உண்மையா என்று பார்த்தோமானால் இளைய தலைமுறைகளுடன் தினசரி நெருங்கி பழகும் வாய்ப்பு எனக்கு கிடைக்கிறது என்பதை வைத்து நான் இவர்களில் இருநிலைகளைப் பார்க்கிறேன். ஆங்கிலத்தில் dichotomy என்று சொல்வார்கள். ஒரு பக்கம் பார்த்தோமானால் ஸ்விக்கி, சொமேட்டோ, ராப்பிடோ எனப் பகுதி நேர வேலை செய்து கொண்டு அந்த பணத்திலிருந்து கல்லூரிக் கட்டணம் செலுத்தி சொந்த உழைப்பில் படிக்கும் ஒரு தலைமுறையையும் பார்க்க முடிகிறது. அதே நேரத்தில் தங்களின் பெற்றோரின் நிழலில் வாழ்ந்து கொண்டு 2.5 லட்சம் மதிப்புள்ள லேட்டஸ்ட் மாடல் பைக் வாங்கி கொடுத்தால் தான் கல்லூரிக்கு செல்வேன், இல்லையென்றால் படிக்க மாட்டேன் என அடம் பிடிக்கும் இன்னொரு கூட்டத்தையும் நாம் பார்க்க முடிகிறது. தான் கல்லூரிக்கு வந்தது போதாதென்று மிச்சமிருக்கும் நேரத்தில் சமூக சேவை செய்வது, பிறருக்கு பகுதி நேர வகுப்பு எடுப்பது, குறிப்பாக விளிம்பு நிலை மக்களுக்கு தன்னாலான உதவிகளை செய்வது எனச் சமூக சேவை செய்யக்கூடிய இளைஞர்கள் ஒரு பக்கம் என்றால், 24 மணி நேரமும் ரீல்சிலும், வீடியோ கேம்களிலும் மூழ்கிக் கிடப்பவர்களையும் பார்க்க முடிகிறது.

ஜென்சி தலைமுறையின் மேல் சொல்லப்படும் இன்னொரு விமர்சனம் அவர்கள் சமூக ஊடகங்களுக்குள் மூழ்கிப் போய் இருக்கிறார்கள், அதன் கவர்ச்சிக்கு முழுமையாக ஆட்பட்டிருக்கிறார்கள் என்பது. இதை நான் ஓரளவு உண்மை என்றே சொல்வேன். தங்களுடைய இன்ஸ்டாகிராம் டைம் லைன் என்ன சொல்கிறதோ அது மட்டுமே உண்மை என நம்பும் ஒரு ஆபத்தான போக்கு இளைய தலைவரிடம் காணப்படுகிறது. இந்த தலைமுறையிடம் Peer pressure அதிகமாக இருப்பதை நாம் காண முடிகிறது லேட்டஸ்ட் வாகனம் வேண்டும், லேட்டஸ்ட் டிசைனில் உடை உடுத்த வேண்டும், அதைப் பல விதங்களில் போட்டோ எடுத்து ரிலீஸ் போட வேண்டும் என்ற முனைப்பு அதிகமாக இருக்கிறது. ஒரு புதிய துணி வாங்கி அது தனக்கு எவ்வளவு அழகாக இருக்கிறது, நேர்த்தியாக இருக்கிறதா, இது தனக்கு பொருத்தமாக இருக்கிறதா என்று யோசிப்பதை விட அதை ரீல்ஸ் எடுத்து போட்டு எத்தனை லைக் வாங்குவது என்பதில் இந்தத் தலைமுறைக்கு ஒரு மிகப்பெரிய மோகம் இருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

இந்த ரீல்ஸ் மோகம் வெறும் உடையோடும் உணவோடும் பழக்க வழக்கங்களுடன் நின்று விட்டால் பரவாயில்லை அரசியலிலும் வந்திருக்கிறது என்பதுதான் மிகப்பெரிய ஆபத்தாக இருக்கிறது.

குறிப்பிட்ட ஒரு கட்சி என்று சொல்வதை விட குறிப்பிட்ட நடிகர் மேல் கொண்ட மோகத்தினால் அவர்கள் அந்த நடிகரை காண விழைந்து இருக்கிறார்கள். விக்கிரவாண்டி தொடங்கி கரூர் வரை இளைஞர்கள் ஒரு நடிகரைப் பார்க்கத் தங்கள் நேரத்தை, பணத்தை, பொருளைச் செல்வழித்து சென்றிருப்பது வெறும் சினிமா மோகத்தால் தான் என நாம் எண்ணினால் அது குறுகிய பார்வையாக அமையும்.

கொண்டாட்ட மனநிலை

ஊருக்குள் ஒரு திருவிழா நடந்தால், ஒரு கொண்டாட்டம் நிகழ்ந்தால் அந்த இடத்தில் நாம் இருக்க வேண்டும் என்று நினைபது இயல்பானது தான். ஆனால் இந்தத் தலைமுறையிடம் அது அளவுக்கு மீறிப் போய் இருக்கிறது என்பது ஒரு வருத்தத்துக்குரிய உண்மையாகும்.

அப்படியானால் இந்த தலைமுறையில் கொள்கை பிடிப்பு உள்ளவர்களே இல்லையா, நல்ல தலைவர்களை ஏற்றுக் கொள்பவர்களே இல்லையா, அனைவரும் நடிகர்கள் பின்னால் தான் செல்கிறார்களா என்றால் அது உண்மை அல்ல. பல இளைஞர்கள் ஏற்கனவே உள்ள அரசியல் அரசியல் கட்சிகளிலும் இணைந்து இருக்கிறார்கள். தங்களுக்கென்று அம்பேத்கர், கார்ல் மார்க்ஸ், பெரியார், அண்ணா, காமராஜர், கலைஞர், ஜெயலலிதா, ஸ்டாலின், எடப்பாடி என்று யாரோ ஒருவரை ரோல் மாடலாக வரித்துக் கொண்டு அவர் பாதையில் பயணிக்க வேண்டும் என்று விழையும் பல இளைஞர்கள் இன்று பழைய கட்சிகளில் இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் நம் கண்ணுக்கு தெரிவதில்லை, அவர்கள் போடும் ரீல்ஸ்க்கும், வாட்சப் ஸ்டேட்டஸிற்கும் மிகப்பெரிய வரவேற்பு இல்லை. ஆனால் புதிய கட்சியில் இணைவதால் உடனே கிடைக்கும் வெளிச்சம் பெரிய அளவில் பேசப்படுகிறது என்பதும் இங்கே குறிப்பிட வேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் நாம் தமிழர் கட்சி இதே வயதுள்ள இளைஞர்களை ஒரு தலைமுறைக்கு முன்னால், அதாவது10, 15 வருடங்களுக்கு முன்னால் ஈர்த்தது. ஆனால் மெல்ல மெல்ல அதன் தலைமை பிடிக்காமல் அதன் கொள்கை பிடிக்காமல் பலரும் வெளியேறி இருப்பதை நாம் பார்க்கிறோம். *Pass out batch* என்று அவர்கள் பகடி செய்யப் படுவதுண்டு.

இந்த இளைஞர்களும் தற்போது நடிகரின் பின்னால் சென்று சில வருடங்களை இழந்து பின்னர் அரசியல் தெளிவடையக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால், நாம் தமிழர் கட்சியின் பின்னால் சென்ற இளைஞர்களுக்கும், தற்போது விஜய் பின்னால் குவிந்திருக்கக்கூடிய இளைஞர்களுக்கும் ஒரு மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது. அது என்னவென்றால் *cult* மனநிலை. நாம் தமிழர் கட்சியில் சென்ற இளைஞர்களுக்கு ஓரளவுக்கு சித்தாந்த ஈர்ப்பு இருந்தது, தமிழ் தேசியம் என்ற கோட்பாடு இருந்தது. சரியோ, தவறோ அதை ஏற்றுக் கொண்டு கொஞ்சம் வாசிப்பிற்குள் சென்று அந்த தத்துவத்தை, சித்தாந்தத்தை உள்வாங்கிக் கொள்ள முயற்சி செய்தார்கள். நாம் அவர்களுடன் வேறுபட்டால் நம்முடன் வாதம் செய்யத் துணிந்தார்கள். ஆனால் இப்போது நடிகரின் பின்னால் சென்று இருக்க கூடிய இளைஞர்கள், சாமியார்கள் பின்னால் சென்று அவர்கள் தற்கொலை செய்யச் சொன்னால் கூட தற்கொலை செய்து கொள்வார்களே அது போன்ற ஒரு ஆபத்தான மனநிலையில் இருப்பது வேதனைக்குரியதாக இருக்கிறது.

குறிப்பாக கரூர் சம்பவத்திற்கு பின்னால் தங்கள் தலைவர் மீது எந்தத் தவறும் இல்லை என்று வாதம் செய்தார்கள். அந்த இடத்திலிருந்து ஓட்டம் பிடித்த விஜய்யையோ, அந்தக் கட்சியின் இரண்டாம் கட்டத் தலைவர்களையோ, மாவட்டப் பொறுப்பாளர்களையோ எந்தவித கேள்வி கேட்கவும் அவர்கள் தயாராக இல்லை. மாறாக கேள்வி கேட்டவர்களை எல்லாம் வெறிகொண்டு தாக்கி அரசின் மீதும் ஆளும் கட்சியின் மீதும் அவதூறுகளைப் பரப்பினார்கள் என்பதை நாம் கண்டோம்.

இந்த அபாயத்திலிருந்து இளைஞர்களை காக்க வேண்டிய பொறுப்பு இந்த பழைய அரசியல் கட்சிகளுக்கு இருக்கிறது.

இளைஞர்களை ஈர்க்க கட்சிகள் என்ன செய்ய வேண்டும்?

புதிய அரசியல் கட்சியின் கவர்ச்சியை என்ன செய்தாலும் பழைய அரசியல் கட்சிகளால் தர முடியாது. ஆனால் அவர்களிடத்தில் தொடர்ந்து உரையாட வேண்டும் இவர்கள் அனைவருமே கவர்ச்சியின் பின்னால் தான் போவார்கள் என்று அவர்களை அப்படியே விட்டு விடக்கூடாது. அவர்களுடன் தொடர்ந்து தொடர்ச்சியான உரையாடல்கள் மூலமே அவர்களைப் பக்குவப்படுத்த முடியும். அனைவரையும் பக்குவப்படுத்துவது, அனைவரையும் கன்வின்ஸ் செய்வது என்பது இயலாத ஒன்று, ஆனால் இந்த முயற்சி என்பது தொடர வேண்டும் இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை வழங்க வேண்டும் அவர்களுக்கென்று தனி அமைப்பை உருவாக்க வேண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தில் எம்ஜிஆர் இருந்தபோது எம்ஜிஆர் மன்றம் திமுகவில் ஒரு பகுதியாக இருந்தது பின்பு மு.க. ஸ்டாலின் தலைமையில் இளைஞர் அணி உருவாக்கப்பட்டது. அம்மையார் ஜெயலலிதா காலத்தில் இளைஞர் பாசறை, இளம் பெண்கள் பாசறை உருவாக்கப்பட்டது. அது போன்ற புதிய முயற்சிகள் மூலமாக இளைஞர்களை மைய நீரோட்ட அரசியலுக்குள் கொண்டு வர வேண்டியது அரசியல் கட்சிகளின் பொறுப்பாகவும், சுமையாகவும் பணியாகவும் நம் முன்னால் காத்திருக்கிறது. அதைச் செய்து, அவர்களுக்கான வாய்ப்புகளை உருவாக்க

அரசியல் கட்சிகள் தயாராக வேண்டும். பழைய முறைகளையே கொண்டு புதிய முடிவுகளை நாம் எட்ட முடியாது. புதிய பாணி அரசியலுக்கு பழைய அரசியல் கட்சிகள் தயாராக வேண்டும். அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதை நாம் அந்தந்தக் கட்சிகளின் முடிவுக்கு விட்டு விடுவோம். நன்றி!

- ஜெ.வெ.நவீன், வழக்கறிஞர்

பெரியார்... - பேராசிரியர் சக்திவேல் காந்தி

பெரியார்.. பெயரைக்கேட்டால் எத்தனை பேர் இன்னமும் பதட்டமடைகிறார்கள்..

அவரின் காலத்தில், அவர் செய்திருக்கும் செயல்கள் எப்படிப்பட்டது.. யார் நினைத்துபார்க்கிறார்கள்..

ஒரு இடைநிலை, கடைநிலையில் இருந்த சாதிகளில் இருந்து வரும் ஒருவர், இன்று என்னென்னமாதிரியாக அவரை பேசுகிறார்..

அப்படிப் பேசி பேசியே, ஒரு திராவிட ஒவ்வாமையை இங்கு கட்டமைத்திருக்கிறார்கள்..!

கலைஞர் மருத்துவமனையில் இருந்தபொழுது, அவரை அடியுடன் வெறுக்கும் கூட்டம் ஒன்று, வாட்சப் குழுவில் அவரின் இரங்கல் போஸ்டர் ஒன்றை பகிர்ந்து துள்ளிக்குதித்தது குதூகலித்தது.. அதுவும் அந்தக் குழு ஒரு கல்வி சார்ந்த குழு..!

இவர்கள் பெரியாரையும், கலைஞரையும் வெறுக்க மிகமுக்கிய காரணங்களாக அவர்களே சொல்லிக்கொள்வன யாவை?

அந்த காரணங்களை தமக்கு பிடித்த தலைவர்களுக்கு பொருத்திப்பார்த்தால், அவைகள் உண்மையான காரணங்களா என்பது புலப்படும்..

இவர்களுக்கு பெரியாரின் சாதியும், தாய்மொழியும், பெயரும்தான் பிரச்சினை என்றால், அவரை விடுத்து, சாதிய எதிர்ப்பையும், அனைவரும் சமம் என்பதையும், அறிவியலே முதன்மை என்பதையும் முன்னெடுத்துக்கொள்ளலாமே.. மாட்டார்கள்.. காரணம், பெரியாரை எதிர்ப்பதற்கு காரணமே, அவர் இவற்றை வலியுறுத்தினார் என்பதற்காகத்தான்..

இன்னும் சில கூட்டம் இருக்கிறது.. 'பெரியார் இதை சொன்னாரா.. ஹஹஹ.. இதற்கு முன்னர் இன்னார் இதை சொல்லிவிட்டாரே' என்று சொல்வார்கள்.. சரி, இன்னார்தான் சொல்லிவிட்டாரே, பின்னேன் அதை நீங்கள் கேட்டு நடக்கவில்லை என்று கேட்டால், அதற்கு பதில் இருக்காது..

அப்படியென்றால் பெரியாரை விமர்சிக்கவேக் கூடாதா...?!
தாராளமாக விமர்சிக்கலாம்.. ஆனால் அதற்கான தகுதியை வளர்த்துக்கொள்ள வேண்டுமே!

தன்னுடைய வீட்டில் எந்தெந்த சாதியிலிருந்து தன் மருமகளாக, மருமகனாக, மனைவியாக, கணவனாக, அனுமதித்திருக்கிறீர்கள் என்பதையும், தன் மனைவியை, இன்னும் எத்தனை பேர் சமையல்கட்டிற்குள்ளேயே வைத்திருக்கிறீர்கள் என்பதையும் பார்க்கவேண்டும்.. அப்படி சாதி பார்த்து, தன் சாதிக்குள் திருமணத்தை நடத்திவிட்டு, சமையல்கட்டிற்குள்ளேயே பெண்களையும் பூட்டிவைத்துவிட்டு, எந்த தகுதியும் அற்று பெரியாரை இகழ வாய் கூசவேண்டாமா..

ஒரு நீண்ட வாழ்வில், மிக நீண்ட நெடிய அரசியல் பயணத்தில், ஒன்றிரண்டு செய்திகளை, அதுவும் மொழி வெறியன் எவனோ கக்கிய கருத்துகளை உட்கொண்டு, பெரியாரை இகழ வாய் கூசவேண்டாமா..

தெலுங்கர்களின், கன்னடத்தவர்களின், மலையாளிகளின், வட இந்தியர்களின், பொது சிந்தனைகளை காணும்பொழுது, பெரியார் தமிழர்கள் வாழ்வில் என்னமாதிரியான மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்பதை எளிதில் புரிந்துகொள்ளமுடியும்..

எனவே, ஒருவேளை திராவிட ஒவ்வாமை உங்களிடம் தெரியாத்தனமாக குடிகொண்டிருந்தால், அதனை விட்டுவிடுங்கள் இளைஞர்களே.. அது மிகவும் ஆபத்தானது..
மேலும், தகுதிகளை வளர்த்துக்கொண்டு, பெரியாரைத்தாண்டி இந்த சமூகத்தை எடுத்து செல்லுங்கள்.. அதுவே காலத்தின் தேவை..

-சகா.

தமிழ்நாடு காக்கப்படட்டும்! – Rajarajan RJ

TVK என்பது கட்சியல்ல, அது ஒரு influencer marketing என்று அந்த standup comedian சொன்ன போது எனக்கு முழுமையாக புரியவில்லை. நேற்று தான் அதன் பொருள் முற்றிலும் புரிந்தது. விஜய்யை பற்றி பேச ஒரு வீடியோவிற்கு 30000 ரூபாய் தருகிறார்களாம்.

அனைத்து கட்சிகளும் ஐடிவிங் நடத்துவார்கள். சம்பளத்திற்கு ஆட்கள் இருப்பார்கள். Paid promotions என்பது தேர்தலின் போது நடக்கும். தங்களது சாதனைகளை அல்லது பரப்புரைகளை காசுக்கொடுத்து செய்வார்கள்!

ஆனால், influencers வைத்து நேரடியாகவோ, மறைமுகமாகவோ திமுக அதிமுக even நாதகவால் கூட வீடியோக்களை போட முடியாது. ஏனெனில் அது அப்பட்டமாக தெரிந்துவிடும்.

ஆனால், தவெக இதை பல ஆண்டுகளாக செய்கிறது என்பது தெரிகிறது. விஜய் பட பிரோமசன், 1000 கோடி கலெக்சன் என பரப்புரை செய்வது, மற்ற நடிகர்களின் படம் வந்தால் அவர்களை காலி செய்ய பணம் தருவது என இவர்கள் செய்து இருக்கிறார்கள்.

ஆனால், இவர்கள் அரசியலிலும் இதே பாணியை தான் பயன்படுத்துகிறார்கள் என்பதும், 41 உயிர்கள் போனபின்னும் அவர்களால் இதே influencers வைத்து conspiracy theory க்களை பரப்ப முடிகிறது என்பதும், எவ்வித அறமும் இல்லாமல் இவர்களால் செயல் பட முடியும் என்பதும் நேற்று வெளியான அந்த ஆடியோவில் வெட்ட வெளிச்சமாக தெரிகின்றது!

Loop ல இருந்து ராகேஷ் பேசுறேன் ப்ரோன்னு கவின்னு ஒரு influencer கிட்ட பேசுற ஆடியோ. இன்னக்கி சாயங்காலம் தளபதியின் ஒரு வீடியோ வரும், அதுல அவர் எமோசனலா பேசியிருப்பாரு, அத வச்சி நீங்க - அவர் எமோசன்ஸ புரிஞ்சிக்குங்க, குடும்பத்துல 41 பேர் செத்து இருக்காங்கன்னு அவரு சோகத்துல இருக்காரு. போலீஸ் தான் அவரை கரூர் வரவேணாம், வந்தா கலவரம் நடக்கும்ன்னு சொல்லி தடுத்து இருக்காங்க, இது நம்ம யாருக்கும் தெரியலன்னு பேசி வீடியோ போடுங்கன்னு சொல்றார் ராகேஷ். இது சரியா வரும்னு தோணல ப்ரோ, பயமா இருக்கு என எதிரில் இருப்பவர் மறுக்கிறார்.

நாங்க யாருன்னு உங்களுக்கு தெரியும் ப்ரோ, நாங்க இருக்கோம், இன்னும் தளபதியோட ஜனநாயகன் வரப்போகுது, உங்கள கவனிச்சிக்கிறோம், இப்ப சின்ன சின்ன ஊர்ல இருக்குற ஐடிகளையும் நாங்க எடுத்துட்டு இருக்கோம், இந்த Payroll ல நீங்க வந்துட்டீங்கன்னா நல்லா சம்பாதிக்கலாம் என ராகேஷ் convince பண்ண முயல்கிறார்.

ஆனால் எதிரில் இருப்பவர் convince ஆகல. உடனே போன வீடியோக்கு 20000 தந்தோம் இந்த வீடியோ 30000 தருகிறோம். தளபதி வீடியோவை கீர்த்தி சுரேஷ்ல இருந்து பல நடிகர்கள் பகிர்வார்கள். இந்தியா முழுக்க நாங்க influence பண்றோம். Local லயும் இதை பரப்ப தான் உங்க கிட்ட பேசுறோம் என்கிறார் ராகேஷ்.

இந்த கவி என்பவர் மனசாட்சி உள்ளவர் போல. கடைசிவரை அந்த ஆடியோவில் அவர் ஒத்துக்கொள்ளவில்லை!

இவர்கள் loop, route என எத்தனை பேரில் எத்தனை பேருக்கு எவ்வளவு காசை கொடுத்து வீடியோ போடுகிறார்கள் என்பதை காணும் போது இவர்களிடம் இவ்வளவு காசும், இதை தமிழ்நாட்டில் இரைக்க நினைக்கும் மனநிலையும், தமிழ்நாட்டை பதட்டநிலையில் வைத்திருக்க நினைக்கும் முயற்சியும், 41 மனிதர்கள் இறந்ததை நேரில் கூட பார்க்க வராத ஒரு சைக்கோவிற்கு இவர்கள் தரும் நாடக முட்டும், இவர்கள் பாஜகவின் overall payroll ல் இருப்பார்களோ என்று வரும் சந்தேகத்தை தவிர்க்க முடியவில்லை.

இவர்களின் payroll ல் இருப்பவர்களை கணக்கெடுத்தால் அது ஆக்டோபஸ் கரங்களாக நீளும் என்கிறார்கள்.

முழுமையான உண்மைகள் வெளியாகி இதன் பின்னால் இருக்கும் சமூக விரோதிகளின் மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என நம்புகிறேன். நிறைய இரத்தம் குடிக்க இந்த கூட்டம் காத்திருக்கிறது!

தமிழ்நாடு காக்கப்படட்டும்!

- *Rajarajan RJ*

இடதுசாரி - வலதுசாரிகளின் ஒரு நூற்றாண்டு (1925 - 2025) வரலாறு - முனைவர் சிவ இளங்கோ

மனித இனம் உருவான காலம் 25 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு என்கிறது தற்கால அறிவியல் கோட்பாடு. ஒரு குழுவாக, (கூட்டுக் குடும்பமாக) வாழ்கின்ற சிங்கம், யானை, குரங்குகளின் சமூக இயல்பின் அடிப்படையில் தான், மாந்த இனத்தில் இனக் குழுக்கள் வளர்ச்சி நிலை பெற்றன. தனித் தனிக் குழுவாக இருந்து, தங்களுக்குள் தாக்கி அழிந்த நிலைமாறி, இனக்குழுக்களுக்குள் இணக்கமான சூழ்நிலை ஏற்பட்டபோது பெரிய சமூக அமைப்புகளும், அதன் பாதுகாப்பு கருதி அரசுகளும் தோன்றின; தோற்றுவிக்கப்பட்டன.

இதே காரணத்திற்காகச் சிற்றரசுகளெல்லாம் ஒன்றுகூடி அல்லது போரிட்டு அதன் விளைவாகப் பேரரசுகளும் தோன்றின. அரசு நீதி வளைந்த போது, அரசனுக்கும் மேலதிகாரம் கற்பிக்கும் நோக்கில் 'தேவன்' என்ற கருத்தியல் தோன்றியது. காலச் சூழல் வாழ்விடத்தையும், சமுதாயத்தையும் மாற்றுவதைப் போல சமூக எண்ணங்களையும் மாற்றவல்லது. தற்செயலாக ஏற்படும் நிகழ்வுகள், இயற்கையின் வல்லமை, அதன் சீற்றங்களால் ஏற்பட்ட பேரழிவுகள், தேவன் என்ற கோட்பாட்டை வளர்த்துக் கொண்டே வந்தன.

அரசு, பேரரசு ஆகிய வல்லமையுள்ள அமைப்புகளின் எதிர்ப்பாளர்கள் (அதாவது, அதிகாரத்தின் மீது போதையுள்ளவர்கள்) வளர்ந்து வந்து கொண்டிருந்த தேவன் என்னும் கோட்பாட்டைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டே வந்தனர். அதை ஏற்றுக் கொள்ளும் மனம் படைத்த யாரோ ஓர் அரசன் தேவனுக்கு இடம் கொடுத்தான். தேவாலயம் உருவாக்கப்பட்டது. உண்மைகள் புதைபொருட்களாக ஆக்கப் பட்டு, நம்பிக்கைகளை அடித்தளமாகக் கொண்டு ஆலயங்கள் பெருகின. மக்களைக் காப்பாற்றுதல் என்ற உண்மை நெறிக்காகத் தோற்றுவிக்கப்பட்ட அரசும், அரசாங்கமும் நம்பிக்கையும், அதன் கருவான மூட நம்பிக்கைகளின் வழியில் நடைபோட வேண்டியவைகளாக ஆக்கப்பட்டன.

நம்பிக்கையால் கட்டுப்படுத்தப்பட்ட அரசர்கள் மிக எளிமையாக சமய நெறிகளை ஏற்றுக் கொள்வதற்கும், மாற்றிக் கொள்வதற்கும் ஆற்றுப் படுத்தப்பட்டனர். இதற்காக மறைமொழிகளும், மந்திரங்களும் உருவாக்கப்பட்டு மதகுருக்கள் அதிகார பீடம் அமைத்துக் கொண்டனர். இயற்கைக்கு மாறுபட்ட பலதிறச் செயற்கை முறைகளைக் கைக்கொள்ளும் கட்டாயம் அரசுகளுக்கு ஏற்பட்டது. இன்றைக்கு அரசாங்கமும், அரசியலும், சமுதாயமும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, மாற்றுப்பாதை ஏதுமின்றி மதவழிச் செல்பவையாக ஆக்கப்பட்டுவிட்டன.

கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் மதங்களும் கூடச் சீர்திருத்தம் கண்டன. கிருத்துவ மத குருமார்களின் முறையற்ற அதிகாரம், ஊழல், ஏமாற்றுத் தன்மை ஆகியவற்றைக் கண்டித்து, மார்ட்டின் லூத்தர் (1483-1546), ஜெர்மனியின் விட்டன்பெர்க் தேவாலயக் கதவில் பொறித்த 95 வினா/விளக்கங்களும் கிறிஸ்துவ

மதத்திற்கு ஒரு புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சின. 'புராட்டஸ்டண்ட்' என்கிற புதிய பாதை அம்மதத்தின் மறுமலர்ச்சியாகப் பார்க்கப்பட்டது.

இந்த மாற்றம் மத நிறுவனங்களில் மட்டுமல்லாது, சமூக அமைப்புகளிலும் சீர்திருத்த எண்ணங்களைத் தோற்றுவித்தது. தேவனுக்கு மாற்றாகவும் சில கருத்துக்கள் உருவாகின. அது புராண, வரலாற்று ஆராய்ச்சிகளில் தொடங்கி, அறிவியல் கண்டுபிடிப்புகள் தொடர்பான அடிப்படைக் காரியங்கள் வளர ஊக்கப்படுத்தியது. 'லியோனார்டோ டாவின்சி' (1452-1519) போன்ற மதத்திற்குக் கட்டுப்பட்ட அறிவியல் வாதிகள் உருவாகத் தொடங்கினர். வலதுசாரி தீவிரவாதத்தில் இருந்தும் இடதுசாரிகள் எண்ணங்கள் உதயமாகும் என்பதை இக்காலம் நிரூபித்தது.

இதைத்தொடர்ந்து உழைக்கும் வர்க்கம் என்று மக்களை மையப்படுத்திய மக்களாட்சி எண்ணங்கள் மலரத் தொடங்கின. 1789 ஆம் ஆண்டு பிரான்சில் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சி, "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்னும் அரசியல் சீர்திருத்தங்களை உலகத்திற்கு அறிமுகப் படுத்தியது. பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் தொடங்கிய தொழில் புரட்சி உலகிற்குப் பொருளாதாரச் சீர்திருத்தங்களை வழங்கியது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஜெர்மனியில் ஏற்பட்ட அறிவுப் புரட்சி (மார்க்சியக் கோட்பாடு) உலகமெங்கும் உழைக்கும் மக்களைத் தலைமையேற்க வைக்கும் சமூகச் சீர்திருத்தமாகவும், வர்க்கப் புரட்சியாகவும் அறைகூவல் விடுத்தது. இவைதான் மறுமலர்ச்சிக் காலங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

இப்படிப்பட்ட நிகழ்வுகளால் உலகின் பெரும்பாலான நாடுகள் மன்னர் ஆட்சியை விடுத்து மக்களாட்சி நாடுகளாக மாறிக் கொண்டிருந்தன. காலனித்துவ முறையின் வீழ்ச்சியும் புதிய மக்களாட்சி நாடுகள் தோன்றக் காரணமாயின. ஆயினும் மக்களாட்சிப் பண்புகளான இடதுசாரி, வலதுசாரி ஆகிய போக்குகளை அறிவதற்கு மக்களுக்கு மேலும் காலங்கள் பிடித்தன.

இந்தியாவில் மன்னராட்சியின் இறுதிக் கட்டப் போராட்டமாக வைக்கம் போராட்டத்தைக் கூறலாம். தென்னிந்தியாவில் இப்போராட்டம் ஏற்படுத்திய அதிர்வுகளும். விளைவுகளும் இந்திய அரசியலில் இன்றளவும் தாக்கத்தையும், பின் விளைவுகளையும் ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றன.

ஆச்சாரம் (சாஸ்திரம், சனாதனம்) வலியுறுத்தும் உயர் சாதி ஆதிக்கத்திற்கு முடிவு கட்டும் முயற்சியின் ஒரு தொடக்கத்தை வைக்கம் போராட்டம் உறுதி செய்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் கருத்துரைத்தனர். அதே நேரம், இந்த வைக்கம் போராட்டம் பெரிதாக எதையும் சாதித்து விடவில்லை என்றும், கோவிலைச் சுற்றி இருக்கும் தெருக்களில் கிழக்குப் பகுதி வாயில் உள்ள தெருவைத் தவிர்த்துப் பிற மூன்று சாலைகளிலும் நடப்பதற்கு மட்டுமே உரிமையைப் போராடிப் பெற்றதை ஒரு சமுதாயப் புரட்சியின் 'ஆத்மா'வை எள்ளி நகையாடுவது போல் இருப்பதாகவும் அவர்கள் கருதினார்கள். எப்படியாயினும் வைக்கம் போராட்டத்தைத் தொடர்ந்து 'கோயில் நுழைவு உரிமை' என்பது இந்தியாவில் நாடு தழுவிய இயக்கமாக இன்று வரை வளர்ந்து கொண்டு வருகிறது.

கோயில் சுற்றுத் தெருக்கள் நுழைவுப் போராட்டம் வெற்றி அடைந்ததற்குக் கூட, "அது சமத்துவ நோக்கிலான அறிவிப்பு இல்லை; இந்து மதம் பிளவு பட்டுவிடக்கூடாது; மக்கள் வேறு மதத்திற்குச் சென்று விடக்கூடாது" என்று தான் அந்த வழிநடையைத் திறந்தார்கள் என்ற கருத்து அப்போதே முன்வைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து எழுந்த கோயில் நுழைவுப் போராட்டக் காலங்களின் போதும், "கோயிலில் நுழைய அனுமதிக்கப்படவில்லை என்றால், மதம் மாற்றமே இறுதித் தீர்வு" என்ற கருத்தும் முன்வைத்துப் பேசப்பட்டது.

1934 ஆம் ஆண்டில், அப்படி ஒரு கூட்டத்தில் பேசிய பெரியார், கோயில் நுழைவை விட மதம் மாறுவதை வரவேற்றார். எந்த மதம் மாறுவது என்பதுதான் முக்கியம் என்று கூறிய பெரியார், "எந்த மதம் வேண்டுமானாலும் மாறலாம்; ஆனால் ஆரிய சமாஜத்திற்கு மட்டும் போய்விடாதீர்கள்" என்று அறிவுறுத்தினார். அனைத்துச் சாதியினரும் கோயிலில் நுழைவதை 'உரிமை' என்ற அளவில் பெரியார் வரவேற்றிருந்தாலும், அதனால் ஏழைகளுக்கு எந்த முன்னேற்றமும் ஏற்படாது என்று அவர் கருதியதால் கோவில் நுழைவு என்ற கருத்தையே அவர் விரும்பவில்லை.

ஒடுக்கப்பட்டவர்களுக்குப் பொருளாதார விடுதலை எந்த அளவுக்கு முக்கியமோ, அந்த அளவுக்குக் கோயில் நுழைவு உரிமை முக்கியம் இல்லை என்றே அவர் கருதினார்.

வைக்கம் போராட்டம், 1925 ஆம் ஆண்டில், கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் ஈழவர், புலையர் போன்ற சாதிப் பட்டத்தை உடையவர்கள் நடமாடலாம் என்ற அனுமதியுடன் முடிவுக்கு வந்தது. இவ் வெற்றியைத் தொடர்ந்து, அனைத்துச் சாதியினரும் கோவிலுக்குள் நுழையும் உரிமையும், 1936 ஆம்

ஆண்டில், திருவாங்கூர் சமஸ்தானத்தின் இராணி சேதுலட்சுமி பாய் அவர்களால் பிரகடனப் படுத்தப்பட்டது. "கோவில் நுழைவுப் பிரகடனம்" (Temple Entry Proclamation, 12. 11. 1936) விழாவிற்கு மகாத்மா காந்தியும் வந்திருந்தார்.

வைக்கம் சத்தியாகிரகம் தொடர்பாகவும், காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்காகவும் 1920 ஆம் ஆண்டு தொடங்கி 1937 ஆம் ஆண்டு வரையிலான 17 ஆண்டுகளில் காந்தியடிகள் ஐந்து முறை கேரளாவிற்கு வருகை தந்தார். இவ்வைந்து வருகையிலும் மொத்தமாக 50 நாட்கள் அவர் கேரளாவில் தங்கியிருந்து அம் மக்களோடு பழகியும், அவருக்கு ஒன்று மட்டும் புரியாமலேயே போய் விட்டது. கல்வியில் வளர்ந்ததும், 'அன்பான ஆட்சியாளர்களால்' ஆளப்பட்டதும், இயற்கை அழகு செறிந்ததுமான கேரளாவில் எப்படித் தீண்டாமையும், அணுகாமையும் ஆழப் புதைந்திருந்தன என்பதுதான் அது.

வலது சாரித் தீவிரவாதத்தால் சூழப்பட்டிருந்த இப்படிப்பட்ட கேரள மாநிலத்தில்தான் இந்திய இடதுசாரி இயக்கங்களும் துளிர்விட்டன என்பதையும், அதற்கான விதை ஊன்றக் காரணமானவர்களில் தானும் ஒருவர் என்பதையும் காந்தி அறிந்திருக்கக் கூடும். அதேநேரம், விதை ஊன்றியவரும் அவரே; வெந்நீர் ஊற்றியவரும் அவரே என்பதை வரலாறு விளக்கியது.

இந்து மத மேலாதிக்கமும், வர்ணாசிரமப் பிரிவுகளும் அவர் அறியாத ஒன்றல்ல. ஆனாலும் வருணாசிரமத்தின் மேல் அடுக்குப் பார்வைதான் அவருடைய 'பனியா' என்னும் பிறவிவழி அவருக்குப் போர்த்தப்பட்டிருந்த தோல் போர்வை. இந்தியாவில் பிறந்து வளர்ந்திருந்தும் தீண்டாமை என்னும் கொடிய பாம்பு அவரைத் தீண்டியதும் இல்லை; அவர் பார்த்ததும் இல்லை என்பதைப் போலவே அவரது வர்ணாசிரமப் பார்வையும், பேச்சும், எழுத்தும் அமைந்திருந்தன.

வழக்குரைஞராகத் தென்னாப்பிரிக்காவுக்குச் சென்றிருந்த அவருக்கு நிறவெறி மேலாதிக்கமும், அதையொட்டிய நிகழ்வுகளும் மனித மனங்களின் அவலங்களைக் கற்றுக் கொடுத்திருந்தன. அந்தப் புரிதல் அவ்விடத்தின் நிறவெறிப் போராட்டத்தில் அவருக்கு ஓரளவு வெற்றியையும் தேடிக் கொடுத்தது. அந்த வெற்றியைத் தொடர்ந்து, தாய்நாட்டின் (இந்தியாவின்) ஆண்டான் - அடிமைப் பிரச்சினையைத் தீர்க்க அவர் அழைக்கப்பட்டார்.

அப்படி இந்தியா வந்தடைந்த காந்தியடிகள், இந்தியாவை அறிந்து கொள்ள, 1914 ஆம் ஆண்டில், தொடர்வண்டி (இரயில்) மூலம், இந்தியா முழுமையும் ஒரு சுற்றுப்பயணம் செய்தார். மக்களோடு பயணித்து, மக்களுடன் பழகி இந்தியாவின் வறுமையை அவர் அறிந்து கொண்ட பின்னர், 'மகாத்மா' என்ற அடைமொழியுடன் போற்றப்பட்டார்.

அதேநேரம், பிறப்பை அடிப்படையாக வைத்துத் தீண்டக் கூடாத, ஏன், காணக் கூடப் படாத ஒரு சாதிவெறி மேலாண்மை தன் சொந்த நாட்டிலேயே இருப்பதைக் கேட்டு அவர் வியந்தாரோ இல்லையோ, வறுமையையும், தீண்டாமையையும் எதிர்த்த அளவிற்குச் சனாதனத்தை எதிர்க்காத அவரது போக்கைக் கண்டுச் சமூகச் சீர்திருத்தவாதிகள் வியந்தனர்.

வைக்கம் சத்யாக்கிரகப் போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில், திருவாங்கூர் சமஸ்தான இராணியாருடன் பேச்சுவார்த்தை நடத்த 1925 ஆம் ஆண்டில் காந்தி திருவாங்கூர் வந்திருந்த போது, அவரும் ராஜாஜியும் அரசாங்க விருந்தினர்கள் மாளிகையில் தங்கினார்கள். அப்போது இரவு நேரம். வெளியில் இருந்து வந்த ஓர் அவலக் குரல் காந்தியைத் திகிலடையச் செய்தது. அதேநேரம், அக்குரலைக் கேட்டுச் சிறிதும் கலங்காத ராஜாஜி, "அது காணக்கூடாத சாதியினரின் குரல்" என்றும், "அவர்கள் 'நாயாடி' என்று அழைக்கப்படுபவர்கள்" என்றும் கூறினார்.

'நாயாடிகள்' குறித்து அவர் மேலும் கூறினார்: "அவர்கள் காணக்கூடாதவர்கள்; ஆகையால், அவர்கள் பகல் முழுவதும் தங்கள் குடிசையிலேயே கண் மறைவாய் இருந்துவிட்டு, இரவானதும் தங்கள் தேவைக்காக வெளியே வருவார்கள்; அப்போது உயர் சாதியினர் தங்களைப் பார்த்துவிடும் பட்சத்தில், அவர்களுக்கு அபச்சாரம் ஆகிவிடக் கூடாது என்ற நோக்கில், இந்த நாயாடிகள் குலவை போன்றதோர் எச்சரிக்கை ஒலியெழுப்பி விட்டு வெளியே வருவார்கள்; கடைகளில் ஏதேனும் வாங்க நேர்ந்தால் கடையின் முன் ஒரு வாழையிலையில் அதற்கான பணத்தை வைத்துவிட்டு அருகில் போய் ஒளிந்து கொள்வார்கள்; கடைக்காரர் பணத்தை எடுத்துக்கொண்டு, அதற்கான பொருளை வைத்து விட்டு உள்ளே சென்ற பின்னர் அப்பொருளை எடுத்துக்கொண்டு திரும்புவார்கள்" என்று ராஜாஜி விளக்கமாகச் சொன்னார். இதைக் கேட்டு அதிர்ந்து போன காந்தியடிகள், இப்படிப்பட்ட சாதிக்கொடுமைகளை நிகழ்த்தும் மக்களுக்காகவா விடுதலை கேட்டுப் போராடிக் கொண்டிருக்கிறோம் என்று மயங்கினார். "விடுதலை என்பது பிரிட்டிஷாரிடம் இருந்து இந்தியர்களுக்கா அல்லது இந்து சனாதனத்திடமிருந்து

ஒடுக்கப்பட்டவர்களுக்கா? யார், யாருக்கு விடுதலை தருவது?" என்பதில் அவருக்குத் தீராத குழப்பம் இருந்தது.

காந்தியடிகள் மீண்டும் 1936 ஆம் ஆண்டில் கோயில் நுழைவுப் பிரகடனத்திற்காகக் கேரளா வந்தபோது, கோயில் கதவுகள் யாருக்காக இதுவரை திறக்கப்படாமல் அடைக்கப்பட்டு இருந்ததோ, அந்தப் புலையர்கள் கோயிலுக்குள் நுழைவதைக் காண விரும்பினார். "இங்கு யார் புலையர்?" என்று காந்தி கேட்ட போது, "யாருமே புலையர்கள் இல்லை" என்று பதில்தான் அவருக்குக் கிடைத்தது. தீண்டப்படாதோர், காணப்படாதோர் எல்லாம் மதம் மாறிப் போனதினாலேயே, கோயில் கதவுகளைத் திறந்து வைத்தும் ஒரு புலையரும் உள்ளே நுழையவில்லை. இத்தனைப் போராட்டங்கள் நடத்தியும், கோயில் கதவுகளைத் திறந்து வைத்தும் கூட, ஒரு புலையரும் உள்ளே நுழைவதைக் காண முடியாத நிலையை எண்ணிக் கண்ணீர் வடிக்கத்தான் காந்தியடிகளால் முடிந்தது.

இந்தக் கோயில்களுக்கு இனி கதவுகள் ஏனோ என்று கூட அவர் வருந்தி இருக்கலாம். அதனால் புலையர்களும், அவர்களைப் போன்றே நடத்தப்பட்ட ஆதிதிராவிட மக்களும் அவருக்குக் கடவுள் மக்களாகத் தெரிந்தனர். அதனால் அவர்களை 'அரிசன்' (ஹரிஜன்) என்று காந்தி அழைத்தார். அப்படியாவது அவர்கள் கோவிலுக்குள் நுழைய முடியும் என்று அவர் நினைத்திருக்கலாம். அதற்காக "அரிசன மகா சங்கம்" என்று ஓர் இயக்கத்தை அவர் தொடங்கினார். இந்திய அளவில் அவ் இயக்கமும் வளர்ந்தது.

தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என காந்தி விரும்பினாரே ஒழிய, தீண்டாமையை உருவாக்கிய, அதைப் பேணிப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் சனாதனத்தை அடக்கவும், அழிக்கவும் அவர் முயலவில்லை. அவ்வளவு ஏன், சனாதனத்தை நோக்கி ஒரு கேள்வி கேட்கக் கூட அவர் விரும்பவில்லை. வெற்று இயக்கத்தை நம்பியே அரிசன மக்கள் தன்னை நோக்கி வருவார்கள் என்று அவர் நம்பியது தவறாகிப் போனது. அத்துடன் பார்ப்பன, பனியா உயர் சாதியினர், தன் தீண்டாமை ஒழிப்புக் கருத்துகளால் கவரப்படுவார்கள் என்று அவர் நம்பியதும் தவறாகிப் போனது. இதனால் காந்தியும், காங்கிரசும் 'இடதுசாரி' என்ற கோட்பாட்டுக்குள் வரவே தகுதியற்றவர்கள் ஆகிப் போனார்கள்.

கேரளாவில் இடதுசாரிக் கட்சிகள், அமைப்புகள் இன்று வரை பலமாக இருப்பதற்கு வைக்கம் போராட்டம் ஒரு முக்கியக் காரணமாகும். ஆத்திகமும், மூடநம்பிக்கையும் எங்கு பலமாக இருக்கிறதோ அவ்விடத்தில் அதற்கான எதிர்ப்பும் காலப்போக்கில் வளர்ந்து, ஒரு கட்டத்தில் எதிர்ப்பரசியலாகப் பேருருக் கொள்ளும். மார்க்சியக் கோட்பாடுகளின் பரவல் இந்தியாவில் தொடங்கியிருந்த காலகட்டமாக அது இருந்தது. ஆதலால் கேரள இளைஞர்களிடையே அதற்குப் பெரும் செல்வாக்கு ஏற்படத் தொடங்கியது. இப்பரவல் இந்தியா முழுவதும் தீவிரமாக இருந்ததாக அண்ணல் அம்பேத்கர் குறிப்பிடுகிறார். *(Dr. B. R. Ambedkar, Buddha or Karl Marx, p.5).*

கேரளாவில் இந்தியத் தேசிய காங்கிரசுக் கட்சி, வைக்கம் போராட்டம் வழிக் காலூன்றினாலும், இந்திய விடுதலைக்குப் பின்னர், அங்குக் காங்கிரசுக் கட்சியின் செல்வாக்கு குறையத் தொடங்கியது. இடதுசாரி இயக்கங்கள் தமிழ்நாட்டிலும் தழைத்துக் கொண்டிருந்தன. திராவிட இயக்கத்தின் வளர்ச்சியால் தமிழ்நாட்டில், காங்கிரசுக் கட்சியின் பின்னடைவு தவிர்க்க முடியாமல் போனது.

கேரள காங்கிரசின் அழைப்பின் பேரில், 1924 ஆம் ஆண்டில், வைக்கம் சென்று, போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பெரியார், போராட்டத்தைத் தீவிரப் படுத்தவும், போராட்டத்திற்கான நிதி சேர்க்கவும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருந்த வேளையில், போராட்டத்திற்கு நிதியுதவி வரும் வழிகளைக் காந்தியடிகள் தன்னுடைய அகிம்சை வழி அறிக்கையால் அடைத்துவிட்டார்.

சத்தியாகிரகப் போராட்டம் என்று அறிவிக்கப் பட்டதால் போராட்டத்தைத் தீவிரப் படுத்தும் திட்டத்தைக் காந்தியடிகள் ஏற்கவில்லை. போராட்டமும் நடத்த வேண்டும்; திருவாங்கூர் சமஸ்தானத்துடன் நட்பும் பாராட்ட வேண்டும் என்ற இழுபறிக் கொள்கையால் போராட்ட வேகம் தடைபட்டுக் கொண்டே வந்ததைப் பெரியார் விரும்பவில்லை.

மேலும், சத்யாக்கிரகம் என்னும் காந்தியக் கோட்பாட்டைப் பரிசோதனை செய்யும் களமாக வைக்கத்தை காந்தி ஆக்கியதானது, கேரளக் காங்கிரஸ் தலைவர்களுக்கும் நெருடலாகவே இருந்தது. வைக்கம் போராட்டத்திற்குத் தீர்வு காண திருவாங்கூர் சமஸ்தான காவல் ஆணையர் பிட் *(W.H. Pitt)* என்பவருக்குக் காந்தியடிகள் கடிதம் எழுதி, அவருடைய ஏற்பாட்டில் திருவாங்கூர் சமஸ்தானம் ஒப்பந்தம் கையெழுத்தானதும் போராட்டக்காரர்களுக்கு உவக்கவில்லை *(விடுதலை, 31.3.2023).* ஆனாலும் 'மகாத்மா' எனும் ஒளிவட்டம் அனைவரையும் மௌனியாக்கியது.

வைக்கம் போராட்டம் முடிந்து தமிழ்நாடு திரும்பிய பெரியார், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராகத் தன் பணியைத் தொடர்ந்தார். சென்னை மாகாணத்திற்கு, எதிர் வரும் 1926 ஆம் ஆண்டுத் தேர்தலில், ஒருவேளை காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று அரசாங்கம் அமைத்தால், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைச் (இட ஒதுக்கீடு) சட்டமாக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

வைக்கம் போராட்டத்தின் படிப்பினையாகவும், எதிர்வினையாகவும் கூட இக்கோரிக்கை விளங்கியது. அதை 1924, 1925 காங்கிரஸ் மாநாடுகளில் தீர்மானமாகவும் கொண்டு வந்தார். ஆனால் காங்கிரஸ் தலைவராகப் பெரியார் கொண்டு வந்த இந்தத் தீர்மானம், காங்கிரஸ் மாநாடுகளிலேயே பலமுறை தோற்கடிக்கப்பட்டதால், இறுதியாக 1925 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாநாட்டில், அவர் காங்கிரசை விட்டு வெளியேறும் முடிவை மேற்கொண்டார்.

1924 ஆம் ஆண்டில் காந்தியின் எல்லாக் கொள்கைகளுக்கும் கட்டுப்பட்டு இருந்த பெரியார், 1925 ஆம் ஆண்டிலேயே காங்கிரசில் நிலவிய சாதி மேலாதிக்கத் தன்மையைக் கண்டித்துக் காங்கிரசிலிருந்தே வெளியேறினார். அதனுடைய விளைவாகத்தான், அப்போது பெரியார் நடத்திக் கொண்டிருந்த குடியரசு இதழ் வழியாகச் "சுயமரியாதை இயக்கம்" உருவானது. 1925 ஆம் ஆண்டு வரையில் காங்கிரஸ் தலைவராகப் பணியாற்றிப், பின் நாட்களில் திராவிட இயக்கத்தினுடையவும், இடதுசாரி எண்ணங்களின் பிதாமகன் ஆகவும் பெரியார் தமிழக வரலாற்றில் நிலை பெற்றதற்கு வைக்கம் போராட்டமும் ஒரு காரணமே.

வைக்கம் போராட்டம் இந்தியச் சமூகங்களிலும், அரசியலிலும் ஒரு குறிப்பிடத்தக்க விளைவை ஏற்படுத்தியது. இந்திய விடுதலை இயக்கம் தீவிரமாகச் செயல்பட்டு வந்த காலத்தில் சமத்துவத்திற்கும், சமூகச் சீர்திருத்தத்திற்கும் அவசியமானதும், வன்முறையற்ற சமூக மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு ஒரு முன் உதாரணமாகவும் வைக்கம் போராட்டம் திகழ்ந்தது.

கேரளாவில் "நாராயண தர்ம பரிபாலன யோகம்" (Sri Narayana Dharma Paripalan Yogam) என்ற சமூகச் சீர்திருத்த அமைப்பு தொடங்கப்பட இப் போராட்டம் காரணமாகியது. இவ்வமைப்பு கேரளாவில் இந்து மதத்திற்குள் தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் சமத்துவத்திற்கான சேவைகளைச் செய்து வந்தது. ஆனால், இது வெறுமனே ஆதிக்கத்திற்கு அடி பணியும் செய்கையாகத்தான் விளங்கியது. இத்தகைய நடவடிக்கைகளினால் "வைக்கம் போராட்டம், சமுதாயச் சீர்திருத்த இயக்கமாகப் பரிணமிக்காமல், இந்து மதச் சீர்திருத்த இயக்கமாக மாறிவிட்டது" என்ற மதிப்பீட்டைத் தான் வரலாற்று ஆர்வலர்களிடமிருந்து பெற முடிந்தது. "மதம் என்னும் அரணுக்குள் அடங்கி நிற்பவை எல்லாம் வலதுசாரிகள் என்பதே வரலாறு".

மேற்குலக நாடுகளில் மட்டுமே பெண்ணுரிமை குறித்த விவாதங்களும், போராட்டங்களும் தொடங்கியிருந்த காலத்தில், வைக்கம் போராட்டத்தில் தென்னிந்தியப் பெண்கள் பெருமளவில் கலந்து கொண்டது அன்றைய பிரிட்டிஷ் இந்திய ஆட்சியாளர்களையும் வியக்க வைத்தது.

இந்தியாவில் முதல்முறையாகப் பெண்கள் கலந்து கொண்ட இப்போராட்டம், நாட்டின் சமூக, அரசியல் அக்கறையுள்ள பெண்களின் எழுச்சியை வெளிப்படுத்தியதுடன், இடதுசாரி எண்ணம் கொண்ட ஒரு முன்மாதிரிச் சமுதாயத்தைக் கட்டமைக்கும் வரலாறு பெண்களால் தொடங்கப் பட்டு விட்டதையும் உறுதி செய்தது. இடதுசாரி இயக்கங்களில் பெண்களின் பங்களிப்பு குறித்தெல்லாம் இந்தியச் சமூகம் விழித்துப் பார்த்தது.

பெண்களிடம் உள்ள தலைமைப் பண்பை வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் வெளிப்படுத்தினர். இது பின் நாட்களில் இந்தியாவில் மலர இருந்த பெண்ணுரிமை இயக்கத்தை அடையாளப்படுத்தியது. திருவாளர்கள் நாராயணியம்மாள், மீனாட்சியம்மாள், திருமலையம்மாள், நாகம்மாள் (பெரியார் மனைவி) போன்றோர் முன்வரிசை களப்போராளிகளாக நின்றனர். போராட்டத் தலைவர்களின் மனைவிகளாக இவர்கள் அறியப்பட்டாலும், அதை அடையாளப்படுத்தத் தேவையில்லாத செயல் வேகத்தையும், ஈடுபாட்டையும் அவர்கள் கொண்டிருந்தனர்.

ஒடுக்கப்பட்டவர்களின் உரிமைக்கான ஓர் எழுச்சியை, கேரளாவில் மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் விதைத்த பெருமையும் வைக்கம் போராட்டத்திற்கு உண்டு. இதன் பின்விளைவாக, 1972 ஆம் ஆண்டில், மராட்டியத்தில் "இந்திய தலித் சிறுத்தைகள்" இயக்கம் (Dalit Panther of India) உருவானதைக் கூறலாம். தொடர்ந்து இந்தியா முழுமையும் தீண்டாமைக்கெதிரான உரிமைக் குரல்கள் பலமாக ஒலித்தன.

மாநில, ஒன்றிய அரசியலைப் பொறுத்து ஒடுக்கப்பட்ட, பட்டியல் இனத்தவரின் உரிமைக் குரல்கள், அரசியல் கட்சிகளாகப் பரிணமித்து இந்திய அரசியலில் தங்கள் இன்றியமையாத இருப்பை

உறுதிப்படுத்தின. இந்தப் பரிணாமத்தால், தலித் இயக்கங்களையும் நோக்கி மதவாத சக்திகளின் ஆக்டோபஸ் கரங்கள் படரத் தொடங்கின. வைதிகத்தின் சாதி, மத, சனாதன எழுச்சிகளின் விளைவாக, இருபத்தோராம் நூற்றாண்டு, "மதவெறி மறுமலர்ச்சி" அல்லது "வலதுசாரி பயங்கரவாத" ஆண்டாக இந்தியாவில் மலர்ந்தது.

"வைக்கம் போராட்டக் காலத்தில் கோயில் நுழைவுக்காகப் போராடாமல் அப்படியே விட்டிருந்தால் நாங்கள் எல்லாம் மதம் மாறி இருப்போம்; குறிப்பாக, பௌத்தம் தழுவி இருப்போம்; ஆனால் "கோயில் நுழைவு" என்ற 'கருணை'யைச் செலுத்தி தலித்துகளை இன்னும் இந்துமத அடிமைகளாகவே நீடிக்க வைத்து விட்டார்கள்" என்று தலித் இயக்கங்கள் தற்போது கூறுவதில் உள்ள உண்மை, வெறுமனே கடந்து விடக் கூடியதல்ல...

இந்திய சமூக, அரசியல் வரலாற்றில், 1925 ஆம் ஆண்டு மிக முக்கியமான ஆண்டாக அமைந்திருக்கிறது. ஆட்சியாளர்களும், அரசாங்கமும் பிரிட்டிஷ் ஆளுகையின் கீழிருக்க, வலதுசாரி, இடதுசாரி இயக்கங்கள் உருவான ஆண்டாக அது அமைந்து போனது. பிரிட்டிஷ்காரர்களால் அரசாங்கத்திற்குச் 'சலாம்' போடும் வலதுசாரி இயக்கமாக 1885 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட காங்கிரஸ் இயக்கம், பின்னர் இந்தியர்களின் அரசியல் கட்சியாக உருவெடுத்தது.

பார்ப்பனர் அல்லாத இடதுசாரிச் சிந்தனையாளர்களால் தீண்டாமைக்கெதிரான கருத்துகளும், போராட்டங்களும் அவ்வப்போது காங்கிரஸ் கட்சியால் முன்னெடுக்கப்பட்டும், காங்கிரசின் பார்ப்பனிய மேலாதிக்கம் தொடர்ந்து வலதுசாரிச் சிந்தனையாளர்களாலேயே ஆளப்பட்டு வந்தது. அதேநேரம், "காங்கிரஸ் சோஷலிசம்" என்னும் பூச்சாண்டி முகமூடியின் மூலம், ஒரு சில இடதுசாரிகளையும் கவர்ந்து, தனக்குள் சிறையிட்டு வைத்தது.

1925 ஆம் ஆண்டில், கான்பூரில், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் தலைமையில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் மாநாடு மூலம், இந்தியாவில் உண்மையான இடதுசாரிச் சிந்தனைகள் பெருமளவில் இயக்கமாக மாறத் தொடங்கின.

1925 ஆம் ஆண்டில், காங்கிரசில் இருந்து விலகிய பெரியார், 'குடியரசு' இதழ் வழி, "சுயமரியாதை இயக்கம்" என்னும் பார்ப்பனியத்திற்கு எதிரான இடதுசாரி இயக்கத்தைக் கட்டமைத்தார். பொதுவுடைமை இயக்கத்தின் ஒலிபெருக்கியாகச் சுயமரியாதை இயக்கம் சென்னை மாகாணத்தில் இயங்கியது.

1925 ஆம் ஆண்டில் டாக்டர் அம்பேத்கரின் அரசியல் நுழைவு, சாதிய ஏற்றத்தாழ்வு மற்றும் இந்துத்துவ மேலாதிக்கத்திற்கு எதிரான இடதுசாரி இயக்கமாகப் பின் நாட்களில் வளர்ந்து வந்தது. 1924 ஆம் ஆண்டின் வைக்கம் போராட்டம், டாக்டர் அம்பேத்கரைப் பெரிதும் ஈர்த்திருந்தது. அதுவே 1927 ஆம் ஆண்டில் மகத் குளத்தில் நீரேந்தும் உரிமைப் போராட்டத்தின் உந்து சக்தியாக அமைந்தது. (outlookindia.com/V. Geetha, 21.6.2017 - www.forwardpress.in).

ஆனால், அதே 1925 ஆம் ஆண்டில் முழுமையான வலதுசாரி, பாசிச இயக்கமாக ஆர்.எஸ்.எஸ். என்னும் இந்துத்துவ இயக்கம், அமைப்பு ரீதியாகத் தொடங்கப்பட்டு, இன்று இந்து ராஷ்டிரமாக, இந்து பயங்கரவாதமாக, மிகவும் வலுவாகக் கால் ஊன்றி நிற்கிறது. இனி பாசிசம் என்னும் மதவாதம் (வலதுசாரி) வெல்லுமா அல்லது சமத்துவம் (இடதுசாரி) தழைக்குமா என்ற மில்லியன் டாலர் கேள்விக்கான பதில், மேற்கூறிய அத்தனை இயக்கங்களின் நூறாவது ஆண்டான 2024 மலரும் போதே தெரிந்து விட்டது.

இருபத்தோராம் நூற்றாண்டு முழுமைக்குமான சமூக, அரசியல் நிலைப்பாட்டின் புதிய அரசியல் அமைப்பு, வைக்கம் போராட்டத்தின் விதையா அல்லது பழைமைச் சனாதனத்தின் வெற்றியா என்பதை இனிவரும் காலம் தீர்மானிக்கலாம்.

"இடதுசாரியும், வலதுசாரியும்"

மன்னராட்சி, காலனித்துவ ஆட்சிகளுக்குப் பிறகு இன்றிருக்கும் மக்களாட்சி நாடுகளின் மைய அரசியல் இடதுசாரி, வலதுசாரித் தன்மையுடைய கட்சிகள், அமைப்புகள் என்று அதிகாரத்தைக் கைப்பற்றும் மன்னன் - தேவன் இடைப் பிரச்சனைகளாக ஆக்கப்பட்டு விட்டன. இடதுசாரி அரசியல் (left-wing politics) என்பது கருத்தியல் நோக்கில் சமூகச் சமத்துவத்தை ஏற்றுக் கொள்ளுகின்ற, சமூக ஏற்றத்தாழ்வுக்கும், சமூகச் சமத்துவமின்மைக்கும் எதிரான அரசியல் நோக்கு ஆகும்.

ஒரு காலத்தில் அரசர்களுக்கு எதிராகத் தொழிலாளர்கள் அரசியல் உரிமை வேண்டும் என்று போராடினார்கள். அதனால் தொழிலாளர்களும் அரச சபையில் பங்கேற்கும் தவிர்க்க இயலாத சூழ்நிலை

ஏற்பட்டது. அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், உழைக்கும் மக்களோடு சேர்ந்து அமர்வதை எதிர்த்தனர். இப்பிரச்சினையால், அதிகார வர்க்கம் வலது பக்கம் அமரவும், உழைக்கும் மக்கள் இடது பக்கம் அமரவுமான வழக்கம் கட்டைப் பஞ்சாயத்தின் தீர்ப்பானது. காலப்போக்கில் யாரெல்லாம் தொழிலாளிகள், விவசாயிகள் என்று உழைக்கும் வர்க்கத்தினருக்காகக் குரல் கொடுக்கிறார்களோ அவர்கள் இடது சாரிகள் என்று அழைக்கப்பட்டனர்.

இடதுசாரி அரசியல் என்பது குடியரசு, சோசியலிசம் மற்றும் சிவில் உரிமைகள் ஆகியவற்றைக் குறிக்கிறது. சுருக்கமாக இடதுசாரி என்பது, ஆள்பவர்களை விட மக்களின் நலனே தலையானது என்னும் அரசியல் கோட்பாட்டைக் கொண்டது. மக்களை ஏழ்மையிலிருந்து விடுவிக்க, மக்களுக்கு நேரடி உதவி மற்றும் வளங்களை அனைவருக்கும் சமமாகப் பகிர்தலும் இதன் கோட்பாடுகளில் அடங்கும்.

வலது சாரி அரசியல் *(right-wing, rightist)* என்பது வழிவழியாக (மரபு வழியாக) நேர்நோக்கு முகமாக நிலைநிறுத்தும் அரசியல் கோட்பாட்டினைக் கொண்டு செயல்படுபவர்களையும், சமயக் கோட்பாட்டினை அதன் குருமார்கள் வழிநின்று செயற்படுத்தும் அரசியல்வாதிகளையும் குறிப்பதாகும். வலதுசாரி, வலது சார்புடையவர் என்ற சொல் பிரஞ்சுப் புரட்சியின் காலகட்டத்தில் நாடாளுமன்றத்தில் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இருக்கைகளைக் குறிக்கும். அரசரின் முடியாட்சி, உயர்வகுப்பார் என்று அழைத்துக் கொள்ளும் கூட்டமும், ஆலயங்களில் அதிகாரம் படைத்தவர்களாகக் கருதும் கூட்டமும் வலதுபுறம் ஒதுக்கப்பட்ட பகுதியில் அமர்வதால் அவர்கள் வலதுசாரிகள். முதலாளிகளுக்காக, தற்போது கார்ப்பரேட்டுகளுக்காகப் பேசுபவர்கள் வலதுசாரிகள் என்றும் ஆகிவிட்டது. வலதுசாரி அரசியல் என்பது நிலபிரபுத்துவ மற்றும் அரச நலன்களுக்கான அரசியலைக் குறிக்கும்.

சுருக்கமாக வலது சாரி என்பது, நாட்டு மக்களை விட ஆட்சியில் இருப்பவர் நலன், பெருமுதலாளிகள் நலன்களுக்காகக் குரல் கொடுக்கும் கோட்பாடு. மக்களை ஏழ்மையிலிருந்து விடுவிக்க வளங்களைப் பகிர்வதை விட, வளங்களைச் சிறந்த முதலாளிகளுக்குச் சலுகையில் அளித்து, தொழில்வளம் பெருக்கி, அதன் மூலம் வறுமையை ஒழிக்கலாம் என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் செயல்படுவதாகும். இடதும் சரி, வலதும் சரி என்ற இரண்டையும் ஏற்கும் போக்கு இப்போது வளர்ந்து வருகிறது.

"இடதுசாரிகளின் ஜெய்ஸ்ரீராம் முழக்கம்"

டாக்டர் அம்பேத்கர் உருவாக்கிய இந்திய அரசியல் அமைப்பு, மக்களாட்சிக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதால், இங்கும் இடதுசாரி, வலதுசாரிப் போக்குகள் நிறையவே உண்டு. குறிப்பாக, இந்தியா கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பிறகு மதம், சாதிகளாலேயே ஆளப்பட்டு வந்ததால் நாடே வலதுசாரி முறையில் பழகிக் கொண்டது. இந்திய அரசியல் சட்டம் மட்டுமே நம் நாட்டை மதச்சார்பற்ற நாடாக வெளி உலகத்திற்கு அறிவித்தது.

டாக்டர் அம்பேத்கர், நேரு, பெரியார், அண்ணா, ஜோதிபாசு போன்ற தலைவர்களால் இடதுசாரி எண்ணங்களும், அமைப்புகளும், கட்சிகளும் வளர்ந்தன. இந்தியாவில் மேற்கு வங்காளம், கேரளா மற்றும் திரிபுரா ஆகியவை இடது சாரிக் கூட்டணிகளைக் கொண்ட மாநிலங்கள். இம்மூன்று மாநிலங்களிலும் இடதுசாரிக் கட்சிகள் பலம் வாய்ந்து விளங்குகின்றன.

மேற்கு வங்காளத்தில் இடதுசாரிக் கூட்டணியில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சியம்) ஆகியவை முன்னிலை வகிக்கின்றன. "மேற்கு வங்கத்தில் நிலச் சீர்த்திருத்தம் செய்தவர்கள் இடதுசாரிக் கட்சியினர். மக்களை அரசியல் மயப்படுத்தியதும் அவர்கள்தான். ஆனால், அவர்களே விவசாயிகளிடமிருந்து நிலங்களைக் கைப்பற்ற நந்திகிராம், சிங்கூரில் வன்முறையைக் கையாண்ட போது ஒட்டுமொத்த மக்களும், அபர்ணா சென், கௌதம் கோஷ் போன்ற முற்போக்காளர்களும் இடதுசாரிகளுக்கு எதிராகத் திரும்பினார்கள். மேற்கு வங்கத்தில் `இன்குலாப் ஜிந்தாபாத்' என முழக்கமிட்டுக்கொண்டிருந்த கம்யூனிஸ்ட் தொண்டர்கள், தற்போது `ஜெய் ஸ்ரீராம்' என்று முழக்கமிடும் நிலைக்கு இடதுசாரிகளே காரணம்" என்கின்றனர் அரசியல் அவதானிகள்.

திரிபுரா மாநில இடதுசாரிக் கூட்டணியில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சியம்), இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, புரட்சி சமதர்மக் கட்சி (சோசலிசம்), அனைத்திந்திய முன்னேற்ற முன்னணி (பார்வர்டு பிளாக்) ஆகியவை முன்னிலை வகிக்கின்றன. ஆனால் தற்போது அதிகாரத்தை வலதுசாரிகளுக்குப் (பிஜேபி கூட்டணிக்குப்) பறி கொடுத்து விட்டு நிற்கின்றன.

இந்தியாவிடமிருந்து அந்நியப்பட்டு இருந்தபோது திரிபுராவில் இடதுசாரிகளால் வெல்ல முடிந்தது. ஆனால், இந்தியத்தை உள்வாங்கத் தொடங்கிய அம்மாநில மக்களுக்குப் புதிய காட்சிகள் விரிந்தன.

அவர்களின் எதிர்பார்ப்புகளும் மாறின. அதற்கேற்ற மாற்றுச் செயல்திறன் இல்லாமல் போனது அங்கு இடதுசாரிகளின் தோல்விக்குக் காரணம்.

கேரள மாநிலத்தில் ஆட்சி ஆமைத்துள்ள மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சிகளின் கூட்டணி, இடது மக்களாட்சி முன்னணி என்று அழைக்கப் படுகின்றது. சர்வதேச அளவில் ஆயுதப் புரட்சியின் மூலம் ஆட்சியைக் கைப்பற்ற இடதுசாரிகள் முயன்று கொண்டிருந்த போது, தேர்தல் அரசியலில் புகுந்து, இடதுசாரிகள் முதன்முறையாக ஆட்சியைக் கைப்பற்றியது கேரளத்தில் தான். கேரளாவைப் பொறுத்தவரை அங்கு காங்கிரசுக் கட்சியும், இடதுசாரிகளும் மாறி மாறி அதிகாரத்திற்கு வருகின்றனர்.

தமிழ் நாட்டில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சி, இந்தியப் பொதுவுடைமைக் கட்சி (மார்க்சியம்) ஆகியவை தனித்துச் செயல்படுகின்றன. 1964ல் இரு கட்சிகளும் பிளவுபட்டதிலிருந்து பெரும்பாலும் தேர்தல்களில் வெவ்வேறு அணிகளில் இருந்துள்ளன. 2001லிருந்து தேர்தல்களில் ஒரே கூட்டணியில் இவை போட்டியிடுகின்றன. தேசிய அரசியலில் மட்டும் ஓரணியாகச் செயல்படுகின்றன.

தமிழ்நாட்டில் இடதுசாரிகளுக்கு மாற்றாகத் திராவிட இயக்கத்தை ஓரளவு பொருத்திப் பார்க்க முடியும். தன் கொள்கைகளில் சிறிதளவு நீர்த்துப் போய்க் கொண்டிருக்கும் திராவிட இயக்கத்தின் இன்றைய சூழ்நிலை பெரும் விவாதப் பொருளாகி வருகிறது. இடதுசாரிகள் என்று எப்போதும் அடையாளப் படுத்தப்படும் பொதுவுடைமை இயக்கங்களில் பார்ப்பனிய ஊடுருவல், இடதுசாரிக் கோட்பாட்டையும் நீர்த்துப் போகச் செய்து விட்டது என்பதும் கசப்பான உண்மை.

இந்திய அரசியல் குறித்து பிபிசி செய்தி நிறுவனம் இப்படிக் கூறுகிறது. "இடதுசாரி கட்சிகள் அமைப்பை விரிவாக்கத் தவறிவிட்டன. சந்தையைத் திறந்து விட்ட பின்னர் பல மாற்றங்கள் பன்னாட்டு அளவில் நடந்தன. அதற்கேற்பத் திட்டங்களை வகுக்க இடதுசாரிக் கட்சிகள் தவறிவிட்டன. தொழிற்சங்கங்கள்தான் இடதுசாரிகளின் பலம். ஆனால், தொழில்துறை மாறத் தொடங்கிய பின்னர், தொழில் சங்கங்கள் ஆட்டம் காணத் தொடங்கி விட்டன. மாற்றங்களுக்கு ஏற்றவாறு இடதுசாரிகள் மாறவில்லை. இது தேர்தல் அரசியலில் உள்ள இடதுசாரிக் கட்சிகளின் வெற்றி தோல்விகளிலும் தாக்கம் செலுத்தத் தொடங்கி விட்டது" என்கிறது பிபிசி (bbc.com).

"சர்வதேச அளவிலான இடதுசாரிகளின் இருப்பு கேள்விக்கு உள்ளாகி இருக்கிறது. உலக அளவில் இடதுசாரிச் சிந்தனைகளின் வீழ்ச்சியின் இன்னொரு பக்கமாக இனவாதம், மத வெறுப்பு பாசிசம், தீவிர தேசியவாதம், வலுவான தலைவர் எனும் கூப்பாடு ஆகியன இடம் பிடித்துக் கொண்டன. இதன் காரணமாக ஜனநாயக நிறுவனங்கள் சிதைகின்றன. அதுதான் இந்தியாவிலும் நடக்கிறது. "இடதுசாரிகளின் எண்ணிக்கை நாடாளுமன்றத்தில் குறைந்ததால் நமக்குத்தான் இழப்பு" என்கிறார் பேராசிரியர் அ. மார்க்ஸ்.

இன்றைய அளவில் I.N.D.I.A. (Indian National Developmental Inclusive Alliance) கூட்டணி இடதுசாரி அடையாளமாகத் தோற்றம் அளிக்கிறது. ஆனால் கூட்டணியில் உள்ள அனைத்துக் கட்சிகளும் இடதுசாரிகள் அல்ல. இந்தியா என்னும் நாட்டை I.N.D.I.A. கூட்டணி மீட்க வேண்டுமானால் உண்மையான இடதுசாரிக் கோட்பாடுகளை அக்கூட்டணியினர் முழுவதுமாக உள்வாங்கிச் செயல்பட்டால் மட்டுமே இயலும். மேலும், தேர்தல் ஆணையத்தின் உதவியுடன் வாக்குத்திருட்டில் பிஜேபி அரசு ஈடுபட்டு வருவது உலகின் மிகப்பெரிய மோசடி என்றாலும், அதை எதிர்த்து வெல்வது என்பது ஆகப்பெரிய சவாலாக இருக்கும். இதற்கு எதிர்க் கட்சிகளின் ஒற்றுமை என்பது மிக முக்கியம். இல்லையெனில் புதிய பாராளுமன்றம், புதிய குற்றவியல் சட்டங்கள், புதிய சனாதனங்கள், புதிய அரசியல் அமைப்பு (ஆர். எஸ். எஸ்.), புதிய தலைநகரம் (வாரணாசி), புதிய மாநிலங்கள், புதிய யூனியன் பகுதிகள், புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் (சாமியார்கள்) என்று மதவெறி மனநிலை கொண்ட புதிய "பாரதம்" உருவாவது தவிர்க்க இயலாததாகி விடும். இந்தியா கூட்டணி என்னும் இடதுசாரி கூட்டணி வென்றால்தான் இந்தியாவை மக்களாட்சி நாடாக வாழவைக்க முடியம்.

(நிறைவு)

முனைவர் சிவ இளங்கோ,
எண்: 6, கவிஞர் புதுவைச்சிவம் வீதி
வெங்கட்ட நகர்
புதுச்சேரி - 605011
பேசி: 9994078907
Mail: ilangosiva57@gmail.com

தமிழ்நாட்டின் தொழில்துறை மறுமலர்ச்சி (2021-2025) - வெற்றிச்செல்வன் மாணிக்கம்

கோவிட்-19 தொற்றுநோயின் கடுமையான பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டு, 2021 முதல் 2025 வரை, முதல்வர் மு.க ஸ்டாலினின் தலைமையில் தமிழ்நாட்டின் தொழில்துறை மீண்டு, குறிப்பிடத்தக்க மறுமலர்ச்சியை அடைந்துள்ளது. இந்த மறுமலர்ச்சி சீர்மிகு நிர்வாகம் [strategic governance], இலக்குசார்ந்த முதலீடு [Focused investment] மற்றும் "திராவிட மாதிரி 2.0" இன் தனித்துவமான சமூக-பொருளாதார கட்டமைப்பிற்கு ஒரு சான்றாகும்.

2021க்கு முந்தைய பொருளாதார தேக்கம்

2021 ஆம் ஆண்டுக்கு முன்பு, மாநிலத்தின் தொழில்கள் தடுமாற்றத்தில் இருந்தன. தொற்றுநோய் பரவலான காலங்களில், தொழிற்சாலைகள் மூடப்பட்டன, விநியோகச் சங்கிலி சீர்குலைத்தது மற்றும் குறிப்பிடத்தக்க வேலை இழப்புகளுக்கு வழிவகுத்தது. பொருளாதாரத்தின் முதுகெலும்பான MSMEகள் [சிறு குறு தொழில்கள்] கடன் நெருக்கடியை எதிர்கொண்டன மற்றும் பராமரிக்க போராடின. ஆட்டோமொபைல்கள் மற்றும் ஜவுளி உள்ளிட்ட முக்கிய உற்பத்தித் துறைகள் கணிசமான மந்தநிலையை சந்தித்தன, இது மாநிலத்தின் பொருளாதார எதிர்காலம் குறித்து நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தியது.

தலைமைத்துவம் மற்றும் முதலீட்டாளர் ஈடுபாடு

முதலமைச்சர் மு.க **ஸ்டாலின்** மற்றும் **தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோரின்** தீர்க்கமான தலைமையுடன் இந்த திருப்பம் தொடங்கியது . முதலீட்டாளர்களுடனான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புவதில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. இது விரிவான சர்வதேச தொடர்பு, முக்கிய உலகளாவிய முதலீட்டாளர் மாநாடு ஏற்பாடு செய்தல் மற்றும் அதிகாரத்துவ செயல்முறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான அர்ப்பணிப்பு [streamlining bureaucratic processes] ஆகியவை அடங்கும்.
இந்த முயற்சிகள் முதலீட்டு உறுதிமொழிகள் விரைவாக களத்தில் உள்ள திட்டங்களாக மாற்றப்படுவதை உறுதி செய்தன, இது நம்பிக்கையை மீட்டெடுப்பதில் ஒரு முக்கிய காரணியாகும்.

அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோவில் வணிகத் தலைவர்களுடனான சந்திப்பின் போது தமிழக முதல்வர் மு.க.. ஸ்டாலின்.

திராவிட மாடல் அரசாங்கத்தின் முயற்சிகள்

நலிந்த தொழித்துறையை மீட்டெடுக்க, பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த நடவடிக்கைகள், தொழித்துறையை மீட்டுருவாக்கம் செய்தது.

- **தமிழ்நாடு தொழில்துறை கொள்கை 2021-2025 [Tamil Nadu Industrial Policy 2021-2025] :** இந்தக் கொள்கை ₹10 லட்சம் கோடி முதலீடுகளை ஈர்ப்பதற்கும், 20 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் லட்சிய இலக்குகளை நிர்ணயித்துள்ளது. இது புதிய துறைகளுக்கு சலுகைகளை வழங்கியது மற்றும் வணிகம் செய்வதை எளிதாக்க டிஜிட்டல் மயமாக்கப்பட்ட சூழல்களை ஏற்படுத்தியது.

- **மேம்படுத்தப்பட்ட MSME கொள்கைகள்:** சிறு குறு தொழில்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. தொழில் தொடங்க தேவையை நிலத்தை வழங்குவதை எளிதாக்கி, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்தது.

- **உள்கட்டமைப்பு மேம்பாடு:** SIPCOT மற்றும் TIDCO போன்ற மாநில தொழில்துறை அமைப்புகள் துறை சார்ந்த தொழில்துறை பூங்காக்கள் மற்றும் மையங்களை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தன.

- **கோவிட்-19 நிவாரண நடவடிக்கைகள்:** பணி மூலதன நிவாரணம் மற்றும் தொழிலாளர் பாதுகாப்பு நெறிமுறைகள் உள்ளிட்ட உடனடி ஆதரவு, தொற்றுநோயின் இறுதி கட்டங்களைச் சமாளிக்க தொழில்களுக்கு உதவியது.

- **புதுமைகளை ஊக்குவித்தல்:** மாநிலத்தின் பொருளாதாரத்தை எதிர்காலத்திற்கு பாதுகாப்பானதாக மாற்றுவதற்காக, தொழில் 4.0 தொழில்நுட்பங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் வலுவான தொடக்கநிலை சுற்றுச்சூழல் அமைப்பை அரசாங்கம் தீவிரமாக ஊக்குவித்தது.

தொழில்துறை மீட்சி: ஒரு புள்ளிவிவர கண்ணோட்டம்

மேற்சொன்னன நடவடிக்கைகள், சிறப்பு கவனம் மூலம், கொரோனா நோய்த்தொற்றால் இழந்து போயிருந்த தொழில்கள், மறுமலர்ச்சி அடைந்தன, என்பதை கீழ் காணும் புள்ளிவிவரங்கள் மூலம் உறுதி செய்யலாம்.

தொழில்துறை வளர்ச்சி: கோவிட்-க்கு முன்னும் பின்னும்

அளவிடு	கோவிட் காலத்திற்கு முன் (2019)	கோவிட் காலம் (2020-21)	கோவிட்-க்குப் பிந்தைய (2022-25)
தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன	35	12	312 -
உருவாக்கப்பட்ட வேலைகள் (லட்சம்)	1	5	31
MSME ஆதரவு (₹ கோடி)	1,000	700	1,381
முதலீடுகள் (₹ லட்சம் கோடி)	6.2	3.5	9.74
ஏற்றுமதி வளர்ச்சி (%)	8	-4	12

கோவிட்-க்கு பிந்தைய காலம் (2022-2025) தமிழ்நாட்டின் தொழில்துறையில் வியத்தகு மீட்சியைக் கண்டது. கோவிட்-க்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடும்போது, புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்ட எண்ணிக்கை கிட்டத்தட்ட பத்து மடங்கு அதிகரித்தது , மேலும் மொத்த முதலீடுகள் குறிப்பிடத்தக்க அளவில் 57% வளர்ச்சியைக் கண்டன.

இதன் விளைவாக வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டது, கோவிட்-க்கு பிந்தைய காலத்தில் 31 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன, இது கோவிட்-க்கு முந்தைய புள்ளிவிவரங்களை விட 30 மடங்கு அதிகமாகும்.

திருப்புமுனை: உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாடு

தொற்றுநோய்க்குப் பிந்தைய மந்தநிலையைத் தொடர்ந்து, மாநிலத்தின் தற்போதைய தொழில்துறை மறுமலர்ச்சி, **முதலமைச்சர் எம்.கே. ஸ்டாலின்** மற்றும் **தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா** ஆகியோரின் **முன்முயற்சியுடன் கூடிய தலைமையால் இயக்கப்படுகிறது** . அவர்களின் உத்தி, வலுவான சர்வதேச அணுகலை மையமாகக் கொண்டது, இது மிகவும் வெற்றிகரமான **உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாடு (GIM) 2024 இல் உச்சக்கட்டத்தை அடைந்தது** , இது முதலீட்டு திட்டங்களில் சாதனை அளவில் **₹ 6.64 லட்சம் கோடியைப் பெற்றது** . முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீண்டும்

கட்டியெழுப்புவதிலும் திட்ட மாற்றத்தை விரைவுபடுத்துவதிலும் இந்த தீர்க்கமான நடவடிக்கை முக்கியமானது என்பதை நிரூபித்தது.

சாதனை முதலீட்டு உறுதிமொழிகளைப் பெற்ற 2024 ஆம் ஆண்டு உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகிறார்.

வின்ஃபாஸ்ட் மின்சார வாகன தொழிற்சாலை

- **புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது: *2023* ஆம் ஆண்டின் தொடக்கத்தில்.**
- **ஆலை கட்டி முடிக்கப்பட்டது: *ஜூலை 2025.***
- **முதல் கார் வெளியிடப்பட்டது: *ஆகஸ்ட் 3, 2025.***
- **வேலைவாய்ப்பு: *3,500* நேரடி வேலைகளும் *5,000*க்கும் மேற்பட்ட மறைமுக வேலைகளும் உருவாக்கப்பட்டுள்ளன.**
- **கவனம்: உள்ளூர் பணியமர்த்தல், *MSME* விநியோகச் சங்கிலி கூட்டாண்மைகளை வளர்ப்பது மற்றும் தீவிரமான பணியாளர் திறன் மேம்பாடு ஆகியவற்றில் முக்கியத்துவம்.**

தூத்துக்குடியில் உள்ள *VinFast EV* ஆலை, தமிழ்நாட்டின் தொழில்துறை நவீனமயமாக்கல் மற்றும் பசுமை தொழில்நுட்பத் *[EV]* தலைமைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பிறகு மூன்று ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கப்பட்ட தொழிற்சாலை, ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில், உள்ளூர் தொழில்களை மேம்படுத்துவதில் மற்றும் நிலையான உற்பத்திக்கான தரநிலைகளை அமைப்பதில் முக்கிய பங்கு வகித்தது.

எதிர்காலத்தை வலுப்படுத்துதல்: முக்கிய துறை மாற்றம்

பாரம்பரிய உற்பத்தியைத் தாண்டி உயர் தொழில்நுட்பம் [high tech] , பசுமை ஆற்றல்[Greeen Energy] மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் [Advanced Electronics] துறைகளுக்கு நகர்ந்து, எதிர்காலத்தை மையமாகக் கொண்ட துறைகளில் தேசிய அளவில் முன்னோடியாக தமிழகத்தை அரசாங்கம் வெற்றிகரமாக நிலைநிறுத்தியுள்ளது.

மின்சார வாகனங்கள் (EV) & மேம்பட்ட பேட்டரி உற்பத்தி [Electric Vehicles (EV) & Advanced Battery Manufacturing]

தமிழ்நாடு ***இந்தியாவின் மின்சார வாகனத் தலைநகராக தன்னை உறுதியாக நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. தனிப்பட்ட கொள்கைகள் (TN EV கொள்கை 2023*** *போன்றவை), SGST வரி விலக்கு, முத்திரை வரி விலக்கு மற்றும் பயிற்சி மானியங்கள் உள்ளிட்ட குறிப்பிடத்தக்க, கொள்கைகள் மூலம், முழுமையான மின்சார வாகன மதிப்புச் சங்கிலியை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளது* ***வின்ஃபாஸ்டின்*** *தூத்துக்குடி உற்பத்தி ஆலை திறப்பு விழா ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும் . இது GIM 2024 இலிருந்து* ***₹ 16,000 கோடி உறுதிமொழியை*** *நிறைவேற்றியது. சாதனை நேரத்தில் உற்பத்தியைத் தொடங்கிய இந்த ஆலை, அரசாங்கத்தின்* ***"வணிகம் செய்வதை எளிதாக்குதல்"*** *செயல்திறனையும் தென் மாவட்டங்களை மேம்படுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டையும் எடுத்துக்காட்டுகிறது.*

மேம்பட்ட மின்னணுவியல் & உயர் தொழில்நுட்ப உற்பத்தி [Advanced Electronics & High-Tech Manufacturing]

இந்தியாவில் தமிழ்நாடு முதன்மையான மின்னணு ஏற்றுமதியாளராக உள்ளது, மேலும் மேம்பட்ட மின்னணுவியல் மற்றும் குறைக்கடத்திகளில் முதலீடுகளை ஈர்ப்பதில் கவனம் செலுத்தப்படுகிறது. ***தமிழ்நாடு குறைக்கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் கொள்கை 2024 உட்பட மாநிலத்தின் கொள்கைகள்,*** *திறமையான திறமைக் குழுவை உருவாக்குவதையும்,* ***டாடா எலக்ட்ரானிக்ஸ் மற்றும் பெகாட்ரான்*** *போன்ற நிறுவனங்களை ஈர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.*

புதுப்பிக்கத்தக்க ஆற்றல் (RE) மற்றும் பசுமை ஹைட்ரஜன் [Renewable Energy (RE) and Green Hydrogen]

உலகளாவிய தூய்மையான எரிசக்தியை நோக்கிய உந்துதலுடன், மாநிலம் RE மற்றும் பசுமை ஹைட்ரஜன்/அம்மோனியாவில் முதலீடுகளை தீவிரமாக ஈர்த்துள்ளது. ***அதானி குழுமமும்*** *டாடா* ***பவரும்*** *பசுமை எரிசக்தி திட்டங்களுக்கு கணிசமான உறுதிமொழிகளைச் செய்துள்ளன, தமிழ்நாட்டின் கடலோர மற்றும் காற்றாலை வளங்களைப் பயன்படுத்தி ஒரு* ***பசுமை எரிசக்தி சக்தி நிலையமாக மாறுகின்றன*** *.*

துறை	இடங்கள்	முதலீடுகள் (₹ லட்சம் கோடி)	உருவாக்கப்பட்ட வேலைகள் (லட்சம்)	முக்கிய இயக்கிகள்
மின்சார வாகனங்கள் & பேட்டரிகள்	**தூத்துக்குடி** , சென்னை, கிருஷ்ணகிரி , ஓசூர்	1.5	5	வின்ஃபாஸ்ட் , கொள்கை ஊக்கத்தொகைகள்
ஜவுளி மற்றும் ஆடைகள்	**திருப்பூர்** , ஈரோடு, கரூர், கோவை, சேலம்	1.2	4.5	நவீனமயமாக்கல், ஏற்றுமதி ஊக்குவிப்பு

துறை	இடங்கள்	முதலீடுகள் (₹ லட்சம் கோடி)	உருவாக்கப்பட்ட வேலைகள் (லட்சம்)	முக்கிய இயக்கிகள்
மின்னணு சாதனங்கள் உற்பத்தி	**சென்னை**, திருவள்ளூர் (மணல்லூர், பிள்ளைப்பாக்கம்), ஓசூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர்	1	4	திறமையான உழைப்பு, உலகளாவிய விநியோகச் சங்கிலிகள்
புதுப்பிக்கத்தக்க எரிசக்தி	**திருப்பூர்**, தூத்துக்குடி, கடலூர், கன்னியாகுமரி	0.9	3.5	சூரிய சக்தி, காற்று சக்தி மற்றும் பசுமை தொழில்நுட்பங்கள்
கப்பல் கட்டுதல் மற்றும் கடல்சார்	**தூத்துக்குடி**, சென்னை (காட்டுப்பள்ளி), திருவள்ளூர், கடலூர்	0.75	3	துறைமுகங்கள்
***MSME*கள்**	**கோவை**, திருப்பூர், கன்னியாகுமரி, திண்டுக்கல், சேலம், விருதுநகர்	0.8	6	அரசாங்க ஆதரவு திட்டங்கள்
ஐடி மற்றும் ஃபின்டெக்	**சென்னை**, கோவை, மதுரை, திருச்சிராப்பள்ளி	0.5	2.5	அறிவுசார் பொருளாதாரக் கவனம்

தெற்கு மாவட்டமான தூத்துக்குடியில் ஒரு முதன்மைத் திட்டத்துடன், மாநிலம் குறிப்பிடத்தக்க முதலீடுகளை வெற்றிகரமாக ஈர்த்தது மற்றும் மின்சார வாகனங்கள் துறைகளில் மில்லியன் கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கியது.

திருப்பூரில் ஜவுளி மற்றும் சென்னை மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் மின்னணுவியல் **போன்ற பாரம்பரிய சக்தி நிலையங்கள் தொடர்ந்து செழித்து வளர்ந்தன, அதே நேரத்தில் கோயம்புத்தூர்** மற்றும் **சேலம்** போன்ற மாவட்டங்களில் உள்ள *MSME* கிளஸ்டர்கள் வளர்ச்சி பரந்த அடிப்படையிலானதாகவும், மாநிலம் முழுவதும் உள்ள பல்வேறு சமூகங்களுக்கு அணுகக்கூடியதாகவும் இருப்பதை உறுதி செய்தன.

பரந்தூர் விமான நிலையம்

தொழில்துறை உந்துதலைத் தக்கவைக்க, சென்னைக்கு இரண்டாவது விமான நிலையத்தை அமைப்பது உட்பட முக்கியமான உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு மாநில அரசு முன்னுரிமை அளித்துள்ளது. தற்போதுள்ள சென்னை சர்வதேச விமான நிலையம் *(MAA)* அதன் நிறைவுற்ற திறனை நெருங்கி வருகிறது, மேலும் வேகமாக அதிகரித்து வரும் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தை ஈடுகட்ட ஒரு புதிய **விமான நிலையம்** அவசியம். காஞ்சிபுரம் மாவட்டத்தில் முன்மொழியப்பட்ட **பரந்தூர் விமான நிலையம்** புதிய இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

சென்னை பரந்தூரில் முன்மொழியப்பட்ட விமான நிலையம்

*₹ 20,000 கோடிக்கும் அதிகமான மதிப்பீட்டில் இந்த மிகப்பெரிய திட்டம் நான்கு கட்டங்களாக உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது இரண்டு இணையான ஓடுபாதைகளைக் கொண்டிருக்கும் மற்றும் முழுமையாக செயல்பட்டவுடன் **ஆண்டுதோறும் 100 மில்லியன் பயணிகளைக் கையாளும் திறன் கொண்டதாக இருக்கும்** .*

விமான நிலையத்தின் இருப்பிடம் தமிழ்நாட்டின் மேற்குப் பகுதிகளில், குறிப்பாக ஸ்ரீபெரும்புதூர் மற்றும் ஓசூர் போன்ற வளர்ந்து வரும் மையங்களில் தொழில்துறை வளர்ச்சியை அதிகரிக்கும் நோக்கம் கொண்டது. பயணிகள் மற்றும் சரக்குகள் இரண்டிற்கும் தடையற்ற போக்குவரத்தை உறுதி செய்யும் வகையில், தற்போதுள்ள சென்னை மெட்ரோ நெட்வொர்க்குடன் இணைக்க திட்டமிடப்பட்ட மெட்ரோ ரயில் இணைப்பையும் இந்த திட்டம் உள்ளடக்கியது.

தனிப்பட்ட வெற்றிக் கதைகள் மற்றும் சான்றுகள்

புள்ளிவிவரங்களுக்கு அப்பால், தமிழ்நாட்டின் தொழில்துறை மறுமலர்ச்சியின் உண்மையான கதை, அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் புதிய பொருளாதார வாய்ப்புகளால் பயனடைந்த தனிநபர்களின் வாழ்க்கை மூலம் செழுமையடைகிறது.

- ***நித்யா (திருச்சிராப்பள்ளி):** பெண்கள் தலைமையிலான தொழில் முனைவோரான நித்யா, அரசாங்கப் பயிற்சித் திட்டத்தின் மூலம் சொந்தமாகத் தொழில் தொடங்க பயிற்சி மற்றும் ஆதரவை பெற்றார். அவரும் அவரது சுயஉதவிக்குழுவைச் சேர்ந்த மூன்று பெண்களும், இப்போது வெற்றிகரமான கட்டுமானத் தொழிலை நடத்தி வருகின்றனர், அவர்களின் கிராமத்தில் உள்ள மற்ற பெண்களுக்கு வேலைகளை வழங்குகிறார்கள்.*

- ***முருகன் (கடலூர்):** மொபைல் பழுதுபார்க்கும் தொழில்முனைவோரான முருகன், MSME திறன் மேம்பாட்டுப் படிப்பிலிருந்து பயனடைந்தார். இந்தப் பயிற்சியைப் பயன்படுத்தி அவர் தனது சொந்த சேவை மையத்தைத் திறந்து, சுயதொழில் செய்து, நிலையான வருமானத்தைப் பெற்று, அரசாங்க ஆதரவு எவ்வாறு தொழில்முனைவோரை வளர்க்க முடியும் என்பதைக் காட்டினார்.*

- ***சுந்தர் (கோயம்புத்தூர்):** ஒரு ஜவுளி உற்பத்தியாளராக, சுந்தர் அரசாங்க ஊக்கத்தொகையுடன், மேம்பட்ட இயந்திரங்களுடன் தனது பிரிவை நவீனமயமாக்க முடிந்தது, அவரது போட்டித்தன்மையை மேம்படுத்தியது மற்றும் சவாலான சந்தையில் தனது வணிகத்தை நிலைநிறுத்தியது.*

- ***லட்சுமி (வின்ஃபாஸ்ட் தொழிலாளி):** தூத்துக்குடியில் உள்ள வின்ஃபாஸ்ட் திட்டத்தின் நேரடி பயனாளியான லட்சுமி, உயர் தொழில்நுட்ப மின்சார வாகன அசெம்பிளி வரிசையில் பணிபுரிய சிறப்பு திறன் பயிற்சி பெற்றார். நவீன உற்பத்தி சூழலுக்கு அவர் மாறியிருப்பது, எதிர்காலத்திற்குத் தயாராக உள்ள, உயர் திறன் பொருளாதாரத்தை நோக்கிய மாநிலத்தின் வெற்றிகரமான நகர்வைக் குறிக்கிறது.*

முதல்வன் " திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற மாணவர்கள் தூத்துக்குடியில் உள்ள வின்ஃபாஸ்ட் கார் தொழிற்சாலையில் வேலை வாய்ப்பைப் பெற்றனர்.

"திராவிட மாதிரி 2.0"

தமிழ்நாட்டின் பொருளாதார வெற்றிக்கு சமூக நீதியையும் தொழில்துறை நவீனமயமாக்கலையும் இணைக்கும் ***"திராவிட மாதிரி 2.0" துணைபுரிகிறது. இந்த அணுகுமுறை பொருளாதார வளர்ச்சி உள்ளடக்கியதாகவும், சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் பயனளிப்பதாகவும் இருப்பதை உறுதி செய்கிறது. தொழில்துறை வலிமையுடன் சேர்ந்து, சமூக முன்னேற்றத்திற்கான இந்த அர்ப்பணிப்பு, மாநிலத்திற்கு குறிப்பிடத்தக்க அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.***

2024-25 ஆம் ஆண்டில் மாநிலத்தின் 11.19% உண்மையான பொருளாதார வளர்ச்சி விகிதம் - பதினான்கு ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு - நாடு முழுவதும் பாராட்டப்பட்டது. நிதி ஆயோக் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கி தமிழ்நாட்டை அதன் நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரு தேசிய மாதிரியாக அங்கீகரித்துள்ளன. மாநிலத்தின் நிலையான செயல்திறன் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட, மீள்தன்மை கொண்ட பொருளாதாரம் மற்ற இந்திய மாநிலங்கள் பின்பற்ற ஒரு புதிய அளவுகோலை அமைத்துள்ளது .

எதிர்காலக் கண்ணோட்டமும் மீதமுள்ள சவால்களும்

இந்த வலுவான செயல்திறன் இருந்தபோதிலும், தமிழ்நாட்டின் தொழில்துறை நிலப்பரப்பு இன்னும் சில சவால்களை எதிர்கொள்கிறது. ***ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக*** , உலகளாவிய சந்தை ஏற்ற இறக்கங்கள் மற்றும் புவிசார் அரசியல் பதட்டங்களுக்கு இது பாதிக்கப்படக்கூடியதாகவே உள்ளது. கூடுதலாக, ஒட்டுமொத்த வளர்ச்சி அதிகமாக இருந்தாலும், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் தொழில் 4.0 இன் தேவைகளுக்கு ஏற்ப அதன் பணியாளர்களை சீரமைக்க ***திறன் இடைவெளிகளை மாநிலம் தொடர்ந்து நிவர்த்தி செய்ய வேண்டும்*** . 2030 ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக மாற வேண்டும் என்ற அரசாங்கத்தின் தொலைநோக்கு, புதுமைகளை வளர்க்கவும், சூரிய உதயத் துறைகளில் மேலும் முதலீட்டை ஈர்க்கவும் முயலும் தமிழ்நாடு உலகளாவிய தொடக்க உச்சி மாநாடு 2025 போன்ற முயற்சிகள் மூலம் இந்தப் பிரச்சினைகளை நேரடியாகச் சமாளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை நோக்கிய பாதையில்

2021 முதல் 2025 வரையிலான காலம் தமிழ்நாட்டின் தொழில்துறைக்கு ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் சகாப்தத்தைக் குறிக்கிறது. நிலையான, தொழில்நுட்பம் சார்ந்த மற்றும் பிராந்திய உள்ளடக்கிய உத்தியை ஏற்றுக்கொள்வதன் மூலம், திமுக அரசு பெரிய அளவிலான உள்நாட்டு மற்றும் உலகளாவிய முதலீடுகளை ஈர்ப்பதில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளது. தெற்கில் புதிய மின்சார வாகனக் குழுக்கள் முதல் வடக்கில் மேம்பட்ட மின்னணு மையங்கள் வரை இந்த அடித்தள சீர்திருத்தங்களும் செயல்படுத்தப்பட்ட திட்டங்களும், ***2030 ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற லட்சிய இலக்கை அடைய தமிழ்நாட்டை உறுதியாகப் பாதையில் கொண்டு சென்றன*** .

குறிப்புகள்

- *Tamil Nadu Industrial Policy 2021, Government of Tamil Nadu.*
- *Ministry of Statistics and Programme Implementation (MoSPI), Government of India.*
- *NITI Aayog, Government of India.*
- *Reserve Bank of India (RBI) reports on state economies.*
- *Research articles and reports from think tanks on Tamil Nadu's economic development.*
- *Tamil Nadu's Growth Highest In India At 11.19% | First Double-digit Growth In 14 Years, Here's How: Tamil Nadu's economic growth analysis.*